
ஆர். சண்முகசுந்தரம்

சிற்பி பாலசுப்பிரமணியம்

இந்திய

இலக்கியச்

சிற்பிகள்



ஆர். சண்முகசுந்தரம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு, நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து, அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் – கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம். புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

ஆர். சண்முகசுந்தரம்

சிற்பி பாலசுப்பிரமணியம்

சாகித்திய அக்காதெமி

R. SHANMUGASUNDARAM - Monograph in Tamil by **Sirpi Balasubramaniam**, Sahitya Akademi, New Delhi, 2000. Rs. **25**.

முதல் வெளியீடு, 2000
ISBN 81-260-0992-6

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்:
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

<u>விற்பனை:</u>

'ஸ்வாதி' மந்திர் சாலை, **புதுதில்லி** - 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம், டாக்டர். அம்பேத்கார் வீதி,
பெங்களூர் - 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ அஞ்சல்,
தரமணி, **சென்னை** - 600 113.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை, **கல்கத்தா** - 700 053.

172, சாரதா சினிமா பில்டிங்,
தாதர், **மும்பய்** - 400 014.

விலை: ரூ 25.

Type Setting by: **Ekalaivan Pathippakam,** Chennai - 41.
Printed at:

பொருளடக்கம்

1. கொங்கு மண்ணின் எழுத்துக் கலைஞர்

நிலம் வாழ்வியலை நிர்ணயம் செய்கிற களம். தட்ப வெப்பமும், சூழலும், நீர்வளமும் செடிகொடிகளின் வளர்ச்சியைத் தீர்மானிப்பது போன்றே மனிதர்களின் தொழில், சமூக உறவு, பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் அனைத்தையும் தீர்மானிக்கின்றன. இந்தப் பேருண்மையை மனம் கொண்டதனாலும், இனம் கண்டதனாலும் தான் தமிழின மூதாதையர் நிலத்தை முதற்பொருள் என்றும், அதனிடம் தோற்றம் கொள்ளும் உயிரினங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் கருப்பொருள் என்றும் அடையாளம் கண்டனர்

மண்ணும் மக்களும் பற்றிய இந்த ஆதாரமான கருத்தியலைத் தம் புதினங்களில் இயல்பாக, எளிமைக்கே உரிய இனிமையோடும் அழகோடும் பதிவு செய்த இலக்கியக் கலைஞர் ஆர் சண்முகசுந்தரம்.

வட்டாரப் புதினங்கள்

தமிழில் வட்டாரப் புதினங்கள் என்ற வகைமையை முதன்முதலாகச் செழுமையோடு படைத்துத் தந்த பெருமை அவருக்கு உண்டு.

> "அவருடைய இலக்கிய நினைப்புகள் வாழ்க்கையில் இருந்து, வாழ்க்கை அனுபவத்திலிருந்து பிறந்தவை புஸ்தகங்களிலிருந்து பிறந்தவை அல்ல ஒரு **Robust Common Sense** என்பார்களே அது அவருக்கு அதிகம். அதை வைத்து அவரால் பல கலாபூர்வ மான, அறிவுப் பூர்வமான விஷயங்களை அளவிட முடிந்தது."

என்று தமிழ்த் திறனாய்வின் மூலம் 'அதிர்ச்சி வைத்தியம்' செய்த க.நா. சுப்பிரமணியம் பாராட்டிக் கூறியுள்ளார். **(இலக்கியச் சாதனையாளர்கள், ப.59)**

மெருகேற்றிச் சொல்வதைக் காட்டிலும் நாட்டுப்புற வாழ்வை நடப்பியலாக உருவேற்றிச் சொல்லுவதில்தான் ஆர். சண்முகசுந்தரம் அக்கறை காட்டினார். அதுவே அவருடைய தனித்தன்மையாகத் திகழ்ந்தது. இதற்குக் காரணம் நாகரிகம் அலைபாய்கிற நகரத்தில் வாழ்கின்ற சூழல் ஏற்பட்ட போதும் அவர் பிறந்த கொங்கு நாட்டுக் குக்கிராமமான கீரனூர் அவருக்குள் எப்போதும் நிலை கொண்டிருந்ததுதான்.

கொங்கு நாட்டுப்புறம்

சார்ந்ததன் வண்ணமாகும் மனித இயல்பை வென்று தன் உயிரின் சாரமாகக் கருதிய கிராமத்துப் பண்புகளுக்கு உறைவிடமாக வாழ்ந்தமை, ஆர். சண்முகசுந்தரத்தின் எழுத்துக்கு நிறமும் பொலிவும் சேர்த்திருக்கின்றது.

தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு, சேலம் மாவட்டங்களும், திண்டுக்கல், திருச்சி மாவட்டங்களின் சில பகுதிகளும் சேர்ந்த வட்டாரத்துக்குக் கொங்கு நாடு என்று பெயர். கொங்கு நாட்டில் கால்நடைகளுக்குப் புகழ்பெற்ற காங்கயத்துக்கு அருகில் (அன்றைய கோவை மாவட்டம் தாராபுரம் வட்டத்தைச் சேர்ந்ததாக) இருப்பது கீரனூர் என்ற சிற்றூர். அணைக்கட்டுகள் தரும் நீர்ப்பாசனம் இல்லாதிருந்த அந்த நாளில் மழையை எதிர்பார்த்துச் செய்யப்படும் உழவுத் தொழிலும், கைத்தறித் தொழிலிலும் தான் பொருளாதாரப் பின்புலமாக இருந்தன.

சங்க காலத்திலிருந்தே வழங்கி வந்த கீரன் என்ற பெயரோடு ஏதோ ஒருவகையில் கொங்கு நாட்டுக்குத் தொடர்பு உண்டு போலும். இந்தக் கீரனூர் தவிர வேறு கீரனூரும் கொங்குப் பகுதியில் உண்டு. எனினும் பழம் பெருமைகளுக்கு எவ்வகையிலும் சுவடுகள் காணமுடியாத இந்தக் கீரனூர், காங்கயம் - சென்னிமலை சாலையில் நாலுரோடு என்ற இடத்துக்குப் பக்கத்தில் உள்ளது.

'சட்டி சுட்டது' நாவலில் ஆர். சண்முகசுந்தரம் அறிமுகப்படுத்தும் 'ஒரத்துப்பாளையம்' கிராமம் கீரனூரையே நினைவுக்குக் கொண்டு வருகிறது:

> ''தாராபுரம் தாலுகாவின் வடக்கெல்லையில் நொய்யல் ஆற்று விளிம்பில் ஒதுங்கிக் கிடந்தது ஒரத்துப்பாளையம். யாரும் அந்த சிற்றூரை ஒதுக்கி வைக்கவில்லை சிலா சாசனங்கள், செப்பேடுகள்,

கீர்த்திமிகு கல்வெட்டுக்கள் ஒன்றும் இல்லையே என்று அங்கே உள்ளவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கோயில் எனப் பெயருக்கு ஏதாவது நிர்மாணமாகி இருந்தால் தல புராணமாவது தோன்றி இருக்கும். பிள்ளையார் கோவில்கூட ஒரு காட்டுத் தூரத்துக்கு அப்பால் ஆற்றங்கரையோரம் முடங்கிக் கிடந்தது! ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்!' என்று பாடிய புலவனுக்காக நொய்யல் மெள்ள அருகினில் நடைபோடுகிறது போலும்!" **(சட்டி சுட்டது – ப.24)**

இவ்வளவு எளிய சிற்றூரில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த இரத்தினாசல முதலியார், ஜானகி அம்மாள் தம்பதிகளுக்கு மூத்தமகனாக 1917-ம் ஆண்டில் சண்முகசுந்தரம் பிறந்தார். அவருக்குத் திருஞானசம்பந்தம் என்னும் ஒரே ஒரு சகோதரர்தான் உடன் பிறந்தவர்.

வாழ்க்கைக் குறிப்பு

மழலைப் பருவத்திலேயே தாயாரை இழந்துவிட்ட இந்தச் சகோதரர்களைத் தாயாக இருந்து வளர்த்தவர் அவர்களுடைய பாட்டியார் ஆவார். பாட்டி ஊட்டிய பழங்கதைகள் தந்த பயன் குறித்துச் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ள கருத்து சிந்தனைக்கு உரியது:

> "பாட்டிக்குத் தெய்வபக்தி அதிகம். பாட்டியிடம் கேட்ட புராணக் கதைகளும், நீதிக் கதைகளும், வெளியே புராணப் பிரசங்கங்களும் என்னுள் ஆழப்பதிந்தன. பிற்காலத்தில் அந்தக் கதைகள் பெரிதும் பயனளித்தன." **(தீபம் – அக்டோபர், 1970)**

என்று தம் இலக்கிய உணர்வுக்கு உரமூட்டிய பாட்டியாரை நினைவு கூர்ந்துள்ளார் சண்முகசுந்தரம்.

கீரனூரில் பள்ளிப் படிப்பு எளியமுறையில் தொடங்கிய போதிலும், முறையான கல்வியைத் திருப்பூர் தொடக்கப் பள்ளியில் சகோதரர் இருவரும் பயின்றனர். ஐந்தாம் வகுப்புக்குப் பின் கோபியிலும், தொடர்ந்து திருப்பூர் உயர்நிலைப் பள்ளியிலும் சண்முகசுந்தரம் கல்வி பெற்றார். **அத்துடன்** பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. 'பள்ளிப் படிப்பு

முடிந்ததினால் வாழ்க்கைப் படிப்பைச் சீக்கிரத்திலேயே கற்றுக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது' என்று இது குறித்து ஓர் இலக்கியச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ளார் ஆர். சண்முகசுந்தரம்.

பாட்டியாரிடம் புராணக் கதைகள் கேட்ட அனுபவத்தோடு, பெற்றோர்கள் விரும்பிப் படித்த அந்நாளைய நாவலாசிரியர் களான ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார் கதைகளிலும் சண்முகசுந்தரம் ஈடுபாடு கொண்டிருந்தார் பாரதியார் பாடல்களிலும், தாகூர் கவிதைகளிலும் ஆர்வம் வளர்ந்தது. ஓயாமல் இதழ்களையும் நூல்களையும் தேடித் தேடிப் பார்க்கலானார் தன் முயற்சியால் காந்தி, சுதந்திரச் சங்கு, மணிக்கொடி இதழ்களைப் படிக்கும் பயிற்சி ஏற்பட்டது. தமிழகத்தின் புதிய தலைமுறைப் படைப்பாளிகளாக அன்று விளங்கிய பி.எஸ். ராமையா, கு.ப.ரா., ந. பிச்சமூர்த்தி, க.நா.சு., புதுமைப்பித்தன் ஆகியோர் உருவாக்கிக் கொண்டிருந்த 'புதிய அலை' எழுத்தில் மெல்ல மெல்லத் தம்மைக் கரைத்துக் கொள்ள முற்பட்டார் சண்முகசுந்தரம்.

கீரனூர் கிராமத்தில் வசிக்கிறபோதே இந்த நவீன எழுத்துக்களோடு சண்முகசுந்தரத்துக்கு உறவு உருவாகிவிட்டது. கோவையில் மட்டுமே கிடைத்துக் கொண்டிருந்த மணிக்கொடி இதழை வாங்குவதற்காகக் கீரனூரிலிருந்து மிதிவண்டியில் செல்லுவது அவருக்குப் பழக்கமாக இருந்தது. இந்த இளம் வயதிலேயே தேசியப் போராட்ட இயக்கமாக இருந்த காங்கிரசில் ஒரு தொண்டராகவும் அவர் இருந்தார் என அறிகிறோம்.

தம்பி திருஞானசம்பந்தத்துக்குச் சென்னை, 'அனுமான்' வார இதழில் துணை ஆசிரியர் வேலை கிடைத்தது. மனைவியை இழந்த தந்தையார் இரத்தினாசல முதலியாரும், சண்முக சுந்தரமும் சென்னையில் குடியேறினர் சென்னை வாசம் காரணமாக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உள்ளிட்ட தலைவர்களின் உரைகளைக் கேட்கும் வாய்ப்பும், கு.ப.ரா., பிச்சமூர்த்தி, கல்கி, சிட்டி, சி.சு. செல்லப்பா, புதுமைப்பித்தன் முதலிய எழுத்தாளர்களோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பும் சண்முகசுந்தரத்துக்கு ஏற்பட்டன. ஏறத்தாழ இதே காலக் கட்டத்தில் (1936–39) இந்தி மொழியை அவர் விரும்பிக் கற்று, அம்மொழியில் தேர்ச்சியை வளர்த்துக் கொண்டார்

படைப்புக் கலை வளர்கிறது

உள்ளுக்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்த படைப்புத் திறன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வடிகால் தேடியது 1938-ல் மணிக்கொடி இதழுக்குப் 'பாறையருகில்' என்ற சிறுகதையை அனுப்பி வைத்தார். அது அச்சாகி வந்தபோது தமிழ் எழுத்துலகில் ஒரு புதிய நட்சத்திரம் சுடர்விடத் தொடங்கியது.* தொடர்ந்து சிறுகதைகள் எழுதத் தொடங்கிய அவரை நாவல் படைப்பை நோக்கித் திசை திருப்பிய பெருமை கு.ப.ரா.வுக்கு உரியது. அதன் விளைவாக வெளிவந்தது அழியாப் புகழைச் சண்முகசுந்தரத்துக்கு அளித்த 'நாகம்மாள்' நாவல்

இரண்டாம் உலகப்போர் மூண்டதனால் சென்னை நகரை விட்டுச் சண்முகசுந்தரம் சகோதரர்களின் குடும்பமும், தந்தையாரும் கோவையில் குடியேறினார்கள். இரத்தினாசல முதலியார் கோவை இடையர் தெருவில் ஒரு புத்தகக் கடை தொடங்கினார். ஏற்கெனவே இதழியல் துறையில் அனுபவம் பெற்றிருந்த திருஞானசம்பந்தம் பொருளியல் அறிஞர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு 'வசந்தம்' என்னும் மாத இதழைத் தொடங்கினார். சர். ஆர்கே. சண்முகத்தின் இல்லத்தில் மிகச் சிறந்த நூலகம் இருந்தது. அந்த நூலகத்தைச் சண்முகசுந்தரம் முழுமையாகக் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலத்திலும், உலக இலக்கியத்திலும் தம்மைத் தேர்ச்சிப்படுத்திக் கொண்டார்.

இளம் வயதிலேயே சண்முகசுந்தரமும், திருஞான சம்பந்தமும் திருமணம் புரிந்து கொண்டனர். ஈரோடு மாவட்டம் தளாபாளையம் வள்ளியம்மாளைச் சண்முகசுந்தரம் மணம் செய்து கொண்டார். கொடுவாய் ராஜத்தைத் திருஞானசம்பந்தம் துணைவியாக ஏற்றுக் கொண்டார். மகப்பேறு வாய்க்கப் பெறாத சண்முகசுந்தரம் தம் தம்பியின் இரண்டு புதல்வர் களையும், இரண்டு புதல்வியர்களையும் தம் குழந்தைகள் போலவே. வளர்த்து அவர்களுக்கு உரிய கடமைகளைச் செய்தார்.

---

* மணிக்கொடிக் காலம் - நூலில் பி.எஸ் ராமையா 'நாடக முடிவு' என்ற கதைதான் முதலில் வந்தகதை என நினைவு கூர்கிறார் (பார்க்க மூன்றாம் அத்தியாயம்).

புதுமலர் நிலையம்

'வசந்தம்' வரும் காலத்தில் சண்முகசுந்தரம் சகோதரர்களின் குடும்பம் நூல் வாணிகமும், சரக்கு உந்துப் (லாரி) போக்குவரத்தும் நடத்திப் பார்த்து இழப்புக்குள்ளாகி இருந்தது எனவே புதுமலர் நிலையம் என்னும் வெளியீட்டகத்தை தொடங்கி நூல்கள் பலவற்றை வெளியிட்டனர். கல்கியின் **'மூன்று மாதக் கடுங்காவல்'**, ஆர்.கே. சண்முகம் செட்டியாரின் **'சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம் உரை'**, கம்பதாசனின் **'அருணோதயம்'**, சண்முகசுந்தரத்தின் **'நாகம்மாள்'**, **'பனித்துளி'**, **'பூவும் பிஞ்சும்'** ஆகிய நூல்கள் புதுமலர் நிலையத்தின் பெருமைக்குரிய வெளியீடுகள் ஆகும். சண்முகசுந்தரத்தின் சிறுகதைத் தொகுப்பான **'நந்தா விளக்கு'** இப்பதிப்பகத்தின் சிறப்பு நூல் வரிசையில் இடம் பெறத்தக்கது.

இந்தக் காலக்கட்டத்தில் சண்முகசுந்தரமும் அவர் சகோதரரும் நிகழ்த்திய மிகப்பெரிய சாதனைகளுள் ஒன்று - 1944ல் கோவையில் நடத்தப் பெற்ற தமிழ் எழுத்தாளர் முதல் மாநாடு. ஜி.டி. நாயுடு உதவியுடன் அவர் இல்லத்திலேயே கூட்டப்பெற்ற இம்மாநாட்டில் வ.ரா.சிட்டி, நாரண துரைக்கண்ணன் முதலிய தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்கள் பங்கு கொண்டனர்.

ஆர். சண்முகசுந்தரம் புனைகதைக் கலையில் மட்டுமல்லாது, அரசியல் கட்டுரைகள் வரைவதிலும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். 'நவசக்தி', 'தினசரி' ஆகிய நாளிதழ்களிலும், கோவையியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'சமுதாயம்' இதழிலும் ஏராளமான கட்டுரைகளை எழுதித் தந்தார். அரசியல் கட்டுரைகள் எழுத அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட புனைபெயர் - 'ஆலோலம்'. சில காலம் தம் அரசியல் ஆர்வம் காரணமாக 'ராஜாஜி' என்ற ஓர் இதழுக்கு ஆசிரியராக இருந்து நடத்தியதும் உண்டு. எனினும் சண்முகசுந்தரத்தின் அரசியல் ஈடுபாடு எழுத்து என்ற எல்லைக்குள்ளேயே நின்றது.

வட்டார மொழியைத் திறம்படக் கையாண்டு, கிராமிய வாழ்வின் ஊடும் பாவுமான உணர்வுகளை நுட்பமாகப் படம் பிடித்துச் சண்முகசுந்தரம் எழுதியவை இருபதுக்கு மேற்பட்ட நாவல்கள். நூற்றுக்கு மேற்பட்ட பிறமொழிப் படைப்புக்களை இந்தி மொழிப் பயிற்சியால் தமிழுக்குத் தந்திருக்கின்றார் அரசியல் கட்டுரைகளும், சிறுகதைகளும் அவர் பேனா விலிருந்து மலர்ந்திருக்கின்றன. எனினும் இன்று சிலநாவல்களும்,

சில மொழி பெயர்ப்புகளும் மட்டுமே வாசகர்களின் பார்வைக்குக் கிடைக்கின்றன அவரோடு நெருங்கிப் பழகியவரும், 'ஆர். ஷண்முகசுந்தரத்தின் கொங்கு மணம் கமழும் நாவல்கள்' என்ற நூலின் ஆசிரியருமான டி.சி. ராமசாமி ஒன்பது நாவல்கள்தான் கைக்குக் கிடைத்தன என்று குறிப்பிட்டுள்ளார். (ப.40)

ஆர். சண்முகசுந்தரம் என்னும் படைப்பாளரையும், அவருடைய படைப்புக்களையும் பாராட்டும் வகையில், 1969-ம் ஆண்டு ஜனவரி 14 முதல் 16 வரையில் ஓர் இலக்கியக் கருத்தரங்கு கோவையில் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் கஸ்தூரி சீனிவாசன், அருட்செல்வர் நா. மகாலிங்கம் உள்ளிட்ட தொழிலதிபர்களும், அரசியல் வல்லுநர்களும், தா வே. வீராசாமி, 'சமுதாயம்' சி கோவிந்தன் உள்ளிட்ட சிந்தனையாளர்களும் பங்கு கொண்டனர். **1978 ஜனவரி 23-ம்** நாள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சண்முகசுந்தரம் படைப்புக்கள் பற்றிய ஆய்வரங்கம் நடைபெற்றது. முத்துச்சண்முகம், தி.சு. நடராசன், அறிவுநம்பி, அஜ்மல்கான், நீதிவாணன், இ. முத்தையா, தி. நடராசன் ஆகிய பேராசிரியர்கள் சண்முகசுந்தரம் படைத்த நாகம்மாள், அறுவடை, இதயதாகம், சட்டி சுட்டது நாவல்களின் பன்முகச் சிறப்புக்களைத் திறனாய்ந்தனர்.

ஆர். சண்முகசுந்தரம் மாநிறமேனியர். தூய கதராடையையே எப்போதும் தரித்திருந்தவர் கச்சிதமாக வெட்டப்பட்ட மீசையும், கூரிய மூக்கும் கொண்ட அவரது பார்வை, 'எவரையும் எடைபோடும் நோக்கு' என்று கூறத்தக்கது. எப்போதும் அவர் அருகில் வெற்றிலைத் தட்டு இருக்கும். கணீரென்று பேசும் இயல்பு அவருக்கு உண்டு 'அனுபவ வரிகள் உள்ளோடும்' அவரது அமைதியான முகத்தைப் பார்த்தால் 'கொங்கு மாவட்டத்தில் ஏதோ ஒரு சிற்றூரில் வாழும் ஓர் எளிய விவசாயி' போலவே தோற்றம் தரும் என்பார் சு. அரங்கராசன். **(தீபம் – அக்டோபர், 1970)**

நெடுங்காலம் கோவை நகரிலேயே வாழ்ந்து வந்த சண்முகசுந்தரம் ஆஸ்துமா நோயால் துன்புற்றார். வறுமை வசப்பட்ட போதும் பெருமை குன்றாமல் வாழ்ந்தார் கடைசிக் கால வாழ்வில் ஏழெட்டு ஆண்டுகள் அவர் எழுத்துப் பணியில் ஈடுபடவில்லை.

1977-ம் ஆண்டு தம் அறுபதாம் வயதில் ஆஸ்துமா நோய் காரணமாக ஆர் சண்முகசுந்தரம் மறைந்தார்.

மனித அனுபவச் செழுமை

இலக்கியம் என்ற எல்லையையும் கடந்து மனித அனுபவம் என்னும் கனிவைத் தம் படைப்புக்களின் சாரமாகத் தந்தவர் ஆர். சண்முகசுந்தரம். ஆயினும் தம் எழுத்துக்களைக் குறித்து எவ்விதச் செயற்கையான செருக்கும் அவருக்கு ஏற்படவில்லை.

> "நாமும் தான் எழுதிப் பார்ப்போமே என்ற விளையாட்டாகத் தொடங்கியது இன்று தொழிலாகவே போயிற்று. இதுதான் உண்மை. மற்றபடி இந்த உலகத்தையே உய்விக்கலாம் என்றோ, உயிர்ப்பிக்கலாம் என்றோ இலட்சியக் கோட்பாடுகளுடன் நான் எழுதத் தொடங்க வில்லை."

என்று தெரிவித்திருக்கிறார் எனினும் இலக்கியக் கலையின் நுட்பங்களையும், நோக்கங்களையும் மிகத் தெளிவாக அவர் உள்வாங்கியிருந்த்ர்ர் சு. அரங்கராசனுடன் நிகழ்ந்த இலக்கியச் சந்திப்பில் அதனை மிகக் கூர்மையாக வெளிப்படுத்தி இருக்கின்றார்:

> "எழுத எழுதத்தான் மனிதனின் ஆத்மா வெளிப் படும். (கு.ப.ரா.வின்) இந்தச் சொற்கள் நீண்ட நாட்கள் என்னை இயக்கிக் கொண்டிருந்தன. அதன்பின் எழுத எழுத எழுத்திலிருக்கும் சக்தியைப் புரிந்து கொண்டேன் அந்த எழுத்திலும் ஏதோ செய்யலாம், செய்ய முடியும் என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது"

என்று குறிப்பிட்டிருக்கிறார். **(தீபம் – அக்டோபர், 1970)**

பார்த்து மனப் பதிவு செய்து கொள்ளுகிற பக்குவம் சண்முகசுந்தரத்துக்கு கைவந்த கலையாக இருந்தது. வருணனைகளை மிக இயல்பாகச் செய்யவும், பாத்திரங்களை உயிர்ப்போடு படைக்கவும் அவரால் முடிந்ததற்கு இதுதான் காரணம்.

'மன நிழல்' நாவலில் வருகிற கதாநாயகன் பின்வருமாறு கூறுவான்:

> "காங்கயத்திலிருந்து கீரனூரை நோக்கி நடையைக் கட்டிக் காடுகளை அளந்து கொண்டிருந்தேன்.

> சுமார் மூன்று மைல் தூரத்திற்குள் எத்தனை காடுகள் உண்டு என்று தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் சொல்லிவிடுவேன். சின்ன வயசிலிருந்து அதில் ஒரு ஆனந்தம் - காடுகளை அளப்பதில்தான் - எண்ணிக்கொண்டே நடப்பதில் தான்..." (ப. 6)

இந்தப் பாத்திரத்தின் பண்புதான் சண்முகசுந்தரத்திடமும் மேலோங்கி இருந்தது. தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தை உணர்வுகளால் அளப்பது அவருக்குச் சாத்தியமாக இருந்தது. அதனால்தான் மண்ணையும், மக்களையும் கச்சிதமாக வார்த்துக் கொடுக்கும் கலையில் அவர் வல்லவராக இருந்தார். கொங்கு மண்ணின் படைப்புக் கலைஞர் அவர்.

தன் நண்பர் டி.சி. ராமசாமியிடம் ஒருசமயம் அவர் சொன்னார்:

> "வறுமைய நான் விரும்பி ஏற்றுக் கொண்டேன். நான் போய்விட்டாலும் என் எழுத்துக்கள் நிற்க வேண்டும்."

ஒவ்வொரு பண்பட்ட எழுத்தாளனுக்கும் இருக்கிற அணையாத்தாகம் இது. இந்த ஆதங்கத்துக்கு இடமே இல்லாமல் இலக்கிய முற்றத்தில் பளிச்சிடுகின்றன சண்முகசுந்தரம் தீட்டிவிட்டுப் போன வாழ்க்கைக் கோலங்கள்.

□

2. நாகம்மாள்

"மணிக்கொடி எழுத்தாளர்களில் சண்முகசுந்தரம் தான் முதன்முதலில் நாவல் எழுதியவர்."

என்று 'தமிழ் நாவல்-நூறாண்டு வளர்ச்சியும் வரலாறும்' என்னும் நூலை எழுதிய சிட்டியும், சிவபாதசுந்தரமும் பெருமிதத்தோடு குறிப்பிடுகின்றனர். (ப. 175)

அந்த நாவல்தான் 1942-ல் வெளிவந்த புகழ்பெற்ற படைப்பான 'நாகம்மாள்.'*

வட்டார நாவல்கள்

இந்நாவலின் இரண்டாம் பதிப்புக்கு முன்னுரை எழுதிய க.நா. சுப்பிரமணியம் தெளிவுபடுத்தும் ஒரு செய்தி குறிப்பிடத்தக்கது:

> "தமிழ் நாவல்களில் மட்டுமல்ல; இந்திய நாவல்களிலும் சண்முகசுந்தரத்தின் நாகம்மாளுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. கிராமிய சூழ்நிலை களை முழுவதும் உபயோகித்து பிராந்திய நாவல் என்கிற துறையை முதன்முதலாக இந்தியாவில் உருவாக்கியவர் அவர்தான் என்று சொல்லலாம்." (ப. 12)

வட்டாரம் என்று எல்லை கோலுவதை யூடோரா வெல்ட்டி **(Eydora Welty)** தம்முடைய **(Critical approacheds to Fiction - Ed. New York. 1968)** 'புனைகதையில் இடம்' என்ற கட்டுரையில் மறுதலித்தபோதிலும், அவரைப் பின்பற்றிச் சில எழுத்தாளர்கள் ஏற்புடையதல்ல என்று கருதிய போதிலும், இலக்கியத்தில் ஒரு வகைமையாக அது நிலைபெற்று விட்டதாகவே கூறமுடியும்.

'தமிழில் வட்டார நாவல்கள்' குறித்து ஆய்வு நோக்கோடு திறம்பட எழுதியுள்ள நூலில் சு. சண்முகசுந்தரம்,

---

* நாகம்மாள் வெளிவந்தது 1941-ல் என்பார் மு. ஜான்சிராணி

> "மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டுள்ளது போலவே மொழி பேசும் எல்லைக்குள்ளே ஒரு குறிப்பிட்ட பொருளியல், கருத்தியல் பொதுவாகக் காணப்படும் பகுதிகளை வட்டாரம் எனலாம். அங்குள்ள படைப்பாளிகளாலோ, அதைப் புரிந்த படைப்பாளிகளாலோ படைக்கப்படும் நாவல்களே வட்டார நாவல்கள்."

என்று வகைமைப்படுத்துகின்றார் (ப. 1)

இந்தியச் சமுதாயத்தில் பன்மைத் தன்மை வாய்ந்த மொழி, சமயம், பழக்க வழக்கங்கள் உருவாவதற்கு நிலமும், நிலம் சார்ந்த வட்டாரமும் காரணமாகின்றன. அவற்றின் தனித்தன்மை களையும், அங்கு வாழும் மாந்தரின் சூழ்நிலை உருவாக்கிய வாழ்நிலைகளையும், அவர்களுக்கே உரிய மொழிச் சுவையுடன் பின்னிக் கட்டமைப்பதே வட்டார இலக்கியமாகும்.

அனைத்து மொழிகளிலும் வட்டார நாவல்கள் தோன்றியுள்ளன. தமிழிலும் கிராமங்களை நோக்கி சு.வே. குருசாமி சர்மாவின் 'பிரேம கலாவத்யம்' **(1983),** கே.எஸ். வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்' **(1927)** ஆகிய நாவல்கள் முன்னோடிகளாக உருவாயின. எனினும் முழுக்க முழுக்கக் கிராமியச் சூழலைப் பிரதிபலித்த முதல் நாவல் சங்கரராமின் 'மண்ணாசை' **(1940)** என்று 'தமிழ் நாவல்' ஆசிரியர்கள் கருத்துரைத்துள்ளனர். (ப. 173)

ஆயினும் அந்நூலாசிரியர்களே தங்கள் மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்தது போன்ற ஒரு கருத்தை அதே நூலில் முன்வைத்துள்ளனர்.

> "கிராமச் சூழ்நிலை பற்றி ஏற்கெனவே சங்கரராம் எழுதியிருந்தார் என்றாலும், ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மண்வாசனை வீசும் நாவல் என்று கருதும்போது, நாகம்மாள், ஒரு நல்ல முன் மாதிரியாகத் தோன்றுகிறது"

என்பது அவர்கள் வாக்குமூலம் (ப. 174)

புதிய தமிழ் இலக்கியத்துக்கு வளமும் வனப்பும் சேர்த்த க.நா சுப்பிரமணியம், கு.ப.ரா. சுந்தர ராமசாமி, கி. ராஜநாராயணன், வல்லிக்கண்ணன், தி.க.சி., டி.கே துரைசாமி,

சி.சு செல்லப்பா முதலிய அனைவரும் ஒருமனதாக இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர்.

> "இந்த நாவலை நான் ஒரு இதிகாசமாகவே (**Minor Classic**) கருதுகிறேன் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் தமிழ் நாவல்களில் ஒரு தலைசிறந்த படைப்பாக மதிக்கிறேன்."*

என்று திறனாய்வாளர் தி.க.சி. மதிப்பிடுகின்றார்.

'நாகம்மாள்' படைப்பின் தூண்டுதல்

இந்த நாவலை எழுத நேர்ந்தது எவ்வாறு என்பதை சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார். கிராமிய மணம் கமழும் தம் சிறுகதைகளைப் படித்த கு.ப.ரா. 'நாவல் எழுதுங்களேன்' என்று தந்த ஊக்கம் தான் - ஏற்கெனவே பக்குவப்பட்டிருந்த தமக்குத் தூண்டுதல் அளித்தது என அவர் தெரிவித்துள்ளார். இதனை நாவலின் முதல் பதிப்பு (ஜுன் 1942) முன்னுரையில் கு.ப.ரா. உறுதி செய்துள்ளார்

> "முதன்முதலில் ஸ்ரீசண்முகசுந்தரத்தின் சிறுகதை களைப் படித்தபொழுது அவற்றில் தென்பட்ட கிராமாந்தர வாழ்க்கை அனுபவத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தேன் அவ்வளவு தேர்ச்சி பெற்றவர் குடியான வாழ்க்கையையே ஆதாரமாகக் கொண்ட நவீனம் ஒன்றை எழுதலாம் என்ற கருத்தை அவருக்குத் தெரிவித்தேன்.
>
> இரண்டே மாதத்தில் நாகம்மாள் என்ற சிறுநாவலை எழுதி முடித்துக் கொண்டு வந்து காட்டினார்"

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் மறுக்க முடியாத இடத்தைப் பெற்றுக்கொண்ட இந்த நாவலின் தரம், அதன் ஆசிரியர் பெற்ற அனுபவத்தின் விளைவு என்று சுந்தர ராமசாமி பாராட்டுகின்றார்.

> "சண்முகசுந்தரம் கிராம வாழ்வின் ஒரு நேர்மையான சாட்சி இவருடைய அனுபவங்கள்

---

* தி.க.சி., ஆர். சண்முகசுந்தரத்தின் நாகம்மாள் தமிழ் நாவல்கள், ப 71

தீவிரமானவை. தீவிரம் என்பது ஏனெனில் முன்கூட்டி வகுத்துக் கொண்டிருக்கும் தத்துவங்களுக்கோ, கெட்டி தட்டிப்போன எண்ணங்களுக்கோ, அவல வெற்றி தேடித் தரும் பொருட்டுத் தம் அனுபவங்களின் சிறகுகளை ஒடிக்கும் கயமையின்றி அவற்றை முழுமையாக முன் வைத்திருப்பதால்தான்... நிஜயங்களின் விளைவுகளை அல்ல, நிஜங்களையே இவர் முதன்மைப் படுத்துகிறார். இவரிடத்தில் மிகையில்லை; பிரசார நோக்கமில்லை."

என்கிறார் சுந்தர ராமசாமி. **(சு.ரா. கட்டுரைகள், ப. 90–91)**

நாவலின் கதைக்கரு

கொங்கு நாட்டுச் சிற்றூர்களில் ஒன்றான சிவியார் பாளையத்தில் ஒரு சிறிய குடும்பம். சாதாரண விவசாயியான சின்னப்பன், அவன் மனைவி ராமாயி, சின்னப்பனின் அண்ணி நாகம்மாள், நாகம்மாளின் புதல்வி முத்தாயா ஆகிய நால்வரைக் கொண்ட குடும்பம் அது. நாகம்மாள் விதவை

ஒரு ராணியைப் போல் குடும்பம், விவசாயம் ஆகியவற்றை நாகம்மாள் ஆட்சி செய்துவந்தாள். எனினும் அண்மைக் காலமாக அவ்வூர்ப் போக்கிரியான கெட்டியப்பனிடம் அவளுக்கு ஓர் ஈடுபாடு. அவன் அவளிடம் பாகப்பிரிவினை கேட்கும்படி போதனை செய்கிறான் கெட்டியப்பன் இந்தக் குடும்பத்துக்கு எதிர்க்கட்சியான மணியகாரருக்கு வேண்டியவன்

கெட்டியப்பன் போதனை நாகம்மாளை மாற்றிவிடுகிறது. நாகம்மாளைக் கருவியாக்கி, அவள் குடும்பத்தைச் சின்னா பின்னப்படுத்தி, நிலத்தையும் கைப்பற்றும் எதிரிகளின் சூழ்ச்சிக்குத் தன்னையறியாமல் இரையாகிறாள் நாகம்மாள்

அதன் விளைவாகப் பாகப் பிரிவினை கோருகிறாள் வாக்குத் தடிக்கிற நேரத்தில் அங்கு வந்த கெட்டியப்பன் கைத்தடியால் 'மடேர்' என்று ஓங்கி சின்னப்பன் தலையில் அடித்து விடுகிறான் சின்னப்பன் கீழே விழுந்து உயிர் விடுகிறான் நாகம்மாள் மௌனமாகிறாள்

இந்த அளவில் முடிந்து விடுகிறது கதை ஆனால் மறக்க முடியாத நாகம்மாள் பாத்திரப் படைப்பும், இயல்பான கதை சொல்லும் பாங்கும், கிராமியச் சூழலும் பேச்சுத் தமிழும் கதைப்

போக்கில் எழும் மண்வாசனையும் இந்நாவலைக் கச்சிதமான படைப்பாக உருமாற்றி விடுகின்றன.

நாவலின் நுட்பங்கள்

நாவலின் பொருண்மை குறித்துக் க.நா. சுப்பிரமணியம் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் **(1987)** கூறும் செய்தி முக்கியமானது:

> "நாற்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் இந்தியாவைத் துண்டாடும் பிரச்சினை, இந்தியாவை இரண்டு தேசங்களாக்கும் பிரச்சினை விசுவரூபம் எடுத்துக் கொண்டிருந்தது என்பது இன்றைய நாகம்மாள் வாசகர்களுக்கு நினைவிருக்க நியாயமில்லை சொத்துக்களைப் பிரிப்பதுபோல தேசத்தைப் பிரிக்க வேண்டும் என்று பிரிட்டிஷார் தீர்மானித்தது, ஜனங்களில் பெரும்பான்மை யோருக்குப் பிடிக்காவிட்டாலும் அவசியமாகிப் போய்விட்டது. பிற்காலத்துச் சரித்திராசிரியர்கள், அரசியல் வாதிகள் இந்தியாவைத் துண்டாடும் காரியத்தில் மிக முனைப்பாக நின்று காரியத்தைச் சாதித்தது, லேடி மவுண்ட் பேட்டன்தான் என்று அரசல் பொருசலாகச் சரித்திரத்தை எழுதி இருந்தார்கள். நாகம்மாளுக்கும் லேடி மவுண்ட் பேட்டனுக்கும் வெகுதூரம் இருப்பதுபோல் தோன்றினாலும், துண்டாடுகிற தீர்மானத்தில் இருவரும் ஒன்றுதான்."

> "உருது மொழியில், ஹிந்தி மொழியில், பஞ்சாபியில், ஆங்கிலத்தில் பல 'பார்ட்டிஷன்' **(Partition)** நாவல்கள் வந்துவிட்டன. இவைகளில் பலவும், இந்தியா-பாகிஸ்தானில் 1947-48ல் ஏற்பட்ட சம்பவங்களை வைத்து எழுதப்பட்டவை. ஓரளவிற்கு அவற்றிற்கு முக்கியம் உண்டு என்றாலும், இந்தியாவைத் துண்டாடுவது பற்றி மறைமுகமாகவே சொல்லுகிற, **1947**-க்கு முன் எழுதப்பட்ட இரண்டு நாவல்கள் கலைத்திறத்தில் மிகவும் உயர்ந்து நின்றன ஒன்று, காளிந்தி சரண் பாணிக்ரஹி என்பவர் ஒரியாவில் எழுதிய மட்டிர்

> மனுஷே (மண்ணின் மனிதர்கள்) அதற்கு முன் எழுதப்பட்டது ஷண்முகசுந்தரத்தின் நாகம்மாள்."

நாட்டுப் பிரிவினையின் அவலப் பின்புலம் போன்றே வீட்டுப் பிரிவினையும் விபரீதங்களை விளைவிப்பதை 'நாகம்மாள்' புலப்படுத்துகின்றது.

இன்னொரு கோணத்தில் நின்று சுந்தர ராமசாமி, கிராமத்தின் இதயத்துடிப்பாக இந்நாவலைக் காண்கின்றார். **(சுந்தர ராமசாமி கட்டுரைகள், ப. 91)** கரடு முரடான தடங்களில் - இட்டேரிகளில் சென்று கிராமத்தை அடைந்து - அதன் புறத்தோற்றம் கடந்து பாத்திரங்களை நெருங்கும்போது ஏற்படும் அனுபவத்தை அவர் கூறுகின்றார்:

> ''இந்த இயக்கத்தைப் பின்தொடர்ந்து நாம் செல்லும்போது உலகின் முன் தங்களைக் காட்டிக் கொள்ள இவர்கள் அணிந்து கொண்டிருக்கும் உறைகள் கழன்று நிஜசொரூபங்கள் வெளியாகின்றன அவர்களுடைய குரோதமும், பொறாமையில் சண்டையிட்டுப் பிரிதலும், கோள் சொல்லிப் பிளவுபடுத்தும் குணங்களும் அனுபவமாகின்றன வேற்றுமை ஏற்படுத்திக் கொண்டிருந்த புற உலகச் சின்னங்கள் படிப்படியாகக் கரைய, பின் நகர, நமக்கும் அவர்களுக்குமான தூரங்கள் சுருங்க, மன உலகில் இவர்களை மிக நெருக்கமான தாயாதிகளாக உணர்கிறோம்."

நாகம்மாள் என்ற பாத்திரம் சமூக நிர்ப்பந்தங்களோடு மோதுகிற தனிமனித எதிர்பார்ப்பின் வடிவம் எனச் சுந்தர ராமசாமி கருதுகின்றார். தன் தோட்டம், தன் கணவன், தன் வாழ்வு என்று நிமிர்ந்து நடக்க அவள் முற்படுகையில், மானம் போவதாகச் சின்னப்பன் நினைப்பது உண்மையில் மானத்தைக் கருதியா? சொத்து பறிபோவது கருதியா? கெட்டியப்பனுக்குத் தேவை நாகம்மாளா? சொத்தா? நாகம்மாள் விரும்புவது கெட்டியப்பனையா? அல்லது சுதந்திர வாழ்வையா? - இவ்வாறு வினாக்கள் எழுப்பும் சுந்தர ராமசாமி 'மன நிலைகளில் எந்தப் பொய்யிலும் சரிந்து விட மறுத்துக் கதாபாத்திரங்களை உண்மை எனும் கத்தியின் விளிம்பு வழியாக' நாவலின் ஆசிரியர் நடக்க வைப்பதாகச் சுட்டிக் காட்டுகிறார் நாவலின் நுட்பம் இது எனப் பாராட்டுகின்றார்

இயல்பான வருணனை

நாகம்மாள் நாவலில் சூழலுக்கேற்ற இயல்பான வருணனையும், விவரிப்பும் தனித்துவம் பெற்றிருக்கின்றன. வருணனைக்குள்ளும் ஒரு மெல்லிய நகைச்சுவை, இறகு பறந்து வருவதுபோல வந்து அமர்ந்து கொள்கிறது. சிவியார் பாளையத்தில் மாரியம்மன் பண்டிகை ஆரம்பமாவதைச் சொல்லும் வருணனைதான் எத்தனை அழகு!

> "அன்று இரவு ஏழு மணிக்குத் தப்பட்டைச் சத்தம் 'டிம் டிம்' என்று 'தெரப்பாக' எழுந்தது. -------- அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் சாப்பாட்டைப் பாதியிலேயே வைத்து விட்டுக் குழந்தைகள் ஓடிவந்தன. பெரியவர்களும் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பெண்களெல்லாம் மாலையிலே தலைக்குத் தயிர் தேய்த்துக் குளித்து, முகத்துக்கு மஞ்சள் பூசி, மினுமினுப்பாகக் கொண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். வீட்டுக்குள் அடைந்து கிடக்க முடியாமல் அவசரம் அவசரமாகச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தனர். பூவோட்டில் நெருப்பு 'தக தக'வென்று எரிந்து கொண்டிருந்தது. நாச்ச பண்டாரம் விரதம் கலையாமல் பத்துப் பழங்களையும் ஒரு படி பாலையும் குடித்துவிட்டு, புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டு பயபக்தியுடன் சுவாமியை எண்ணெயாலும், தண்ணீராலும், பாலாலும் ஆனந்தமாக அபிஷேகம் செய்து கொண்டிருந்தான்."

இயற்கைக் காட்சிகளையும் உறுத்தல் இல்லாமல் விவரிக்கும் அழகை ஆர். சண்முகசுந்தரம் நாவலில் காணலாம். சொற்களின் எளிமை காரணமாக வருணிக்கப்படும் இடம் இயல்பாக வாசகனுக்குள் குடியேறி விடுகிறது.

> "மடுவுத் தோப்பு என்ற பெயரைக் கேட்டவுடனே அந்தப் பக்கத்திலுள்ள பெரியவர்களும் 'அப்பாடா' என்று வாய்மேல் கை வைப்பார்கள் வாசக நேயர்களுக்காக அந்த இடத்தைப் பற்றி சிறிது வர்ணிக்க வேண்டியிருக்கிறது."

''ஆற்றுக்கப்பால் வெங்கக் கற்காடு; வெகுதூரத்துக்குப் பயிர் பச்சை சாகுபடிக்கே லாயக்கற்று நீண்டு கிடக்கிறது. அதற்கப்புறம் ஊசிப் புல் என்ற ஒருவகைப் புல் படர்ந்திருக்கிறது. சாதாரணமாக அங்கெல்லாம் மழைக்காலத்தில் புல் இன்னும் அடர்த்தியாகத் தளிர்த்து நிற்கும். அப்புற் காட்டிலே மாடுகன்றுகளை மேய விடுவது வழக்கம். அக்காட்டிற்கு அப்பால் கொஞ்ச தூரத்தில் ஒரு அடர்ந்த சோலை. பல ஜாதி மரங்கள் ஒன்றோடொன்று இணைந்து நீண்டு வளர்ந்திருக்கும். அந்த இடம் சதா இருண்டிருக்கும். ஒரு புறம் ஆறு. மறுபுறத்தில் விஸ்தாரமான மேட்டாங்காடு. எதிராகப் பின் இருபுறங்களிலும் சிறுசிறு குன்றுகள். இப்படியாக இந்த மடுவுத் தோப்பு மனிதப் போக்குவரத்துக்கே அதிகம் உபயோகப்படாத நிர்மானுஷ்யமான பூமியாக இருந்து வந்தது. யாராவது தப்பித் தவறிப் பண்டம் பாடிகளை விட்ட சிறுவர்கள் கூட உள்ளே செல்ல அஞ்சுவார்கள். இல்லாத பொல்லாத மிருகங்கள் எல்லாம் அங்கு உலாவுவதாகக் கதைகள் உண்டு. இன்னொரு முக்கியமான பயம் அங்கு என்ன வென்றால், கரைக்கு எதிர்ப் புறத்திலுள்ள சுடுகாட்டுப் பேய்களெல்லாம் வாசம் செய்வது அந்த இடத்தில்தான் என்று.''

உயிர்த் துடிப்புள்ள இந்த நடையைத்தான் 'எளிய, இனிய, உணர்ச்சிகரமான தமிழ்நடை' என்றும் 'அழகிய அற்புதமான தமிழ் வசனம்' என்றும் தி.க. சிவசங்கரன் பாராட்டுகின்றார். **(தமிழ் நாவல்கள், 1986 – ப.82)**

நிலத்தை நம்பி எழுந்த கதையாதலால் வேளாண்காட்சிகள் பலவற்றையும் ஆசிரியர் சித்திரிக்கின்றார். பருத்தி எடுப்பதற்காகப் பருத்திக் காட்டிற்கு வந்து நிற்கும் கிராமத்து இளம் பெண்களைப் பற்றி எழுதும்போது சண்முகசுந்தரத்தின் இயற்கையான தமிழ் இறக்கை கட்டிப் பறக்கிறது.

''நாகம்மாளும் ராமாயியும் பருத்திக் காட்டிற்கு வந்து சேர்ந்தபோது மற்ற பெண்களும் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்களில்

முக்கால் வாசிக்கு மேல் இள வயதுடையவர்கள் தான். அவர்கள் புடவைத் தலைப்பை எடுத்து இடுப்பைச் சுற்றி மடி கூட்டியிருந்தார்கள். கரண்டைக் காலுக்கு மேல் தூக்கி, கொசுவம் வைத்திருந்த கொரநாட்டுச் சேலையுடன் நடு நெற்றியில் வாகு எடுத்துச் சிலர் கொண்டை போட்டிருந்தார்கள். இன்னும் சிலர் ஈரக் கூந்தலை உலர்த்துவதற்காகக் கோடாலி முடிச்சுப் போட்டு இருந்தார்கள். அவர்களது மினுமினுப்பான உடம்பையும், கரங்களின் உறுதியையும் பார்க்கப் பார்க்க இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கலா மெனத் தோன்றும். இளமை பூத்து நிற்கும் அங்கவனப்பை அள்ளி எறிவதைப் போல, சும்மா ஒரு குலுங்குக் குலுங்கி குனிந்து பருத்தி எடுக்கும் போதும், நிமிர்ந்து கம்பீரமாக ஒருவரை ஒருவர் பார்க்கும் போதும், கலகலவென்று அவர்கள் பேசும் போதும், சிரிக்கும் போதும், திரும்பும் போதும், கால் மிஞ்சிகள் ஒலிக்க நடக்கும் போதும், செடிகளை ஒதுக்கிவிட்டு அவர்கள் முன்னோக்கிச் செல்லும் போதும், அவர்களுடைய ஒவ்வோர் அசைவிலும் மனதை மகிழ்விக்கும் மாயம் ததும்பி நின்றது."

கிராமத்து மனிதர்கள்

இன்னதென்று அளந்து கூற முடியாத, வியப்பூட்டும் இனிமையினை நெஞ்சுக்குள் கொலுவேற வைத்து விடுகிற ஆற்றல் சண்முகசுந்தரத்திடம் பொதிந்திருந்ததைத் காண முடிகிறது. கிராமத்து மக்களின் பச்சை மனதுக்குள் 'எல்லாம் தெரியும்' என்று காட்டிக் கொள்கிற போக்கு இருப்பதுண்டு. சிக்கல் என்றால் வகை வகையான தீர்வுகளையும், நோய் என்றால் நூற்றுக்கணக்கில் மருத்துவங்களையும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இந்த நாவலில் வரும் சின்னப்பன் மைத்துனன் நோய்வாய்ப் படுகிறான். இந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் சின்னப்பனுக்கு வந்த ஆலோசனைகள்தான் எத்தனை!

"'அடே, எங்கே சின்னப்பா, பத்து நாளாக் காணோம்? உம் மச்சினனுக்குத் தேவலையா? அது என்ன? நரம்புச் சுளுக்குத்தானே? நம்ம சிக்கிரிச்சி

பாளையம் வண்ணாள் மந்திரிப்பதில் சூரனாச்சே, கூட்டி வந்து காட்டிடீங்களா?' என்று தங்கள் அனுதாபத்தையும் பரிகாரத்தையும் பலவிதமாகத் தெரிவித்தார்கள். சின்னப்பன் எல்லாவற்றிற்கும் அப்படியப்படியே பதில் சொல்வதற்குள் அவனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. இவர்கள் எல்லோரையும் விட மாரமுப்பன் தான் வாட்டி வளவெடுத்து விட்டான். 'நரம்புச் சுளுக்காம்! இதுக்குப் படுத்துக் கொள்வதாம்! கொஞ்சம் விளக்கெண்ணெய் போட்டுத் தேய்த்தால் ஓடிவிடுகிறது. இல்லாவிட்டால் வாய்க்காலில் திடுதிடுவென்ற மடைத் தண்ணீர் விழுகையில் உட்கார்ந்து வலிக்கின்ற இடத்தைக் காட்டினால் பறந்துவிடும். அப்படியும் தீரவில்லையானால் ஆத்தாள் பேரைச் சொல்லி பிடி சாம்பலைப் போட்டுட்டு ஒரு மஞ்சள் துணியை எடுத்துக் காணிக்கை முடிந்து வைத்து விட்டு, மேலைக்கு ஒரு ஆடு வெட்டினால் போகுது. இதுதான் எல்லாம் தெரிந்தவர்களுக்குத் கொஞ்சம் தெரியாது என்பார்கள்' என்ற தன் மேதா விலாசம் முழுதும் காட்டிவிட்டான்."

கிராமம் என்ற நுண்ணிய உலகத்துக்குள் **(Micro World)** எழுந்து விழுகிற அலைகளைக் கலைத் தொழில் வல்ல ஓவியனாக வரைந்து காட்டுகின்றார் சண்முகசுந்தரம். நிலம் உற்பத்தி செய்யும் சூழ்ச்சிகளையும் சதிகளையும் நெளிவு சுளிவுகளோடு எடுத்துச் சொல்லும் அதே நேரத்தில் 'ஊருக்கு நல்லது' சொல்லும் குரல்களும் ஒலித்ததைத் தவறாமல் பதிவு செய்கிறார் ஆசிரியர். சூழ்ச்சியில் ஈடுபடும் மணியகாரரின் பெரியப்பா இந்தக் கடமையை முழுமையாக நிறைவேற்று கின்றார் கெட்டியப்பன் என்ற சதிகாரனைக் கூப்பிட்டுப் பேசுகிறார் அந்தப் பெரியவர்:

"கேளடா ராஜா! மலைபோல மண்டிக் கிடந்த கள்ளிகளெல்லாம் மாயமா மறஞ்சுது பாத்தயா? நாம் எத்தனை நாள் கத்தியிலும், அரிவாளிலும் வெட்டித் தள்ளியும், வெட்ட வெட்டக் கொழுத்தது! எப்படிப் பூண்டற்றுப் போச்சுது பார்த்தாயா? கள்ளியை நாசம் பண்ணின

> வெள்ளைப் பூச்சியையும் பாத்திருப்பாய். அது கடுகிலும் சின்னஞ் சிறுசாத்தானே இருந்தது. நம்முடைய கத்தியும், கவையும் முடிக்க முடியாத வேலையை வெகு சுளுவில் அப் பூச்சி முடித்து விட்டது. என்ன கெட்டியப்பா! இன்னைக்கு ஆனையைக் கூடத் தூக்கி அடிக்கலாமென்று உனக்குத் தோணுது. மீசையை முறுக்கி விடறாய்! கையைக் காலைத் தட்டறாய்! வாய்ப் பேச்சு வாயிலிருக்க, கை வைக்க ஆரம்பிக்கிறாய். ஆனா இந்த நல்ல ரத்தம் நொடியிலே மறைஞ்சிடுமப்பா! ஒரு பூச்சி வேண்டாம்; புழு வேண்டாம். சும்மா இருக்க இருக்க மாயமாப் போயிடும்."

சூனியத்தில் ஒலித்த குரலாக இந்த அறிவுரைகள் பாழாய்ப் போகின்றன. ஆனால் எவ்வளவு எதார்த்தமான எடுத்துக் காட்டுடன் ஓர் உண்மை எடுத்துரைக்கப்படுகிறது என்பது நம் கவனத்தில் வந்து ஒட்டிக் கொள்கிறது.

கொங்குத் தமிழ்

கொங்கு மண்ணுக்குரிய தனித்தன்மை வாய்ந்த மொழியை உணர்ச்சியோடு கையாளுகின்றார் சண்முகசுந்தரம். 'கொங்கு நாட்டு மக்களின் கொச்சைப் பேச்சு பாத்திரங்களின் உரையாடலில் விரவிக் கதையின் போக்குக்கு வண்ணம் கொடுக்கிறது' என்று சிட்டியும் சிவபாதசுந்தரமும் இதனைக் குறித்துத் 'தமிழ் நாவல்' நூலில் சான்றளிக்கின்றனர் (ப. 174). 'எதற்காக எழுதுகிறேன்?' என்ற தம் கட்டுரையில் மக்கள் மொழி குறித்துத் தம் கருத்தை ஆர். சண்முகசுந்தரம் தெரிவிக்கின்றார். **(எழுத்து - மே, 1962)**

> "கிராமத்து ஜனங்களில் மூர்ச்சனையையே படம்பிடிக்கப் கருதினேன். அவர்களுடைய பேச்சுக்களைப் பேசும் தமிழிலே எழுதினேன். பாத்திரங்கள் உரையாடல் கொச்சையாக இராமல் செந்தமிழிலா இருக்கும்? ஒரு பகுதி மக்களின் வாழ்வை உண்மையான வாழ்வை நேருக்கு நேராக அனுபவிக்கப் பிற பகுதி மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டாமா? சாரத்தை நீக்கி விட்டுச் சக்கையைத் தந்து என்ன பயன்?"

இவ்வாறு தாம் கையாண்ட பேச்சுத் தமிழுக்கான அவசியத்தை ஆசிரியர் எடுத்து முன் வைக்கின்றார். சண்முகசுந்தரத்தின் படைப்புக் கூறுகளில் மிகவும் வலிமையானது இந்த மக்கள் மொழி. கெட்டியப்பனைத் திருட்டுத் தனமாகச் சந்தித்து விட்டு நாகம்மாள் வீடு திரும்பியபோது, 'யார் அது?' என்று கேட்டான் சின்னப்பன். 'ஏன்...?' என்றபடியே அவள் உள்ளே வந்தபோது, சின்னப்பன் எழுந்து வந்து, 'என் மானம் போகுதே...' என்றான்.

> "மானமும் ஈனமும் போறது ஏனோ? அப்படி ரோசக்காரராருந்தா பிரிச்சு விடுங்களேன்" என்று நாகம்மாள் அதே தொனியில் சொன்னாள்.
>
> எதிர்பாராத இந்தப் பதிலால் திகைப்படைந்தாலும் சட்டென, "உங்களை யார் கட்டிப் போட்டிருக் கிறாங்க. நல்லா பிரிஞ்சு கொள்ளலாமே..." என்றான் வேகமாக.
>
> கோபம் பொங்கிய சின்னப்பன் சொன்னான்:
>
> "ஓஹோ... பங்கு வேண்டுமோ? சரி எந்தக் காமாட்டிப் பயல் கேட்கச் சொன்னானோ அவனை வரச்சொல்."

சாதாரணப் பேச்சு மொழிதான் உணர்ச்சிகளின் உக்கிரத்தை வெளிப்படுத்த முடியும் என்பதை நாகம்மாள் நாவல் மெய்ப்பித்துக் காட்டுகிறது. அந்த மொழியின் ஊடாகச் சொலவடைகளும், அனுபவத் தொடர்களும் பொங்கிப் பிரவகிக்கிறபோது, அன்னியம் அழிந்து நேசமும் நெருக்கமும் வலுவாகி விடுகின்றன.

எடுத்துக்காட்டுக்கள்:

> "மவராசன் எது சொன்னாலும் ரண்டு கண்ணுக்கு மூக்கு வச்சது போலத்தான்."
>
> "மூக்குப் போன மூதேவி", "ரவிசு ரச்சை"
>
> "இந்தப் பாழும் முண்டக் காச்சல்தான் இருபது நாளா கனலா காயுது"
>
> "அதுக்குத் தானா இமுட்டுக் கூடிப் கூடிப் பேசியது"

"அப்படி எவனாவது வாயசைச்சா குதிங்கால் நரம்பை வெட்டிட மாட்டானா?"

"மமிட்டிப் புடியிலே ஒரு தட்டுத் தட்டினா காரியம் நடக்கறாப்பல இருந்தா இதுக்குள்ள கக்க வச்சிருலாம்."

"என் வார்த்தையைக் கேட்டாக் கேளுங்க. கேக்காட்டிப் போங்க. ஆனா பாக்குக் கடிக்கிற நாழி உக்காந்தா அதுவே போதும்."

இப்படிப் பளிச்சுப் பளிச்சென்று மின்னல் வெட்டினாற் போல் கொங்குத் தமிழ்ச் சொற்களும், பிரயோகங்களும் ததும்புகின்றன ஆசிரியரின் கதையில்.

நாகம்மாள்

கொங்கு நாட்டு உழவர் குலப்பெண்கள் உடலிலும் உள்ளத்திலும் உரமேறியவர்கள்; தங்கள் நிலத்தில் நாள் முழுவதும் பாடுபடச் சளைக்காதவர்கள்; நிலத்தை நேசிப்பவர்கள்; நெஞ்சில் பட்டதை அச்சமின்றி வெளியிடும் இயல்பு உள்ளவர்கள்; பல சமயங்களில் சரியோ தவறோ தங்கள் வாழ்வு குறித்த முடிவைத் துணிந்து மேற்கொள்பவர்கள்; எளிமை, துணிவு, உழைப்பு, வெளிப்படையான பேச்சு இவற்றை அடையாளமாகக் கொண்ட கொங்கு நாட்டுப் பெண்களில் ஒருத்தியாகத்தான் நாகம்மாளைப் பார்க்கிறோம்.

நாகம்மாள் முதல் அத்தியாயத்தில் அறிமுகமாகிறபோது வெண்கல மணிபோல் நாதம் எழுப்புகிறாள் 'நான் எல்லாம் வாங்கியும் ஒண்ண மறந்துட்டனே' என்ற குரல் ஒலியுடன் கணீரென்று அறிமுகமாகிறாள். பணிவும் பயமும் அறியாத வளாகக் காட்சி தருகிறாள்.

ஆனால், கதையில் முடிவில் சின்னப்பன் கொலையாகும் போது, அதிர்ச்சியில் மௌனமாகி விடுகிறாள். இந்தத் தலைகீழ் விகிதம் வாசகர்களையும் அதிர வைத்துவிடுகிறது.

இந்த இரண்டு எல்லைகளுக்கும் நடுவில் நாகம்மாளுக்கு ஏற்படும் சலனங்களும், மனப்போராட்டங்களும் தான் நாவலாக விரிகின்றன. ஆத்திரமும், ஆங்காரமும், தன்னிச்சை நாடும் வெறிப்பும் பொங்குவதும் அடங்குவதுமாக இருக்கின்றன.

> "கட்டறுத்துக் கொண்ட காளை போலவும் சுயேச்சையாகச் சிறகடித்துப் பறந்து செல்லும் பட்சி போலவும் நாகம்மாள் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்தாள். அவ்வீட்டுக்கு அவளே ராணி. அவள் வைத்ததே சட்டம். வாசல் குப்பையைப் பெருக்கித் தள்ளுவாள் - தள்ளாதும் விட்டு விடுவாள். கன்றை இடம் மாற்றிக் கட்டுவாள் - கட்டாதும் விட்டுவிடுவாள். பாலைச் சும்மா காய்ச்சிக் குடிப்பாள் - குடிக்காமலும் இருப்பாள்."

புதிதாய் உருவாக்கிக் கொண்ட இந்தச் சுதந்திர உணர்வுக்கு நடுவே, தனித்திருக்கும்போது, தன்னையே விமர்சித்துக் கொள்ளவும் செய்கிறாள்:

> "நல்ல மரத்தில் நரையான் விழுந்த மாதிரி பெரிய குடும்பத்துக்கு அவக்கேடாக வந்து சேர்ந்தேனே! தலைமுறை தலைமுறையாக ஐக்கியமாக வாழ்ந் திருந்தவர்களுக்குக் கெட்ட பெயர் உண்டு பண்ணப் பார்க்கிறேன். பங்கு பிரிக்க வேண்டுமென்று பாழ்படுத்த ஆரம்பிக்கிறேன். ஐயோ, சின்னப்பன் எவ்வளவு அன்பாக வைத்திருக்கிறான். ஒரு வார்த்தை காரமாகச் சொல்வானா? நல்ல மனதை அன்று புண்படுத்தி விட்டேனே..."

இப்படி நாகம்மாளின் நெஞ்சம் அலைபாயும் கோலம், வாழ்க்கையின் நிர்ணயிக்கப்பட்ட போக்கை மீற முடியாத அவலமாய் எஞ்சுகிறது.

தன்னுடைய சொந்த மனதின் கட்டறுத்த பாய்ச்சலும், மற்றவர் தூண்டுதலும் இணைந்து சின்னப்பன் ஏற்றுப் பிடிக்க வந்தபோது தடுக்கும்படி நாகம்மாளைத் தள்ளி விடுகின்றன. சின்னப்பனோடு தர்க்கம் மீறும் வேளையில் கையில் தடியோடு கெட்டியப்பனும், செங்காளியும் வருவதை நாகம்மாள் பார்க்கிறாள் அந்தக் கணத்தில் நாகம்மாளுக்குள் ஒரு பிரளயம் பொங்கி வடிந்து போகிறது படபடக்கும் அவள் வெள்ளைச் சேலை ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகிறது தான் கைம்பெண்ணான அன்று 'பிறந்த வீட்டுக் கோடி'யாக வெள்ளைச் சேலை கொண்டு வரப்பட்டபோது, அந்தக் காட்சியைச் சகிக்க முடியாமல் சின்னப்பன் கதறி அழுதது

நாகம்மாளுக்கு நினைவுக்கு வருகிறது... வாயும் மனமும் பூட்டிக் கொண்டு மௌனமாகின்றன.

ஆனாலும்... ஆனாலும் சட்டென்று கொலை நிகழ்ந்து விடுகிறது. கெட்டியப்பன், சின்னப்பனைத் தடியால் அடித்து வீழ்த்தி விடுகிறான். நாகம்மாளைப் பற்றி அப்போது ஆசிரியர் ஒன்றும் பேசவில்லை. இந்த மௌனம் நம்மைக் கெட்டியப்பன் தடியைவிட வேகமாகத் தாக்கிவிடுகிறது.

இந்தக் கொலையைக் குறித்துக் க.நா. சுப்பிரமணியம் எழுதியுள்ள குறிப்பு முக்கியமானது.

> "கொலை விழுந்து விடுகிறது. இந்தக் கொலையின் விளைவுகளைப் பற்றிப் பின்னர் ஒரு நாவலில் விவரிக்க இருந்தார் ஆசிரியர். ஆனால், இந்த நாவல் கிராமத்து வீணன் கையில் தம்பி கொலையுண்ணு வதுடன் மிகவும் இயற்கையாக முடிந்து விடுகிறது. கோவலன் கொலையுண்டதற்கும், இதற்கும் ஒரு ஒற்றுமை - அநியாயமான கொலை."

இந்தக் குறிப்போடு நிறுத்திக் கொள்ளாமல் நாகம்மாளை கண்ணகியோடும் எதிர்மறையாக ஒப்பிடுகிறார் க.நா. சுப்பிரமணியம். கோவலன் கொலைக்குக் கண்ணகி காரண மில்லை என்றும், சின்னப்பனின் கொலைக்கு நாகம்மாள் காரணம் என்றும் சுட்டிக் காட்டுகிறார். கண்ணகிக்குக் கோபம் கொலைக்குப் பின்னர் வருகிறது நாகம்மாளுக்கு அந்தக் கொலைக்கு முன்னரே கோபம் என்று விமர்சிக்கின்றார். நாகம்மாளை இப்படி விமர்சிப்பது நியாயம் அல்ல. நீர் வழிச் செல்லும் புணைபோல் தன்னால் தவிர்க்க முடியாத ஒரு சூழலில் நாகம்மாள் சிக்கிக் கொண்டாள். கடைசி நிமிடங்களில் தன் நிலையிலிருந்து மாறுகிறாள் என்பதை ஆசிரியர் 'வெள்ளைக் கோடி' பற்றிய குறிப்பால் உணர்த்துகிறார். ஆயினும் அவளை மீறிக் கொலை நிகழ்ந்து விடுகிறது. இதனை உணர்ந்தே சுந்தர ராமசாமி 'ஷண்முகசுந்தரத்தின் கிராமங்கள்' கட்டுரையில் எழுதுகிறார்.

> "நாகம்மாளின் அபிலாஷை கொலையில் முடிந்தது. ஷண்முகசுந்தரத்தை நாகம்மாள் நேரில் சந்திக்கக் கூடுமென்றால், 'ஏனுங்கோ இப்படி ஆச்சு?' என்று கேட்கக்கூடும். ஷண்முகசுந்தரத்தின் பதில்,

'ஒண்ணும் தெரியலீங்கோ...' என்றே இருக்கும்.
(சுந்தர ராமசாமி கட்டுரைகள், ப. 93)

நாகம்மாளை இப்படிக் காண்பதே அவளுக்கு நியாயம் செய்வதாக இருக்கும் என்று தோன்றுகிறது.

வட்டார வாழ்வியலின் சத்தும் சாரமுமான கூறுகளை உன்னதமான கலைப் படைப்பாக வழங்க முடியும் என்று முதன்முதலாகத் தமிழில் நிரூபித்த நாவல் 'நாகம்மாள்.'

□

3. பூவும் பிஞ்சும்

இரண்டு நாவல்கள்

'நாகம்மாள்' நாவலுக்குப் பிறகு, 1944-ல் '**பூவும் பிஞ்சும்**'. 1945-ல் '**பனித்துளி**'யும் வெளிவந்தன. இதன்பின் 1960 வரை பதினைந்தாண்டுக் காலத்துக்குச் சண்முகசுந்தரம் எதுவும் எழுதவில்லை. ஒரு நீண்ட இடைவெளியை விடுமுறையாக எடுத்துக்கொண்டது அவரது எழுதுகோல்.

எனவே அவர் படைப்புக்களை இரண்டு காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம். 1945 வரை வெளிவந்த முதல் மூன்று நாவல்களின் காலம் (1942–1945) 1960 முதல் 1969 வரையிலான பிற நாவல்கள் எழுந்த இரண்டாம் படைப்புக் காலம் (1960–1969). இவ்விரண்டு காலக் கட்டங்களுடன் மூன்றாவது காலக் கட்டமாக அமைவது மீண்டும் அவர் பேனா ஓய்வெடுத்துக் கொண்ட காலம் (1969–1977). தம் இறுதி நாட்கள் வரை புதிய படைப்புக்களை அவர் செய்யவில்லை. எனினும் அவர் மொழி பெயர்ப்புக்கள் செய்திருக்கக்கூடும்.

முதல் படைப்புக் காலத்தில் நாகம்மாள் எழுதப்பட்ட பிறகு வெளிவந்த இரண்டு நாவல்கள் '**பூவும் பிஞ்சும்**', '**பனித்துளி**'யும். இரட்டைக் காப்பியங்கள் என்பதுபோல இவ்விரண்டு நாவல்களையும் இரட்டை நாவல்கள் என்று குறிப்பிட வேண்டும்.

பொதுவான பாத்திரங்கள்

இதற்குக் காரணம், இரண்டு நாவல்களின் கதைகளும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாகக் கதைத் தொடர்ச்சியுடன் காணப்படுகின்றன. இவ்விரண்டு நாவல்களின் களமும் கீரனூர் வட்டாரத்துச் சுள்ளிவலசு கிராமம்தான். மணியகாரர், அவர் தந்தை பவளாக் கவுண்டர், செல்லாயா, மாரியப்பன், மாரியப்பன் தந்தை இராமசாமிக் கவுண்டர் முதலிய பாத்திரங்களும் இரண்டு நாவல்களுக்கும் பொதுவானவர்கள். ஒரே ஒரு மாறுபாடு மட்டும் உண்டு. மணியகாரரின் பெயரைப் 'பூவும் பிஞ்சும்' நாவலில் சென்னிமலைக் கவுண்டர் என்றும்,

'பனித்துளி' நாவலில் முத்துசாமிக் கவுண்டர் என்றும் மாற்றிச் சொல்லி இருக்கிறார். ஆனாலும் மற்ற பாத்திரங்களில் மாறுதல் இல்லை.

ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக வெளிவந்த இரு நாவல்களின் நெருக்கத்தைக் குறிக்கவே இவ்வியலின் தலைப்புக் கூட 'பூவும் பிஞ்சும்' என்ற குறிப்புப் பொருளைத் தாங்கி நிற்கின்றது.

பூவும் பிஞ்சும்

நாகம்மாள் - முதல் நாவல் என்றபோதும் அப்படைப்பில் மனித உறவுச் சிக்கல்களும், அவற்றை மீறமுயலும் பெண்மையின் தவிப்பும் முக்கியத்துவம் பெற்றன.

'பூவும் பிஞ்சும்' என்னும் இரண்டாவது நாவலில் வட்டிக்குக் கடன் வாங்கிச் சொத்துக்களை இழக்கும் கிராமவாசிகளின் நிலை சித்திரிக்கப்படுகிறது. அதே சமயம் ஒரு மெல்லிய இழையாக, செல்லாயா - மாரியப்பன் காதலும் இடம் பெறுகிறது.

வசதியும் வாய்ப்பும் மிக்க குடும்பத்தைச் சேர்ந்த மணியகாரர், மனைவியை இழந்தவர். செல்லாயா என்ற பெண் குழந்தை மட்டும் இருந்தாள். அவருடைய தந்தையார் பவளாக் கவுண்டர் விருப்பத்துக்கு மாறாக வட்டிக்குப் பணம் தரும் வீரப்பச் செட்டியாரிடம் நட்புக் கொள்கிறார். இருவருமாக ஏழை விவசாயிகள் நிலங்களை உரிமையாக்கிக் கொள்ள ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கின்றனர்.

மாரியப்பனும் செல்லாயாவும் பிறர் அறியாமல் நட்பும் காதலும் கொண்டவர்கள் ஆகின்றனர். மாரியப்பனின் தந்தை இராமசாமிக் கவுண்டர், செட்டியாரால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவி புரிந்து வருகிறார். இதனிடையே காங்கயம் வட்டாரத்தில் சில ஆண்டுகளாக மழை பொய்த்துப் போகின்றது. இராமசாமிக் கவுண்டரின் பொருளாதாரம் நிலை குலைகிறது. இதுதான் சமயமென்று வீரப்பச் செட்டியார் அவருடைய நிலங்களில் பல பகுதிகளை உரிமையாக்கிக் கொள்கிறார்.

அப்போது, அதுபற்றிக் கவலை கொள்ளாத மணிய காரருக்கு விரைவில் சோதனைகள் வந்தன சொத்துக்களை விற்க நேரிடுகிறது. செட்டியார் எள்முனை அளவு உதவிகூடச் செய்ய

மறுத்து விடுகிறார். வேளாண்மைப் பொருளாதாரம் வட்டி கொடுத்து வலை வீசுவோரால் பாழடைகிறது.

இந்நிலையில் செல்லாயாவின் காதலனாகிய மாரியப்பன், தந்தையின் நிலையையும், மணியகாரர் நிலையையும் சீர்தூக்கிப் பார்த்தவனாய் ஒரு முடிவுக்கு வருகிறான். பிழைப்பதற்காக வேலை தேடி வெளியூர் செல்லத் திட்டமிட்டவன் உறுதியான முடிவோடு மணியகாரரைச் சந்திக்கிறான்.

> "எல்லாம் நன்றாக இருக்க வேண்டுமென்றால் மூணாதவனுக்கு இடம் கொடுக்கக்கூடாது. நம்ம சம்மதம் இல்லாமல் எந்தக் கொம்பனும் காலெடுத்து வைக்கமுடியாது."

என்ற தெளிவை ஏற்படுத்துகிறான்.

ஊர் ஒன்றுபடுகிறது. இந்த ஒற்றுமையின் முன், பேதங்கள் செய்து லாபங்கள் தேடுகிற சக்திகள் புறமுதுகு காட்டுகின்றன.

இதுதான் பூவும் பிஞ்சும் சொல்லுகிற கதை. விழிப்புணர்ச்சி பெறாத கிராமியச் சமுதாயத்துக்குள் ஒரு வெளிச்ச ரேகை பரவிய செய்தியைச் சொல்லுவதுதான் இந்தக் கதையின் நோக்கம்.

உயிர்த் துடிப்புமிக்க இந்தச் செய்தியை இளம் காதலனாக வரும் மாரியப்பனே பொறுப்பேற்று வெளிப்படுத்துகிறான். அவன் வெறும் கனவுகள் நெய்கிற காதலனாக இருக்கவில்லை. அவனுக்குள் ஒரு சமூகக் கடமை உணர்வு தீவிரமாகக் குடி கொண்டிருந்தது.

தலைப்பின் அழகு

செல்லாயா தன் காதலைப் புலப்படுத்துகிற ஒரு சூழலில் நாவலாசிரியர் மாரியப்பன் என்ற பாத்திரத்தின் அழுத்தத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

> "நான்தான் பூவாம். நீங்கள் எங்கிருந்தோ வந்து அதைச் சூடிக்கொண்டு போவீர்கள்."

என்கிறாள், கிராமத்து இளம்பெண் செல்லாயா.

அதற்கு மாரியப்பன், சொல்லும் பதில் கம்பீரமான எளிமையோடும் ஆழத்தோடும் அமைகிறது.

"நீ பூதான் சந்தேகமில்லை. ஆனால் நானோ இன்னும் கொஞ்சம் முற்றியவன். அதாவது, பிஞ்சு. இந்தப் பூவும் பிஞ்சும் முதிர்ந்தே கனியாவது. நாம் பயன்பட்டால் தான் மற்றவர்களுக்குப் பயன் - தனி மரத்தைத் தோப்பு என்று யாரும் சொல்ல மாட்டார்கள். நாம் இல்லாமல் சமூகம் இல்லை. சமூகம் நம்மைப் பிரித்து சமூகமும் ஆகிவிடாது."

இந்த அருமையான விளக்கத்தில் காதலின் உறுதி புலனாகிறது. கடமையின் விளக்கம் தெளிவாகிறது. அதேசமயம் பூவும் பிஞ்சும் என்ற நாவலின் தலைப்புக்கான நியாயமும் விளக்கப்பட்டு விடுகிறது.

காந்தியமும் காதலும்

நாவல் எழுந்த காலம் காந்தியடிகள் தலைமையில் சுதந்தரப் போராட்டம் தீவிரம் அடைந்திருந்த காலம். கிராமங்களை நோக்கி மக்களையும் சிந்தனைகளையும் அவர் ஈர்த்திருந்த காலம். காந்தியத்தில் ஊன்றிய நம்பிக்கை படைத்திருந்த சண்முகசுந்தரம், விவசாயிகளின் வாழ்வியலில் விடுதலையையும் மாற்றத்தையும் நாடினார் என்பதற்கு இந்த நாவல் சான்றாகத் திகழ்கிறது. அதற்கு ஒரு வடிவம் தருகிற முறையில் மாரியப்பன் பாத்திரம் அமைந்திருக்கின்றது.

கருத்துப் பிரச்சாரமாகத் தெரியாமலே, கலை நுட்பத்தோடு வேளாண் மக்கள் கடனாளிகளாகிற துயரத்தைத் தொட்டுக் காட்டி விடுகிறார் ஆசிரியர். பிரச்சினைகளை முன்வைத்தால் மட்டும் போதாது என்பதால் கிராமத்து மக்களின் ஒற்றுமை உருவாகின்ற சூழலைச் சுட்டிக் காட்டி அதனைத் தீர்வாக வைக்கின்றார் ஆர். சண்முகசுந்தரம். அந்த ஒற்றுமையை உருவாக்கும் மையமாக இளைஞர் மாரியப்பன் திகழ்கின்றார்.

இந்த நாவலில் இலைமறை காயாகத் தோன்றும் அழகான காட்சி செல்லாயா - மாரியப்பன் காதல். சின்னஞ்சிறு குழந்தையாகப் பார்த்துப் பழகிய செல்லாயா இப்போது பூத்துக் குலுங்கும் அழகியாக மாறிவிட்டதைப் பார்க்கிறான் மாரியப்பன்...

"ஐந்து வருஷத்துக்கு முன் பார்த்த அதே பெண் தானா? அவனால் நம்ப முடியவில்லை காட்டுக் கொடிபோல் கட்டழகுள்ள அவள் தேகம்

இப்போது அழகின் காந்தியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது."

என்று தொடங்கும் காதல் வாழைத் தோட்டத்திலும், பிள்ளையார் கோயிலிலுமாக வளர்கிறது. ஒரு கட்டத்தில் அந்தக் கிராமச் சமுதாயத்தின் மாறாத இயல்பால், சலிப்புற்றுப் போகிறான் மாரியப்பன். ஆசிரியர் கூறுகிறார்:

"இந்த அறியாமை நிறைந்த சனங்களுக்கு மத்தியில் வாழ்வது கஷ்டமாக இருந்தது. அவர்கள் நிலைமையை மாற்றவும் ஒரு வழியும் காணோம். அவர்களைப் பிரிந்து போய் விடுவதும் சிரமமாக இருந்தது."

உண்மையில் அந்த மண்ணோடு அவனைக் கட்டிப்போட்ட இரண்டு சக்திகளில் ஒன்று அந்த மக்கள் மீது கொண்ட பற்று. இன்னொன்று செல்லாயா மீது கொண்ட காதல்.

பனித்துளி

பூவும் பிஞ்சும் நாவலில் குறிப்பிடுகிற நிகழ்வுகளைத் தொடர்ந்து ஓரளவு விவசாயக் குடும்பங்கள் காப்பாற்றப் படுகின்றன. இக்கதையின் தொடர்ச்சியான வேறு சில நிககழ்வுகளைச் சித்திரிக்கிறது **பனித்துளி.**

மாரியப்பன் - செல்லாயா திருமணம் நடந்தபின், அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறக்கப் போகிற கட்டத்திலிருந்து இந்த மூன்றாவது நாவலின் கதை தொடங்குகிறது.

வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களோடு சாராய விற்பனையாளர் கைகோத்துக் கொண்டு விவசாய நிலங்களை வளைத்துப் போடும் கொடுமை இந்த நாவலில் சுட்டிக் காட்டப்படுகிறது. கள் விற்றுப் பணம் சேர்த்து நில உடைமையாளராகவும் உயர்ந்து விட்ட கருப்பண கவுண்டன் ஒரு முக்கிய பாத்திரமாக வருகிறார். இந்தப் புதுப்பணக்காரனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர்களாக மணியகாரரும் அவருடைய சம்பந்தி ராமசாமிக் கவுண்டரும் அமைகிறார்கள். இவர்களுக் கிடையே கருத்து வேறுபாடுகளைக் கவனமாக வளர்ப்பவர் களில் ஒருவனாகப் பொன்ன பண்டாரம் விளங்குகிறான்.

அந்தக் கிராமத்தில் ஆலயத்தைச் சீர்திருத்திக் கட்ட வேண்டுமெனக் கூட்டம் ஒன்று நடத்துகிறார்கள் கள்ளுக்கடை

ஏலம் விட்டு வருகிற தொகையில் கோயில் கட்ட அவர்கள் முடிவெடுக்கிற வேளையில் பவளாக் கவுண்டர் அதனை எதிர்க்கிறார்.

"அடப் போங்கடா பொளப்புக் கெட்டவனுகளா?
குடிகாரருக்குக் கோயில் எனத்துக்கடா?"

என்று அவர் கேட்கும் கேள்விக்குள் காந்தியம் புதைந்து கிடக்கக் காணலாம்.

உள்ளூரக் கருப்பண கவுண்டனுக்கும் இராமசாமிக் கவுண்டருக்கும் பகைகை வேர் விட்டிருந்தது. அவருடைய நிலங்களில் ஒரு பகுதி கூடக் கருப்பணனுக்குச் சொந்தமாகிப் போய் இருந்தது. இந்த மன வேறுபாட்டின் விளைவாக மற்றொரு செயலிலும் இராமசாமிக் கவுண்டர் இறங்குகிறார். ஏலத்தில் போன குப்பணன் பூமியைக் கருப்பண கவுண்டன் விலை கொடுத்து வாங்கி அதைச் சொந்தமாக்க முயலும்போது, குப்பணனுக்குத் துணையாக அதைத் தடுக்கத் தீர்மானிக்கிறார் இராமசாமிக் கவுண்டர்.

இதனிடையே கருப்பண கவுண்டன் மகள் இளம் விதவை முத்தாயாவையும், அவள் வீட்டில் இருந்த நாச்சப்பனையும் இணைத்து ஊருக்குள் கதை பரவுகிறது. அந்த நல்ல பெண் அப்பாவிடம் மாரியப்பனையும், மணியகாரரையும் சந்தித்து நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சொல்கிறாள். அந்த யோசனை பலிக்கிறது. சுமுகமான முடிவு நெருங்கும் வேளையில் ஊர்ப்பேச்சுக் காதில் விழுந்ததால் அரளிவேரை அரைத்துக் குடித்து தலைசாய்கிறாள் முத்தாயா. எந்த இராமசாமிக் கவுண்டர் இந்தக் குடும்பத்தைப் பகைமையாகக் கருதினாரோ அவரே மாற்றுச் சிகிச்சை செய்து முத்தாயாவைக் காப்பாற்றுகிறார். ஆனால், எங்கு தேடியும் நாச்சப்பனைக் காண முடியவில்லை. இவ்வாறு கதை முடிகிறது

மலரும் மனிதப்பண்பு

குடிப்பழக்கம் மனிதர்களைச் சீரழித்துப் பகைமை பண்ணுவதையும், அந்தப் போதையே பொன்ன பண்டார முத்தாயாவைக் குறித்துக் கதை கட்டக் காரணமாவதை ஆசிரியர் சித்திரிக்கிறார். கிராம மக்களின் ஜீவநாடியான நிலம் இந்த நாவலிலும் பங்கு வகிக்கிறது. இவையனைத்தையும் மனிதப் பண்பின் புத்துயிர்ப்பை இந்த நாவல் வெளிப்படுத்துவது தான் மிக முக்கியமானது

கருப்பண கவுண்டனை 'ஒரு கை' பார்த்து விடுவது என்று சினம் கொள்ளுகிற இராமசாமிக் கவுண்டர், முத்தாயாவைப் பற்றி முதலில் தவறான கருத்தையே மேற்கொள்ளுகிறார். ஆனால், அவள் மானம் பெரிதென்று உயிர்விடத் துணிந்த போது அவளைக் காப்பாற்றுவதில் முதல் ஆளாக முன் நிற்கின்றார்.

இக்கதையில் வரும் இளம் விதவை முத்தாயா அருமையான பாத்திரம். அப்பாவிடம் உயிரையே வைத்திருப்பவள். யாரோடும் மாசு மறுவின்றிப் பழகும் இயல்புடையவள் என்பதை மாரியப்பனோடு இயல்பாக பேசும் பேச்சுப் புலப்படுத்துகிறது. அப்படித்தான் தன் வீட்டில் வசிக்கும் நாச்சப்பனிடம் உரிமையோடு பழகுகிறாள். ஒரு சகோதரியாக அவனுக்கு முதுகு தேய்த்து விடுகிறாள். இது பற்றிக் கதை கிளம்பியபோது, இராமசாமிக் கவுண்டர் மனைவி செல்லக்காள் கூடச் சொன்னாள்:

> "ஏ, உங்களுக்கெல்லாம் புத்தி இப்படிப் போகுது? ஒரு ஊட்டுக்குள்ளே பெத்தாப் பொறப்பா இருந்தா முதுகு தேச்சு உடறதில்லையா? என்னமோ சீமையிலிருந்து வந்தவங்க போலப் பேசுறீங்களே?"

என்று. இந்தக் கூற்று முத்தாயாவுக்குக் கொடுக்கப்பட்ட நற்சான்றிதழ்.

அந்த இளம் பெண் அவதூறு கேட்டு நெஞ்சம் பதறினாள். நாச்சப்பனைக் கண்டு நடுங்கினாள். தோட்டத்துக்கு ஓடினாள். மனம் முழுவதும் எண்ணங்களால் தாறுமாறாக நிரம்பி வழிந்தது. வாழ்வில் எந்த இன்பத்தையும் காணாத அந்த இளம் பெண்ணின்மீது ஆசிரியரின் அனுதாபம் முழுமையாகப் படிகிறது. ஒரு கவிஞனைப்போல் அங்கலாய்க்கிறது அவர் மனம்...

> "மனிதகுலத்தின் மாளாத்துயர் அனைத்தும் தன் தலையிலேயே தாங்கியவளைப் போல் சோர்ந்து நிற்கிறாள் அச் சுந்தரி. பிரகிருதியும் பெண் இனந்தானே? அம்மா இயற்கைத் தாயே! அதோ துவண்டு துடிக்கும் அந்த மெல்லியலாளை உனது மடியிலே இரண்டற ஆர்வத்தோடு அணைத்துக் கொள் அம்மா! இந்த மனித வர்க்கத்தின் முகத்திலே விழிப்பதில்லை என்ற வைராக்கியத்துடன் உன்

> மடியில் தலைசாய்த்துக் கொள்ள விரும்புகிறாள்... அம்மா, தேவி, அவளை அனாதரவாக விட்டு விடாதே தாயே!"

என்று ஆசிரியர் தானே அகமழிந்து அப்பாத்திரத்தின் துயரத்தில் அழுந்திப் போகிறார். முத்தாயா என்ற பாத்திரத்தின்மீது அவர் கொண்ட அன்பின் ஆழத்தை இந்த வரிகள் புலப்படுத்துகின்றன.

தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்த அதே நேரத்தில், தந்தையைப் பிரிய வேண்டுமே என்று அவள் தவிக்கிற தவிப்பும், கடைசியில் எடுக்கிற முடிவையும் சொல்லும்போது ஆசிரியரின் எழுதுகோல் உணர்ச்சி வெள்ளத்தில் கரை தெரியாமல் அலைபாய்கிறது.

> "உண்மை ஒரு ஆயிரம் வருஷம் பொறுத்துத் தெரிந்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் என்றைக்கோ ஒரு நாளைக்கு உண்மை துலாம்பரமாக வேண்டும். அவ்வளவுதான்..."

என்று கடைசிக் கணங்களில் முத்தாயா எண்ணுவதைப் படிக்கும்போது வாசகன் கரைந்து போகிறான்.

இந்த நாவலில் மனித மனங்களை ஆராய்வது என்ற போக்கினை ஆசிரியர் மேற்கொள்கிறார். அதனால் தான் நான்காம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் பின்வரும் ஆசிரியர் கூற்று நிகழ்கிறது.

> "இனிப்புப் பழமாகப் பழுக்கிற மாமரத்திலே ஒரு பழம்கூடப் புளிக்காது. எல்லாப் பழமும் இனிப்பாகத்தான் இருக்கும்! ஆனால் மனித மனத்தை எடுத்துக்கொண்டு இவ்விதம் தீர்மானிப்பது கஷ்டம். நல்ல குணங்களே உதிக்கும் ஒரு மனதிலே சில கெட்ட குணங்களும் உதிப்பது உண்டு. அன்பு, தூய்மை எல்லாம் குடி கொண்டிருக்கலாம். ஆனால் அங்கும் சில அநாசாரங்கள் தலைவிரித்துத்தான் ஆடுகின்றன..."

இவ்வாறு குறிப்பதன் மூலம் மனிதனின் நன்மையும் தீமையும் வெவ்வேறு விகிதங்களில் கலந்த மனம் என்னும் மாயக் குகைக்குள் நுழைந்து பார்க்கிற ஒரு சோதனை முயற்சியே இந்நாவல் என்று காணமுடிகிறது

கொங்கு மண்ணின் மணம்

ஆர். சண்முகசுந்தரம் என்றதும் நம் கண்முன் விரிகிற கொங்கு வட்டாரம் இவ்விரு நாவல்களிலும் விரிவாக இடம் பெறுகின்றது.

கொரை (புல்வெளி), மேவு (மேய்ச்சலுக்கான புல்), ரோசனை (யோசனை), சுண்ணாம்புக்காய் (சுண்ணாம்பு வைக்கும் சிறிய புட்டி), தட்டுப் போர் (சோளத்தட்டுப் போர்), குறுக்கே பூந்து விளா உடுதல் (தேவையின்றி உள்ளே நுழைதல்), மசப் புள்ளே (வெகுளிப் பெண்) எனக் கொங்கு நாட்டு மணம் பூசிக் கொண்ட சொற்களும் , தொடர்களும் இவ்விரு நாவல் களிலும் இடம் பிடிக்கின்றன.

உரையாடல்களிலும் நாட்டுப்புற மொழி கத்தி வீச்சுப் போல் பளபளவென்று மின்னிக் கொண்டு வரப் பார்க்கிறோம். பொன்ன பண்டாரம் பேசத் தொடங்குகிறான்.

> "நாச்சப்பெ தண்ணி வாத்துக்கிட்டு இருந்தாங்க. முத்தாயா அப்பத்தா முதுகு தேச்சு உட்டுக்கிட்டு இருந்ததுங்க. என்னைக் கண்டதும் முதுகு தேக்கறதை உட்டுட்டு ஒண்ணும் தெரியாததாட்ட 'எங்கே வந்தே'யினு கேட்டுதுங்க. நா ஒண்ணும் தெரியாதவனாட்ட வந்திட்டினுங்க."

> "இராமசாமிக் கவுண்டர் அவன் கூறிய தனைத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவன் பேசி முடித்த வெகு நேரத்திற்குப் பிறகு, "பாத்துக்கடா! இவனல்லா 'நானும் கவுண்டன்'னு மீசையை முறுக்கீட்டு வெளியிலே வந்திடராங்க. ஒரு கொங்க... கொமரி, அதுவும் ஒரு முண்டச்சி, ஒரு தண்டுவனுக்கு வீட்டுலே ஒரு குஞ்சு கூட இல்லாதபோது முகுது தேச்சுடப் போனான்னா, அதுலே என்னமோ வேற விசயம் இல்லாமலா இருக்கும்?" என்றார்.

ஒரு தனி அழகோடும் மெருகோடும் சண்முகசுந்தரத்தின் உரையாடல்கள் மிளிரக் காணலாம்.

கலை நேர்த்தி

சின்னச் சின்னச் செய்திகளைக் கூடச் சித்திரம் ஆக்குகிற

நேர்த்தி வியப்பூட்டுகின்றது வேட்டி கட்டுகிற கலையைக் குறித்துச் சொல்கின்றார்.

> "கருப்பண கவுண்டர் தளர்ந்திருந்த இடுப்பு வேஷ்டியைத் தொப்புளுக்குக் கீழே நன்கு இறுக்கிக் கட்டினார். பிறகு இரு தலைப்புகளில் ஒன்றை இருகாலுக்கும் மத்தியில் முழங்காலுக்கு மேல் தொங்கவிட்டு, மற்ற தலைப்பை இழுத்துக் கோவணம் போட்டுக் கட்டிக் கொண்டார். பிறகு தமது வெள்ளி அரைஞாண் கயிற்றை இடுப்பு வேஷ்டிக்கு மேல் எடுத்துப் போட்டுக் கொண்டு பொன்னான் கையில் கொடுத்திருந்த வெற்றிலைப் பொட்டியை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு மீசையை இருபுறமும் ஒதுக்கி விட்டுக் கொண்டார்."

விவசாயிகளின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் தனித்திறமை மிக்கவர் ஆசிரியர். வேளாண் மக்கள் கண்ணுக்குக் கண்ணான மாடு கன்றுகளை எப்படிப் பேணிப் பாதுகாக்கிறார்கள் என்பதை எல்லாம் மிகத் துல்லியமாகக் காட்டுகின்றார்.

மணியகாரர் வீட்டுத் தோட்டத்தில் ஒரு காட்சி: அங்கே மேய்ந்து கொண்டிருந்த இளங்காளைகளில் ஒன்றைக் காட்டி மணியகாரர்,

> "இந்த வருசம் கன்னபுரம் தேருக்கு இதைப் புடிக்கலாமுன்னு இருக்கிறனுங்க" என்றார்.
>
> இராமசாமிக் கவுண்டர் அந்தக் காளையை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஏனுங்க கண்ணு நல்ல வாட்ட சாட்டமா இருக்குது, இருந்தா இருந்துட்டுப் போவுதுங்க" என்றார்.
>
> "அந்தக் கெரகம் இருக்கறதைப் பத்தி ஒண்ணுமில்லைங்க ஆனா சுழி கொஞ்சம் மோசமா இருக்குதுங்க ஐயெ(ம்) வேறெ வெச்சிருக்கப்படாதுன்னு ஒரு காலு மேலே நிக்கறாங்க"
>
> "இது எதும்பட கண்ணுங்க?" என்று கூறிக்கொண்டு மேய்ந்து கொண்டிருந்த காளையருகில் போனார்

"அதுங்களா? நம்ம பெரிய மாட்டுக் கண்ணுத் தாங்க."

காளை அருகில் சென்று அதை மெள்ளத் தடவிக் கொடுத்துப் பிடித்துப் பார்த்தார். பிறகு, "ஆமாங்க, எழவு, இந்தச் சுழி கூடாது தானுங்க. அதுக்குப் பாருங்க, கொம்பு என்ன வாட்டமா வந்திருக்குன்னு– கண்ணும் நல்ல மைக்கண்ணு. இது வயசுக்கு நல்ல மயிலை ஆகிடுங்க. இப்படித் தானுங்க ஒவ்வொண்ணு குறுக்கே இருந்து கெடுத்துப் போடுதுங்க."

இந்த உரையாடலில் மாடு கன்றுகள் பற்றிய அறிவும், அக்கறையும், ஆதங்கமும் வேளாண் மக்களிடம் ஒன்றாகக் கலந்திருப்பதை உணர முடிகிறது. இத்தகைய வாழ்வில் நுட்பங்கள் இந்நாவல்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

குறியீடான தலைப்பு

பூவும் பிஞ்சும் என்ற ஒரு நாவலுக்குப் பெயர் வைத்திருப்பதன் காரணத்தை முன்னர் கண்டோம். பனித்துளி என்று மற்றொரு நாவலுக்குப் பெயர் சூட்டியிருப்பதன் அடிப்படையை முத்தாயா என்ற பாத்திரத்தைப் பற்றிய ஒரு குறிப்பில் ஆசிரியர் புலப்படுத்துகிறார். தன் ஒழுக்கம் பற்றிய தவறான பேச்சைக் கேட்டு நிலை குலைந்து போன முத்தாயா, தற்கொலை செய்யும் முடிவோடு ஊரை விட்டுச் தோட்டச் சாளைக்கு விரைகிறாள். வழியில் மாகாளி கோவில் குறுக்கிடுகிறது. இங்கே ஆசிரியர் பேசுகின்றார்.

"அதோ தூரத்தில் தெரிகிறதே, அந்தச் சிறுகோவில் - மாகாளி கோவில். அங்கே முதன் முதலில் புது மணக்கோலத்துடன், பூ மணத்துடன் பர்த்தாவின் கரம் பிடித்து இதயம் பொங்கி நின்றாளே, அன்று அவளுக்கு மாகாளி எந்த விதம் காட்சி அளித்தாள்? காளி கோவில் மட்டுமா? காடும் கழனியும் சுற்றுப் புறமும் எங்குமே ஒரு இன்ப சுகம் சூழ்ந்திருந்ததாகத் தோன்றியதே. இன்று அதெல்லாம் பனியைப் போல் மறைந்துவிட்டதா? தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருப்பது தான் வாழ்க்கையா?

அல்லது அதுவேதான் ஒரு விளங்காத விடுகதையா?"

மேற்குறித்த கருத்தோட்டத்தில் வாழ்வின் மாற்றங்களைப் பனித்துளிகளின் மறைவுக்கு ஒப்பிடுகின்றார். முத்தயா வாழ்வின் இன்பங்களும் கேவலம் பனிபோல் மாய்ந்துவிட்டன. இதனையே 'பனித்துளி' என்ற குறியீடாக ஆசிரியர் உணர்த்தி இருக்கின்றார்.

நாவலின் தலைப்புகளைக் கூட குறியீடாக்கும் அழகைப் பூவும் பிஞ்சும், பனித்துளி நாவல்கள் உணர்த்துகின்றன.

□

4. மௌனம் கலைகிறது

எழுத்தில் தேக்கம்

> "அன்றைக்கும் இன்றைக்கும் எனக்கு என்ன எழுதுவதென்றாலும் 'மூடு கீடு' ஒன்றும் வர வேண்டியதில்லை. எந்த நேரமும் பேனா பிடித்தால் நிற்காமல் நிறுத்தாமல் எழுத வேண்டியதுதான்."

என்று நம்பிக்கையோடு எழுதுகோல் ஏந்தியவர் ஆர். சண்முகசுந்தரம். ஆனால் முதல் மூன்று நாவல்களை எழுதி முடித்தபின் (1945-க்குப் பின்) 1960 வரை மௌனம் பாலித்தார் அவர். பொருளாதார அடிப்படையில் எழுத்து பயன்படவில்லை என்றும் எழுதாததால் வாசகர்கள் கவலைப்படவில்லை என்றும் அறிந்தபோது விரக்தியும் வெறுப்பும் அவருக்கு ஏற்பட்டன.

'எதற்காக எழுதுகிறேன்?' என்ற தலைப்பில் 1962-ல் பத்து எழுத்தாளர்கள் தங்கள் கருத்தை ஒரு கருத்தரங்கில் தெரிவித்தார்கள் (8–4–1962). கட்டுரை வடிவில் அமைந்த இந்தக் கருத்துக்களை 1962 மே மாதம் வெளிவந்த 'எழுத்து' (41) தொகுத்து வெளியிட்டது. ஆர். சண்முகசுந்தரம் அக்கருத்தரங்கில் 1945 முதல் 1960 வரை தான் மௌனம் காத்தது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்:

> "இந்தத் தண்டமிழ் நாடு தான் பக்குவப்படவில்லையோ? அல்லது நம்முடைய பேரிலக்கியங்கள் தான் எடுபடவில்லையோ? என்று எல்லா வற்றிற்கும் பெரிய முழுக்காகப் போட்டு விட்டு ஒரு பத்து ஆண்டுகள் மௌனத்தில் ஆழ்ந்தேன்! அதாவது இந்த எழுத்து சமாசாரத்தையே அறவே மறந்து விட்டேன்...
>
> இரண்டு புத்தகம் எழுதினோம் வாழ்ந்தோம் என்ற நிலை இருக்கிறதா? பின்னே என்னவோ பிரம்மாதமாக வாதிடக் கிளம்பி விட்டீர்களே....
>
> ஒரு விரக்தி என்று வைத்துக் கொள்ளுங்களேன். நான் ஒதுங்கி இருந்தேன்."

என்று வாக்குமூலம் தருகிறார் ஆர். சண்முகசுந்தரம். (எழுத்து – மே, 1962)

எனினும் 1960-ம் ஆண்டில் மௌனம் கலைந்து 'அறுவடை' என்னும் நாவல் வெளிவந்தபோது, தான் மறுபிறவி எடுத்திருப்பது குறித்து நூலின் முன்னுரையில் தெளிவான விளக்கத்தை ஆர். சண்முகசுந்தரம் தந்திருக்கிறார். அவருடைய படைப்புப் பயணத்தில் ஒரு முக்கியமான இடத்தை இந்த முன்னுரை பெறுகின்றது. அதன் குறிப்பிடத்தக்க பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன:

> "நாகம்மாள், பூவும் பிஞ்சும், பனித்துளி ஆகிய நாவல்களை எழுதிய பிறகு சுமார் ஒரு பத்து வருஷம் நான் அதிகமாக ஒன்றும் எழுதவில்லை அநேகமாக எனது 'இலக்கியப் பணி'யையே நிறுத்திக் கொண்டேன் என்று கூடச் சொல்லலாம். வாசக நேயர்கள் ஆவலுடன், "ஐயா! தாங்கள் தமிழுக்குத் தொண்டு புரியாததின் காரணம் என்னவோ?" என்று என்னிடம் கேட்கவில்லை. "தாங்கள் இவ்விதம் எழுத்துல கினின்றும் ஒதுங்கி நிற்பதன் காரணம் யாதோ!" என்னும் விளக்கம் கோரவில்லை. உண்மையில் நான் ஏன் எழுதாமலிருந்தேன் என்று எனக்கே புரியவில்லை."

ஆசிரியரின் விளக்கம்

ஆர். சண்முகசுந்தரத்தின் உள்ளம் வாசகர் பாராட்டும், பொருளாதார வாய்ப்பும் பெறாமல் புண்பட்டுப் போயிருந்தது. இதனால் ஏற்பட்ட தார்மீகக் கோபத்தில் எழுத்து உலகையே புறக்கணித்திருந்தார். நல்ல வேளையாக இந்தத் தேக்கத்தை உடைப்பதற்கும், அதனால் மீண்டும் அவரை எழுத வைப்பதற்கும் இடையறாத தூண்டுதலைத் திறனாய்வாளர் க.நா. சுப்பிரமணியம் மேற்கொண்டு வெற்றியும் பெற்றார். இது குறித்து 'அறுவடை' முன்னுரையில் ஆசிரியர் விளக்கமாக எழுதியுள்ளார்:

> "ஆனால், இந்த மௌனத்தைக் கலைக்க ஒரே ஒரு உள்ளம் - ரொம்பப் பெரிய உள்ளம் - சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் சுட்டிக் காட்டிக் கொண்டே இருந்தது ஆங்கிலப் பத்திரிகைகளிலும், அன்பர் மேடைகளிலும், இலக்கிய நண்பர்களிடை

யிலும் எனது நாவல்களின் தரத்தை எடுத்து இயம்பிக் கொண்டே இருந்தது. என் நாவல்களைப் பற்றி நானே மறந்துவிட்டேன்! போனால் போகிறதென்று 'இப்பேருள்ளம்' சும்மா விட்டு விடக்கூடாதா? அதுதான் இல்லை! 'மயில் ஏன் தோகை விரித்து அழகாக ஆடாமல் இருக்கிறது?' 'முல்லை ஏன் மலர்ந்து மணம் பரப்பா மலிருக்கிறது?' என்று ஓயாது கேட்டு வந்தது."

இவ்வாறு மௌனம் கலைந்த சூழலை விவரிக்கும் ஆசிரியர் நன்றிப் பெருக்கால் மேலும் எழுதுகின்றார்:

"என் சிந்தனை வளத்தின் 'தடை' குறித்து என் மனைவிகூடக் கவலைப்படாத நிலையில் அந்த அதிசய உள்ளத்திற்கு இவ்வளவு அக்கறை இருக்கிறதே என்பதை எண்ண எண்ண எனக்கே 'ஒரு மாதிரி'யாக இருக்கும். நெஞ்சம் எல்லாம் நெகிழும்! உலக இலக்கியக் கடலுள் ஆழந்து சதா சர்வ காலமும் பயனுள்ள சேவை செய்து வருகிற அந்த 'அதிசய உள்ளம்' க.நா.சு. அவர்களுடையது என்பதை நான் சொல்லாமலே தெரிந்து கொண்டிருப்பீர்கள்..
வங்க மேதை சரத் சந்திர சட்டர்ஜி கூட இடையில் சில வருஷங்கள் எழுதாமல் இருந்தாராம். நானும் அவ்வித 'இடைநிலை' ஏற்படுத்திக் கொண்டிருந்த தைத் தகர்த்தெறிந்த புண்ணியவாளர் க.நா.சு. அவர்கள்தான். வாழ்க அவரது தார்க்கோல்!"

மெல்லிய நகைச்சுவையும், நன்றி பாராட்டும் கலந்திருந்த போதிலும், ஆர். சண்முகசுந்தரத்தின் இந்த முன்னுரை எழுத்துக் கலைஞர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு மனநிலையையே பிரதிபலிக்கின்றனது எனலாம்.

அறுவடை

எவ்வாறாயினும் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'அறுவடை' வெளிவந்தது.

தமிழ்க்கவிதை உலகின் திருமூலர் என்ற அழைக்கத் தகுந்த நகுலன் (டிகே. துரைசாமி), ஆர். சண்முகசுந்தரத்தின் நாகம்மாள்,

பனித்துளி, அறுவடை ஆகிய மூன்று நாவல்களையும் பாராட்டிவிட்டு,

> "அறுவடையை அவரது மிகச் சிறந்த சிருஷ்டியாகக் கருதலாம்."

என்று குறிப்பிடுகின்றார். (எழுத்து – ஏப்ரல், 1966)

இதனை அவருடைய கருத்து என்று கணக்கிடலாம். எனினும் ஒரு தலை சிறந்த படைப்பாளியின் மௌனம் கலைத்து வந்த முதல் படைப்பு என்ற பெருமை இந்நாவலுக்கு உண்டு.

ஒரு சின்ன வட்டாரத்துக்குள் சுழலும் மனிதர்களைப் பாத்திரங்களாகக் கொண்டது இந்நாவல். மகனோடு மாறுபட்டுத் தோட்டத்தில் வசிக்கும் எழுபது வயதுக் கிழவர் சின்னப்ப முதலியார் ஒரு பெண் பித்தர். அந்த ஆசைக்குத் தூபம் போட்டு ஏமாற்றி 'ஒட்டுண்ணி'யாக வாழ்பவர் கருப்பண்ண முதலியார். வறுமையில் வாடும் பித்தலாட்டக்காரனான நாச்சிமுத்துவின் ஒரே மகள் தேவானையைக் கிழவருக்குக் கட்டி வைக்க ஏற்பாடாகிறது. தவித்துப் போன அந்த இளம் பெண் தன் காதலன் (பெரியவர் பேரன்) சுப்பிரமணியனிடம் இதைத் தெரிவிக்கிறாள். தான் அந்தக் கொடுமையிலிருந்து தப்புவதற்காக, 'நாம சினேகிதமாக இருந்ததெ ஊருக்குள்ளே எல்லாத்தெ கிட்டெயும் சொல்லிடுங்களே'' என்று கெஞ்சுகிறாள்.

சுப்பிரமணியம் அவளைக் கேலி செய்கிறான். கடைசியாகச் சொல்கிறான்:

> "இதுக்கெல்லாம் எங்க தாத்தா மசியமாட்டார். இதுக்கு முன்னாலே படிதாண்டாப் பத்தினிகளெத் தான் கூட்டிக்கிட்டு வந்து வச்சிருந்தாரா? எல்லா தேவடியாள்கள்தானே?"

காதலனின் இந்தக் கூற்றால் வெகுண்ட தேவானை அவனைக் காறி உமிழ்ந்துவிட்டு வெளியேறுகிறாள்.

முகூர்த்த வேளையில் கிழவர் இறந்து கிடப்பது தெரிய வருகிறது. அதே சமயம் மணப்பெண் இருந்த அறையைத் திறந்தபோது மணக்கோலத்தில் தேவானை தூக்குப் போட்டு இறந்து போன கோலம் அதிர வைக்கிறது.

இயல்பான படைப்பு

பொதுவாக ஆர். சண்முகசுந்தரத்தின் முந்தைய நாவல்களைப் போன்றே இந்த நாவலும் முழுக்க முழுக்க கிராமிய நாவலாகவே மலர்ந்துள்ளது. செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு மனிதனைக் கூட இங்கு பாத்திரமாகக் காண முடியவில்லை. அது போன்றே கதை நிகழ்வுகளிலும், உரையாடல்களிலும் வருணனைகளிலும் இயல்புக்கு மாறான போக்கு இல்லவே இல்லை.

அதிர்ச்சியூட்டும் முடிவுகளைச் சொல்வது நாகம்மாள் முதல் பனித்துளி வரை சண்முகசுந்தரத்தின் கதை சொல்லும் உத்தியாக இருந்து வந்துள்ளது. இந்த நாவலும் அதற்கு விதிவிலக்காக இல்லை.

ஒரே மண்ணிலிருந்து முளைத்த வேறுபட்ட தாவரங்களைப் போலப் பண்புகளால் மாறுபட்டவர்கள் இந்தக் கிராமத்துக் களத்தில் இடம் பெறுகின்றனர். பெண்ணாசை, சுயநலம், ஏமாற்று, காதல் துரோகம், வைராக்கியம் என உருவெடுக்கும் உணர்வுகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும்போது எழுகிற அவலம் வாசகனைத் தாக்குகிறது.

அதிலும் குறிப்பாகப் பச்சை நாற்றுப்போல் இருக்கும் தேவானையின் களங்கமற்ற காதல் வாசகனின் உயிரை வருடுகிறது சோளக் காட்டுக்குள் தனக்கு முந்தியே வந்து காத்திருக்கும் சுப்பிரமணியனைக் கண்டதும் அவள் பேச்சுத்தான் எப்படிக் குதி போடுகிறது!

> "அடே எஞ் சாமி! சாமி! எனக்கு முன்னாலே வந்து உட்காந்திருக்கிறதப் பாரு."

என்று கன்னத்தில் அவள் கை வைக்கும் அழகே அழகு!

அவர்களின் பேச்சு காதல் உலகின் **'Sweet nothings'** என்ற எல்லையைத் தொடுகிறது

> "நீங்க ஒண்ணும் பேசமாட்டீங்கறீங்க' என்று சிணுங்கிக் கொண்டே தேவானை சிறிது நகர்ந்து உட்கார்ந்தாள்
>
> "நீயே எல்லாத்தையும் பேசிக்கிட்டிருக்கறே நா பேசறதுக்க என்ன இருக்குது..?"

"அதெல்லா முடியாது..."

"அது தா..."

"எது தா..."

வாசகனைச் சொக்க வைக்கும் இந்தக் காதலில் பூவுக்குள் நாகம் போல் ஒரு துரோகம் பதுங்கியிருப்பது நிலைக்காத அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

அறுவடை – பெயர்ப் பொருத்தம்

அடர்ந்த சோளக்காட்டில் பயிர்கள் முற்றிவிட்டன. அதற்கு உடையவரான சின்னப்ப முதலியார் விரைவில் அதை அறுவடை செய்து விடுவார். அப்புறம் எங்கே சந்திப்பது என்று அவள் கேட்கும் சொற்கள் பொருள் ஆழம் மிக்கவை.

சோளத்தை அறுவடை செய்வதுபோல் அந்த கிழவர் அவளுடைய காதலையும் அறுவடை செய்யப் போகிறார் என்று குறிப்புப் பொருள் அதற்குள் அடங்கிக் கிடக்கிறது.

மாசு மறுவற்ற அன்பை அறுவடை செய்ய நினைக்கிறாள் அவள். வெறும் 'அவளை' மட்டும் அபகரிக்க முற்படுகிறான் சுப்பிரமணியம். காமத்துக்கு ஒரு கருவியாக அவளை அறுவடை செய்ய நினைக்கிறார் சின்னப்ப முதலியார். சந்தடி சாக்கில் பணத்தை அறுவடை செய்யச் சுயநலமிகள் காத்திருக்கிறார்கள். எல்லாருடைய நினைப்பிலும் மண் அள்ளிப் போட்டு விட்டு உயிர்களை அறுவடை செய்து கொண்டு போகிறது மரணம்.

பாதுகாவலனாக இருந்த சோளக்காடு பாத்தி பாத்தியாக அறுவடை செய்யப்படுகிறது. கலியாணம் நிச்சயிக்கப்பட்ட செய்தியை அவனிடம் எப்படி, எங்கே போய்ச் சொல்லுவது என்று தவிக்கிறாள் தேவானை. ஒருவாறு அவனைப் பாலை மரத்தடியில் தனியே சந்தித்து விடுகிறாள். ஆனால், அந்தப் பேதைப் பெண்ணின் காதலன் இதமான மொழிகளுக்குப் பதில் ஒவ்வொரு வார்த்தையிலும் பதமான கத்தியை வைத்திருந்தான். வருணனைகளை விட்டுவிட்டுப் பேச்சைக் கேட்போம் அவள் கேட்டாள்:

"எங்கே போயிட்டீங்க, என்னைக் காக்க வச்சிட்டு?"

"உனக்குக் கல்யாணப் பந்தல் போடப் போயிருந்தேன்."

"இனி என்ன பண்றதுங்க?"

"கலியாணம் பண்ணிக்கிறது."

தேவானை அவனை வெறித்துப் பார்த்தாள்.

"எவனயாவது கட்டிக்கிட்டு எங்காச்சும் போயிருந்தயானால் நமக்கு எவ்வளவு கஷ்டம்? எங்க தாத்தனெக் கட்டிக்கிறது நல்லதாப் போச்சு..."

குரூரமான, ஆணாதிக்கச் சமுதாயத்தின் இந்தக் குரல் நெஞ்சைப் பதற வைத்து விடுகிறது.

இந்தச் சின்னஞ்சிறிய நாவலைப் படித்து முடிக்கிறபோது, ஒரு தெளிவு ஏற்படுகிறது. கீரனூர் ஆனால் என்ன? செல்வம் கொழிக்கும் வேறு ஊர் ஆனால் என்ன? மோகங்களும் ஆசைகளும் எல்லா மண்ணுக்கும் சொந்தம்தான். துரோகங்களும் வஞ்சனைகளும் எல்லா இடத்துக்கும் சொந்தம்தான் என்ற முடிவுக்கு வருகிறோம்.

தேவானை என்கிற இளம் குருத்துக்கு - யாருக்கும் எந்தக் கெடுதலும் நினைக்காத பெண்ணுக்கு நேர்கிற விபரீதமான சோதனையும், மீட்டெடுக்க முடியாத மரணமும் படிக்கிற நெஞ்சங்களில் பதற்றமாய்த் தேங்குகின்றன.

□

5. அழியாக் கோலம்

ஏறியும் இறங்கியும் வருகிற காட்டாறுபோல், ஆர். சண்முகசுந்தரத்தின் நாவல்கள் உயரத்திலும் பள்ளத் தாக்கிலுமாக மாறி மாறி வெளிவந்தன. 1960க்கும் 1969க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழப் பதினாறு நாவல்களை எழுதித் தந்திருக்கின்றார். அவற்றுள் மூன்று நாவல்கள் (நாகம்மாள், அறுவடை நாவல்களுக்குப் பிறகு) தனித்துக் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை அழியாக் கோலம் (1965), சட்டி சுட்டது (1965), மாயத்தாகம் (1966) என்பன அம்மூன்று நாவல்கள்.

அழியாக் கோலம்

சண்முசுந்தரத்தின் படைப்புத் திறன் முறுக்கேறி நின்ற இந்தக் காலக் கட்டத்தில் (1965-66) எழுதப்பட்ட நாவல்கள் அனைத்தும் அளவால் பெரியவை. எல்லாவற்றையும் விடப் பெரிய படைப்பாக அமைந்தது அழியாக் கோலம்.

'தீபம்' இதழுக்கு அளித்த நேர்முகத்தில் (அக்டோபர், 1970), ஆசிரியர் தன் நாவல்களில் மிகவும் பிடித்தவை என்ற ஒரு குறிப்பை நல்கியுள்ளார். 'தாங்களே ஈந்து வந்த நாவல்களில் இன்றும் இனியும் நினைவு கூரத்தக்கதாக எவைகளைக் கூறுவீர்கள்?' என்று சு. அரங்கராசன் கேட்ட வினாவுக்கு விடையிறுக்கும்போது இவ்வாறு கூறுகின்றார்:

> "பொதுவாகக் கேட்டால் இதுவரை எழுதிய நாவல்கள் எல்லாமே பிடித்தவை தாம். அதனால் தான் எழுதவும் வெளியிடவும் முடிந்தது. நாகம்மாளும், அறுவடையும் இரு முனைகளில் நின்று எல்லோருடைய கவன ஈர்ப்பிற்கும் ஆளாகியிருந்தன. அழியாக் கோலமும், சட்டி சுட்டதும் என் கவனத்தில் பதிந்தவை."

இந்த இலக்கியச் சந்திப்பு நிகழ்கிற காலத்தில் அவர் தம் நாவல் படைப்புப் பணி அநேகமாக முற்றுப் பெற்றுவிட்டது

என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அவருடைய சுய மதிப்பீடு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகும்.

'அழியாக் கோலம்' குறித்துச் சிட்டியும் சிவபாதசுந்தரமும் (**தமிழ் நாவல் – ப. 201**) தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை.

> "1965-ல் வெளியான அழியாக் கோலம், காணாச் சுனை என்ற இரண்டு நாவல்களில் அழியாக் கோலத்தில் தான் கொங்கு நாட்டு மண் வாசனையுடன் அவர் எழுதும் கைவண்ணம் புத்துயிர் பெற்று விளங்குகின்றது .... அழியாக் கோலம் கதையில் நாகம்மாள் நடமாடிய நிலப் பகுதிகளையும் வெங்கமேட்டுச் சந்தை போன்ற பழக்கமான இடங்களையும் நாம் பார்க்கிறோம். நிறைவேறாக் காதலைப் பொருளாகக் கொண்ட இந்த நாவலில் கொங்கு நாட்டுக் கிராமம் ஒன்றில் வாழும் குடும்பப் பிரச்சினைகளைச் சந்திக்கிறோம். விஞ்ஞான முன்னேற்றம் நிறைந்த இந்த நாட்களில் வெளி உலகப் பாதிப்பு சிறிதும் இல்லாமல் அமைதியாக வாழும் கிராமக் குடும்பங்களில் புயல் வீசுவதை சண்முகசுந்தரம் மிக அழகாக சரளமான நடையில் சொல்லியிருக்கிறார். நாவல் இலக்கியத்திற்கு சிறப்புக் கூட்டும் மற்றொரு முயற்சி இது."

தமிழ்நாட்டு வாசகர்கள், திறனாய்வாளர்கள் இடையில் நாகம்மாள் ஏற்படுத்திய தாக்கம் ஆழமானது என்பதால், ஆர். சண்முகசுந்தரத்தின் பிற்காலப் படைப்புகளை அதனோடு ஒப்பிட்டுத் தரம் பார்க்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டதையே மேற்கண்ட குறிப்புப் புலப்படுத்துகின்றது.

நாவலின் பொருண்மை

'அழியாக் கோலம்' முற்றிலும் மாறுபட்ட ஒரு சிக்கலைப் பொருளாகக் கொண்டது. இளம் உள்ளங்களில் காதல் ஏற்படுத்திய கனவுகளும், அக்கனவுகள் சூழல்கள் ஏற்படுத்திய சூறாவளியால் சுக்கு நூறாவதும் கதைப் பொருளாக அமைகின்றன.

கீரனூர் கிராமத்தில் தந்தையையும் தாயையும் இழந்த இளைஞன் துரைசாமி, வெளியூர் சென்று படித்து வந்தவன். அவனுடைய உறவுக்காரப் பெண் நிர்மலாவும் அவனும் மனமாரக் காதலித்து வந்தனர். முத்தாயா என்பவளைப் பெண் பார்க்க வந்த சாமியப்பன் குடும்பத்தினர், அவள் தந்தை இல்லாத காரணத்தினால் நிர்மலா வீட்டுக்கு, எதிர்பாராமல் செல்கின்றனர். பேச்சுவாக்கில் அந்த வீட்டுக்கே பெண் பார்க்க வந்திருப்பதாக வேடிக்கைக்குச் சொல்லுகிறார்கள். ஆனால், அதனையே உண்மையாகக் கருதிய நிர்மலாவின் தந்தை காளியண்ணக் கவுண்டர் பெண் தர ஒப்புதல் தந்து விடுகிறார். இதனால் நிர்மலா-துரைசாமி காதல் சிக்கலுக்கு உள்ளாகிறது. துரைசாமி தடுமாறுகிறான். தற்செயலாக ராக்கியாக் கவுண்டர் மகள் முத்தாயாவைக் காண நேர்ந்த துரைசாமி அவளிடம் மனம் பறி கொடுக்கிறான். முத்தாயாவும் அவ்வாறே காதல் கொள்ளுகிறாள்.

நிர்மலா, மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதால் அவள் தகப்பனாரிடம் தங்கள் நிலையைத் துரைசாமி கூறுகிறான். ஆனாலும், காலம் மீறிப் போய்விட்டதை உணர்கின்றனர். இதனிடையே மடத்து விளாகம் கிராமத்தில் முத்தாயாவுக்கு மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் செய்கிறார் ராக்கியாக் கவுண்டர். சாமி கும்பிட அப்பாவும் மகளும் போன இடத்தில், மனமுடைந்த முத்தாயா கிணற்றில் விழுந்து உயிர் துறக்கிறாள். அதே சமயம் நிர்மலாவை மணம் முடிப்பதற்காக சாமியப்பன் கீரனூருக்கு வந்து கொண்டிருந்தான். இவ்வாறு கதை முடிகிறது.

பாத்திரங்களின் மோதல்

முதிர்ச்சி பெறாத இளம் உள்ளங்கள் மூன்றும் தங்கள் கிராமிய சமூகச் சூழலை எதிர்கொள்ளும் முழுத் துணிவு பெறாத காரணத்தால் சோகத்தை ஏற்க நேருகின்றது. வேலிக்குக் கட்டுப்படுகிற விலங்குகள்போல் தங்கள் வாழ்வை அதன் இயல்பான போக்கில் வளரவிடாமல் தாங்களே முடக்கிக் கொள்கின்றனர். விதியின் சந்நிதானத்தில் விவேகமில்லாத பலியாடுகளாய் மாறி விடுகின்றனர். இந்தப் பேரவலமே இந்த நாவலின் பொருளாக அமைகின்றது.

நிர்மலா மட்டுமே இம்மூவரிலும் துணிவு மிக்கவளாக இருக்கிறாள். தனக்கு மணம் முடிய இருக்கும் சூழலில்

காதலனிடம் பன்முறை உரிமையோடு மன்றாடுகிறாள். அவன் மட்டும் கண்ணசைவு காட்டியிருந்தால் எந்த முடிவுக்கும் அவள் முன்வந்திருப்பாள். உரிமைப் பெண்ணான அவளைத் தனக்குத் தான் தரவேண்டும் என்று துரைசாமி துணிவோடு வற்புறுத்தி இருந்தால் கூட அவள் ஆறுதல் அடைந்திருப்பாள். இப்போது அவள் சூழ்நிலையின் கையில் அகப்பட்டுவிட்ட துயரம் மிகுந்த கைதியாகப் போய்விட்டாள்.

துரைசாமியோ, 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்கிற இரட்டைத் தன்மைக்கு இரையாகி விடுகிறான். தனக்கு நிர்மலா இல்லை என்பதால் அதிர்ச்சி வசப்பட்ட போதிலும், 'வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டதே' என்பதுதான் அவளுக்கு அவன் தரும் பதிலாகிறது. அதற்கும் மேலாக அப்பாவிப் பெண்ணான முத்தாயாவையும் காதலிக்கத் தொடங்குகிறான். சூதுவாது அறியாத அவளையும் காதலில் தள்ளி விட்டுவிடுகிறான். ஒருவகையில் பார்த்தால், இரண்டு பெண்களின் அவலத்துக்கும் காரணமான ஒரு பாத்திரமாகத் துரைசாமி அமைந்து போய்விடுகிறான்.

முத்தாயா அமைதியாக எரியும் ஒரு தீபச்சுடர். எங்கிருந்தோ வந்த துரைசாமி என்னும் காற்றில் அது அசைந்தசைந்து ஆடிச் சிரிக்கிறது. இன்னொருவருடன் திருமணம் என்கிற சூறைக்காற்று குப்பென்று வீசியதும், பட்டென்று அணைந்து விடுகிறது தீபம். வாழ்வின் முன்னுரை எழுதப்படும் போதே முடிவுரைக்கு இலக்காகி விடுகிறாள் முத்தாயா.

வெறும் நினைவை மட்டும் சுமக்கிறவனாக துரைசாமி மாறிப் போகிறான். நிர்மலாவிடம் கொண்ட காதலின் சுவடு அவன் நெஞ்சில் அழியாக் கோலமாகி விடுகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறார் ஆசிரியர்.

> "இயற்கையன்னை தன்னை மாற்றுவாள். வானக் கண்ணாடியில் நவநவமாகச் சிங்காரித்துக் கொண்டு கோலங்களைக் காண்பித்த வண்ணம் இருப்பாள். அது அழியும். அழியாமலும் இருக்கும். அழிந்து கொண்டும் இருக்கும். துரை மேற்கண்ட விதம் கற்பனைப் பறவையைப் பறக்கவிட்டான். விண்ணையும் மண்ணையும் வலம் வந்து கொண்டிருந்தது பட்சி!

> துரையின் நெஞ்சில் ஒரு கோலம் வரையப் பட்டிருக்கிறது! அது அழியாக் கோலம்! இதயத்தின் ஆழத்திலே தன் பேச்சிலும் மூச்சிலும் அது நிறைந்திருக்கிறது. இளம் உள்ளத்தில் முதன் முதலில் பதிக்கப்படுகின்ற கோலம். வாழ்வின் இறுதி வரை மறைவதே இல்லை. அழிவதே இல்லை. பனித்திரை போன்று சில வேளைகளில் 'அழிந்து விட்டதோ?' எனப் பிரமிப்பூட்டும். அது வெறும் பிரமை.
>
> 'என் மனத்தில் அழியாக் கோலமாக அவளே கோலமிட்டு நித்தியக் குமரியாக நிர்மலா நிலைத்திருக்கிறாள்' என்று அவன் சொல்லிக் கொண்டான். அதை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்வதில் தான் என்ன ஆனந்தம்!"

'அழியாக் கோலம்' என நாவலுக்குச் சூட்டியுள்ள பெயருக்கு நியாயம் செய்வதுபோல் துரைசாமியின் சிந்தனைகளைப் பதிவு செய்கிறார் சண்முகசுந்தரம்.

மரணத்தைத் தழுவும் முத்தாயா, துரையின் மனதில் ஒரு தூரத்து மின்னலாகக் கூடப் பதியாமற் போவது வாசகனின் துயரமாக மிஞ்சுகிறது.

மேலும் சில பாத்திரங்கள்

இந்த நாவலில் கதை நிகழ்வுகளுக்கும் வளர்ச்சிக்கும் காரணமான பல பாத்திரங்கள் ஊடாடுகின்றனர். அவர்களைச் சித்திரப்படுத்துவதற்கு ஆசிரியரின் அனுபவக்கூர்மை பெரிதும் பயன்பட்டிருக்கின்றது.

ராக்கியாக் கவுண்டரின் மூத்தமகன் கிட்டப்பன் பொறுப்பற்ற ஊதாரியாகவும், கிராமத்துச் சண்டியராகவும் வளர்ந்து விடுகிறான். ஒரு சமயம் பட்டைச் சாராயம் குடித்த வெறியில் சுடுகாட்டுக்குப் போன கிட்டப்பன் பிணம் சுமந்து வந்த பாடையில் படுத்துக்கொண்டு, தன் தோழர்களிடம், 'தூங்குங்கடா என்னெயெ! ஊட்டிலிருந்து சுடுகாட்டுக்குக் கொண்டு வருவாங்க. ஆனா, என்னை காட்டிலிருந்து ஊட்டுக்கு கொண்டு போங்கடா' என்றான் அப்படி நிலை கெட்டவன் அவன். ஆனால், நிர்மலாவையும் முத்தாயாவையும் ஒரு சேரப்

பழித்துச் சிகாமணி என்பவன் பேசியபோது, அவனைப் புரட்டி எடுத்து விடுகிறான்.

'இப்ப அவன் தாண்டா புள்ளைகள் மானத்தைக் காப்பாத்தினான்' என்று ஊரார் மெச்சும்படியான செயலைக் கிட்டப்பன் செய்து விடுகிறான்.

அவதாரம் என்ற காரணப் பெயர் பெற்ற ஆறுமுகம் இன்னொரு வகையான மனிதன். அவதாரம் என்று பெயர் வருவதற்கான காரணத்தை அவனே சொல்கிறான். ஒரே சமயத்தில் இரண்டு விதமாக நடந்து கொள்ள அவனால் முடியுமாம்! இழவு வீட்டிலும் கல்யாண வீட்டிலும் ஒரே நேரத்தில் இரண்டு தடவை சாப்பிடுவானாம். வெண்ணெய்க் கடை போலக் கருவாட்டுக் கடையும் வைத்திருந்தானாம். சைவத்தோடு அல்வாவும், அசைவத்தோடு கோழித்தலையும் தின்பானாம். எந்தக் கட்சிக்காரர் கூப்பிட்டாலும் பின்னால் போவானாம், முன்னாலும் போவானாம். இவ்வாறு வேடிக்கையான ஒரு பாத்திரத்தை உலவ விடுகின்றார்.

அந்தச் சின்ன கிராமத்தில் ஈயக்காரன், சங்கீதக்காரன் முதல் வெடுக்கென்று பேசும் மாரக்காள், பேச்சிலேயே மயங்க வைக்கிற 'கலகலப்புப் பிரதிநிதி' நாச்சக்காள் வரை சிறியதும் பெரியதுமான பங்கு வகிக்கும் மனிதர்கள் அழியாக் கோலத்துக்கு வடிவம் சமைக்கின்றனர். ஒரு சில அழிவுகளைப் புலப்படுத்தி, இந்த மனிதர்களின் தனித்துவத்தை அடையாளம் காட்டி விடுகிற லாவகம் சண்முகசுந்தரத்தின் எழுத்துக் கலைக்குக் கட்டியம் கூறுகின்றது.

மொழியின் அழகு

கொங்கு நாட்டின் பேச்சுத் தமிழ் இந்த நாவலிலும் தன் வெற்றிக் கொடியைப் பறக்க விடத் தவறவில்லை. வாசகனைக் கட்டிப்போடும் இந்த மொழியின் அழகு அழியாக் கோலத்திலும் நிறமாலையாகப் பொலிகின்றது.

கத்தரிப் பிஞ்சு பறிக்கும் கணவனைக் கடிந்து கொள்ளும் மாரக்காள்,

> "அது எந்தச் சோடு ஆகும்? உங்க கை சும்மா இருக்காது. பிஞ்சு பொடியைத் தொளாவிப் போடுவீங்க."

என்கிறாள். பிச்சைக்காரன் ராப்பிச்சை கிடைக்காத போது சொல்லுகிறான்:

> "இந்த ஊரிலே மின்னந்தி நேரமே குறுக்கி மொடக்கிக்கிறாங்களே. ராச்சோறே தின்ன மாட்டாங்களா? பாவம் அவுங்களுக்கே இல்லையாட்ட இருக்குது."

முத்தாயாவுக்கு முன்பு பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை மாறிப் போனது குறித்து அவள் தாயாரும் தந்தையும் உரையாடுகிறார்கள்:

> "'நீங்க அன்னைக்கு ஊட்டிலே இருந்திருந்தா இன்னேரம் மாப்பிள்ளை எடுத்திருக்கலாமே! இந்தத் தை நோம்புக்கு பொண்ணு மாப்பிள்ளையும் கூட்டி வந்திருக்கலாமே' என்றாள் மாரக்காள்.
>
> 'அவம் பேச்சை எடுக்காதே! அந்தக் கூறுகெட்ட நாய்க்குக் குடுத்திருந்தா நாம அடியோடு நாசமாப் போயிருப்போம்.'
>
> 'வாயிலே வந்ததெல்லாம் வார்த்தைகளா?' என்றாள் மனைவி ....
>
> 'எத்தனை மாப்பிள்ளை வேணும் சொல்லு! ஒருத்தனுக்கு ஒம்பது பேராக் கொண்டாந்து நிறுத்தரேன்-'
>
> 'சந்தைக்குப் போயி ஆடு புடிச்சாராப்பலே அத்தனை எளிசாச் சொல்லீட்டிங்களே?'
>
> 'பின்னே என்ன பசங்களுக்கா பஞ்சம்?'
>
> 'ஆமாமாம். தென்னை மரத்திலே ஏறிக் காய் போட்றாப்பலே! இட்டேறிக்குள்ளே கெடக் குறாங்க! நானும் தான் பாக்கப் போறேனே'
>
> 'பாத்துக்கிட்டே இரு! காசு இருக்குதிண்ணா முத்தாளைத் தேடிக்கிட்டு நாய்க ஓடியாறாது?'"

சரமாரியாகப் பழமொழிகளும் வழக்குத் தொடர்களும் மண்வாசனையோடு கலந்து வந்து பரிமளிக்கின்றன:

> "சொரக்காய்க்கு உப்பு இல்லீங்கரேன்."

"சத்தியுள்ள சாமியைக் கும்பிட்டுப் புத்தியுள்ள புள்ளையைப் பெத்திருக்க வேணும்."

"தொட்டது தொண்ணூறுக்கும் நீ ஏன் இப்படிப் பேசி வாட்டி வளவெடுக்கிறாய்?"

"சுண்டக் காயிலே வெக்கறது பாதி கடிக்கிறது பாதியா?

"அப்ப... தலைமயிரெல்லாம் பெரட்டுண்ணு சொல்லு."

இயற்கையும் மனிதனும்

இந்த நாவலில் மிக நுட்பமான இயற்கைச் சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன. ஆசிரியருக்கு மிகவும் நெருக்கமான உறவாக இயற்கை திகழ்கின்றது.

> "ஒவ்வொரு மரத்திற்கும் ஒவ்வொரு இசை உண்டு. வேப்ப மரம் காற்றில் அசைகையில் ஒருவித இசையை எழுப்புகிறது. தென்னங்கீற்றுகள் நடனம், பூவரசின் படபடப்பு, வேலா மரங்கள் கூட பெருங்காற்று வீசுகையில், ஒருவித 'கோஷ்டி கானம்' இசைக்கின்றது.

என்று கூறுவதும்,

> "கோவைப் பழம் பழுத்திருந்தால் எங்கிருந்தாலும் தெரிந்துவிடும். ரத்தச் சிவப்பாயிற்றே! மீன்கொத்திப் பறவைகள் போன்று சில சிறுவர்கள் அதற்கென்றே அலைந்து கொண்டிருப்பார்கள். முத்தாயாளுக்குக் கோவைப் பழங்கள் தின்பதில் ஆசை. பழம் பறிக்கும் சாக்கில் வெகுதூரம் வேலியோரமாகப் போய் விடுவாள். சங்கம் புதரும் அங்கே இருந்தது. சங்கம் பழங்கள் வெண்மையாகச் சிறியதாக இருக்கும். கோவைப் பழத்திலாவது கசப்புத் தட்டும். சங்கம் பழம் தேன் போல் இனிக்கும். கொட்டையை வாயிலே வைத்துக் கொண்டு இருக்கலாம். கருஞ்சுக்குட்டிப் பழங்கள் கசப்பாக இருந்தாலும் பழுத்தவை இனிக்கும்."

என்று வருணிப்பதும் இயற்கையை நேசித்தும், கூர்ந்து பார்த்தும் எழுதுபவர் சண்முகசுத்நரம் என்பதற்குச் சான்றாகும். இந்த

இயற்கை பொய்த்துப் போகிறபோது மனிதர்கள் படுகிற துன்பத்தையும் ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கடுமையான பஞ்சம் எப்படி இருக்கும் என்பதையும் அழுத்தமாக நினைப்பூட்டி இருக்கின்றார்.

> ''அறுபதாம் வருஷத்திய பஞ்சத்தைக் கேட்டிருக்கிறாயா? என்று சங்கீதக்காரன் சொல்வான். எங்க பாட்டன் சொல்லி இருக்கிறாரு. சனங்கள் தழை தாம்பைத் தின்று கொண்டு தாக்குப் பிடித்தார்களாம். குருவி குடிக்கக் கிணறுகளில் தண்ணீர் இல்லை. மூணு மைல் நடந்தாவது போய் நொய்யலில் ஊத்துத் தோண்டி அகப்பையில் சுரண்டிக் கொண்டு வந்து எப்படியோ உசிரோடு இருந்தாங்க இல்லையா? கஞ்சித் தொட்டிப் பஞ்சம்! அப்பப்பா! கஞ்சிக்குக் குழந்தைகள் படாத பாடு படும். அப்பக்கூட ஊரைவிட்டு யாரும் போகலை யேடா..."

என்று பஞ்சத்தைக் கோடி காட்டவும் ஆசிரியர் முற்படுகின்றார்.

அழியாக் கோலத்தில் அழிந்து போகிற உறவு துரைசாமியும் நிர்மலாவும் கொண்ட காதல். சின்னஞ்சிறு குழந்தைப் பருவம் தொட்டு முளைவிட்டு வளர்ந்த அன்புப் பயிர் அது. அதனை மீள் பார்வையில் எண்ணிப் பார்க்கிறான் துரைசாமி!

> "தென்னோலையில் ஊதல் செய்து நாதசுரமாக ஊதி நெடு நாட்களாகி விட்டது. சிறு பையன் துரை. நிர்மலா அவனை விடச் சின்னவள்.
>
> 'நம்ம கண்ணாளத்துக்கு நீதான் சீக்கி ஊத வேணும்' என்றாள் அவள்
>
> 'எங்காச்சும் பொண்ணுப் புள்ள பேசுமா?'
>
> இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள் இரண்டு ஊதல்களில் ஒன்று கெட்டுப் போய்விட்டது. அதாவது இசை எழுப்ப மறுத்தது.
>
> 'உன்றதை எனக்குக் குடுக்க மாட்டியா?' என்று அவன் கேட்டான்.
>
> 'எங்கிட்டே கேக்கோணுமா? என்னுதெல்லாம் உன்னுதுதான் 'கேக்காமயே எடுத்துக்கோ' என்றாள்

அவள்.

‘சத்தியமாச் சொல்லு...’

‘சத்தியமாச் சொல்றேன். எப்பவுமே என்னைக் கேக்காமயே என்றதை எடுத்துக்கோ.’"

மழலைப் பருவத்தின் மாயாத கோலங்களை எல்லாம் ‘அழியாக் கோல’த்தின் அவலத்தைப் பெருக வைக்கும் வகையில் ஆர். சண்முகசுந்தரம் தீட்டிக் காட்டுகின்றார்.

அழியாக் கோலம் பல கோணங்களிலும் வைத்துப் பார்க்கும்போது உன்னதம் என்ற எல்லையைத் தொடாவிடினும் உள்ளத்தைக் கவர்கிற படைப்பாகவே நிலைக்கிறது என்று கருதலாம்.

□

6. இரண்டு முக்கியமான நாவல்கள்

1965-ல் '*சட்டி சுட்டது*' நாவலும், *1966*-ல் '*மாயத் தாகம்*' நாவலும் வெளியாயின ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்புக் களில் வெவ்வேறு காரணங்களுக்காக இவ்விரண்டு நாவல் களையும் முக்கியமானவை என்று குறிப்பிடலாம். தலைமுறை இடைவெளி காரணமாகத் தன் குடும்பத்திலிருந்து தனிமைப்பட்டுப் போகிற சாமிக்கவுண்டர் என்ற பாத்திரத்தைச் செதுக்கிச் சிற்பமாகச் செய்திருக்கிற நேர்த்தியினால் 'சட்டி சுட்டது' மறக்க முடியாத இலக்கியமாகிறது.

ஆசிரியரின் தன் வரலாற்றுக் கூறுகளை உள்ளடக்கியது என்று பேசப்படுவதால் 'மாயத்தாகம்' முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனினும் இவ்விரு நாவல்களிலும் கலைத் திறத்தால் முந்துகிறது 'சட்டி சுட்டது' நாவல்.

> "............அறுவடையை (1960) விட, சட்டி சுட்டது என்ற நாவல் மேலும் சிறந்த நாவல்களை அவரால் படைக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு இடமளித்தது."

என்று ஒரு நூற்றாண்டுத் தமிழ் நாவல்களை ஆராய்ந்த சிட்டியும் சிவபாதசுந்தரமும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சட்டி சுட்டது

முதல் பதிப்பில் நாவலுக்கு 'சட்டி சுட்டது' என்று ஆசிரியர் தலைப்பிட்டுள்ளார். ஆனால், *1971*-ல் வெளிவந்த ராணிமுத்துப் பதிப்பில் 'சட்டி சுட்டதடா' என்ற தலைப்புக் காணப்படுகிறது அவர் வாழும்போதே வெளிவந்தது என்பதால் இந்த மாற்றத்தை அவரே செய்திருக்க வாய்ப்பு உண்டு.

ஒரத்தப்பாளையம் கிராமத்தில் மதிப்பிற்குரியவராக வாழ்ந்து வந்தவர் சாமிக்கவுண்டர். ஊருக்குள்ளே பெருமைக்கு உரிய பாரம்பரியமான குடும்பம் அவருடையது தம்முடைய தகப்பனார் காலத்தில் அவர் எதிரில் நின்று கவுண்டர் பேசியதில்லை அத்தனை மரியாதை! பாட்டனார் காலத்தில்

பாட்டன் வீட்டுக்கு வந்தால் தந்தையார் தோட்டம் போய் விடுவார். அவர் தோட்டத்துக்கு வந்தால் இவர் வீட்டுக்குப் போய் விடுவார். 'ஒரே இடத்தில் வேலை இருந்தால் - தெய்வ சன்னிதானத்தில் நிற்பதான உணர்வே கொண்டிருந்தார்' தந்தையார். அந்த மரபில் வந்தவர் சாமிக்கவுண்டர்.

மாரப்பன், பழனியப்பன் என்ற இரு புதல்வர்களை நேசித்து வளர்த்தார். திருப்பூரில் படிக்க வைத்தார். பிள்ளைகள் தீய பழக்கத்துக்கு இரையானபோது நெஞ்சு கொதித்துப் போய்ப் படிப்பை நிறுத்தினார். சில காலம் கழித்து மாரப்பனுக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தபோது அவன் ஓடிப் போய்விட்டான். பல முயற்சிகளுக்குப் பிறகு இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரே வீட்டில் மணம் முடித்து வைத்தார். மருமக்களான சுப்பாக்களும், செல்லாயாளும் பெரிய பண்ணாடியான கவுண்டரை மதிப்பதில்லை. பேரப்பிள்ளைகளிடம் தான் அவர் உயிரை வைத்திருக்கிறார்.

வெறுப்பு முரண்பாடாக முற்றியபோது சாவிக் கொத்தை வீசி எறிந்து விட்டுத் தோட்டத்துக்குக் குடி போய்விட்டார் கவுண்டர். செல்ல மகள் வேலாத்தாள் அவருக்குத் துணையானாள். அந்த இளம் பெண்ணைக் கண்கலங்க வைத்து விட்டோமே என்ற கவலை அவருக்கு.

கடைக்காரப் பொன்னன், கணக்கய்யர், கோழிக்காரக் கந்தன் என அவரால் முன்பு பயன் பெற்றவர்கள் ஓடி ஓடி வந்து உதவினார்கள். பழைய இதயநோய் கவுண்டரைத் தாக்கியபோது இவர்கள் தான் உடனடியாக மருத்துவரை அழைத்து வரத் துணிபுரிகிறார்கள். பிள்ளைகளோ, மருமக்களோ வரவேயில்லை.

இந்தச் சூழலில் தான் மீனாட்சிப் பூசாரிச்சி என்ற குறி சொல்பவரின் மகன் அங்கமுத்து மருத்துவரை அழைத்து வந்து உதவி செய்கிறான். (மாரப்பனுக்கு முதலில் திருமணம் நிச்சயித்தபோது அவன் ஓடிப் போனது அங்கமுத்துவின் தாய் மீனாட்சியோடு தான் என்பது நினைவு கூரத்தக்கது). அங்கமுத்துவின் வருகையை இளைய மகன் பழனியப்பன் விரும்பாமல் அவனைத் தாக்க முயல்கிறான்.

வேலாத்தாள் இச்சூழலில் அங்கமுத்துவோடு காதல் வயப்படுகிறாள். இதனை அறியாத சாமிக்கவுண்டர் அவளுக்கு காடையூரில் மாப்பிள்ளை பார்க்கிறார். நாள் குறிக்கக்

கணக்கய்யரும் வந்து விடுகிறார். அப்போது கண்கலங்கியபடி பெரிய கவுண்டர் அருகில் வந்த வேலாத்தாள், 'ஐயா, நானு இந்த மாப்பிள்ளையைக் கட்டிக்கிலீங்கோ' என்று கூறுகிறாள். 'பின்னே?' என்று பண்ணாடி கேட்டபோது வேலாத்தாள் உறுதியாகச் சொன்னாள்:

'நானு அங்கமுத்தைக் கட்டிக்கிறனுங்க'

இதைக் கேட்டுப் பெரிய கவுண்டர் திடுக்கிட்டு விடவில்லை. 'செரி ஆத்தா' என்றார் பண்ணாடி. அவர் நிதானத்தோடு சொன்னார். கண்கள் சாந்தமாயிருந்தன.

இவ்வாறு கதையைச் சொல்கிறார் சண்முகசுந்தரம்.

கூட்டுக் குடும்பத்தின் சிதைவும், மரபின் தகர்ச்சியும், தலைமுறை இடைவெளியால் தனிமைப்படுதலும், புதிய வாழ்க்கைப் பயணத் தொடக்கமும் சங்கிலித் தொடராக இந்நாவலில் பின்னிக் கிடக்கின்றன.

சாமிக் கவுண்டர்

பெரிய பண்ணாடியின் நிலையும் நினைப்பும் நாவலில் மட்டுமல்ல, நம் நெஞ்சிலும் நிறைகின்றன. வேர்கள் இற்று விழப்போகிற ஒரு பேரால மரமெனக் காட்சி தருகிறார் பண்ணாடி.

'சண்முகசுந்தரத்தின் கிராமங்கள்' என்ற செறிவான கட்டுரையில், தம்மைக் கவர்ந்த நாகம்மாளையும், பண்ணாடியையும் மட்டுமே மையமாக்கிக் கொள்கிறார் சுந்தர ராமசாமி. வாழ்வின் மீது ஆசிரியர் கொண்டுள்ள ஈடுபாட்டின் வெற்றியாக இந்த இரண்டு பாத்திரங்களையும் அவர் காண்கிறார். நாகம்மாள், சட்டி சுட்டது என்னும் இரண்டு நாவல்களே அவரை ஈர்த்திருக்கின்றன என்பதும் இதனால் விளங்குகிறது. (சுந்தர ராமசாமி கட்டுரைகள், ப. 93)

> "பண்ணாடி கிராம மதிப்பீடுகளின் நிறைவான உருவம். ஒதுங்கித் தன்மானத்தோடு வாழவேண்டும் என்று ஆசைப்படும் கிழவர் அவர். குடும்பத்தில் மீது மிகுந்த பாசம். தெரிந்தவர்களுக்கு உபகாரம் செய்வதில் நம்பிக்கை. மண்ணைக் கொத்திக் கிடைப்பதை உண்டு மன நிம்மதியோடு வாழவேண்டும் என்று நினைக்கிறார். இது ஒரு

> பெரிய கனவா? பேராசையா? எதுவுமில்லை. அவர் தேடிய எளிய சந்தோஷம், எளிய திருப்தி அவரைத் தேடி வரவில்லை."

என்று இந்நாவலின் அவலக் கூர்முனையான சாமிக் கவுண்டரைக் குறித்துக் கூறுகின்றார் சுந்தர ராமசாமி. ஒரு மனிதனின் வாழ்நாளில், ஆசைப்படுகிற சாதாரண விருப்பங்கள் கூட நிறைவேறாமல் போவதே சோகமாகிறது என்பதை ஆய்வாளர் சு. சண்முகசுந்தரம் அடிக்கோடிட்டுத் தெரிவிக்கின்றார். **(தமிழில் வட்டார நாவல்கள், ப. 101)**

தன் மக்களைத் தவிர அனைவருடைய அன்புக்கும் முழுமையாகப் பாத்திரமானவர் பெரிய பண்ணாடி. அவர் தனியாகத் தோட்டத்துக்குக் குடி போய்விட்டார் என்பதைக் கேள்விப்பட்ட உடனே கடைக்காரப் பொன்னப்பன் பறந்தோடி வருகிறான். உப்புத் தொட்டுக் கற்பூரம் வரை மளிகைச் சாமான்களைக் கொண்டு வந்து குவித்து விடுகிறான் தன் குழந்தைக்குச் சோறூட்ட மலைக்குப் போவதைத் தள்ளி வைத்துவிட்டு வருகிறான். அவனுடைய ஆண்டவனாகப் பண்ணாடியைக் கருதுகிறான்.

> "புதுக்குடித்தனம் பண்ணாடி ஆரம்பித்திருக்கிறார். அவர் இல்லத்தில் தன் மளிகைச் சாமான்களைக் கொண்டு 'பூஜிப்பதைச்' செய்து, குடும்பத்தோடு மலைக்குச் சென்று சுவாமியை தரிசிப்பதை விடுத்தான். குழந்தைக்குச் 'சோறு ஊட்டும்' விழாவையும் ஒத்தி வைத்துவிட்டான். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுகிற இடத்தில். ஆம். பொன்னப்பன் பண்ணாடி சாளையில் சாமான்களைப் படைத்து மனமாரக் கொண்டாடிக் கொண்டிருந்தான்..."

என்கிறார் ஆசிரியர்.

பண்ணாடியின் கடைசிப் புகலிடமான தோட்டத்தையும் பறித்துக் கொள்ள அவர் மைந்தர்கள் திட்டமிடுவதை அறிந்ததும், அந்த நிலம் சீதனமாக அவர்கள் தாயாருக்கு வந்த சொத்து என்ற உண்மையை நிலை நாட்ட யாரும் சொல்லாமலே அலைகிறார் கணக்கய்யர்.

'வலையங் கூட்டம் ஏனுங்க இப்படிப் பண்ணீட்டாங்க?' என்று பதறிப் போய்த் தேடி வருகிறார் பக்கத்து ஊர்க்காரரான

தேவண கவுண்டர். இப்படி ஊரே பண்ணாடிக்கு அனுதாபப் படுகிறது.

பழைய நினைவுகளும், மகளுக்குக் கடமையை முடிக்க வேண்டுமே என்ற கவலையும் அவரை நித்தமும் போட்டு அலைக்கின்றன. தூக்கத்திலும் பேரப் பிள்ளைகளின் ஞாபகம். கணக்கய்யரிடம், 'மிந்தியாச்சும் ஊட்டுக்குள்ளே இருந்தேன். இப்பப் பாருங்க வீதிக்கே வந்திட்டேன்' என்று சொல்லும்போது வார்த்தைக்குள் தேங்குகிறது வேதனை.

எங்கேயோ குழந்தை அழும் குரலை இரவில் கேட்டால், கவுண்டருக்கும் அழுகை வருகிறது. மனைவி தூங்கும்போது தன் இரண்டு குழந்தைகளையும் மாற்றி மாற்றித் தொட்டிலில் போட்டுத் தாலாட்டிய பழங்கதை நினைவுக்கு வருகிறது.

> "கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தால் துடைத்துக் கொள்ளலாம். உள்ளத்திலிருந்து வழியும்போது எப்படித் துடைப்பது."

என்று ஆசிரியரே பொருமுகின்றார்.

அவர் ஒரு நாளும் குழந்தைகளை அடித்ததில்லை. அவர் அடிக்காவிட்டாலும் புத்திரர்களால் அவர் இதயத்தில் பட்ட அடிகளுக்குக் கணக்கு ஏது? மாணவப் பருவத்திலும் ஏமாற்றினார்கள். திருமணப் பருவத்திலும் வருத்த மூட்டினார்கள். பிள்ளைகள் பெற்ற பின்னும் வேதனைத் தீக்கு விறகு போடுகிறார்கள்.

விதை ஒன்றை போடச் சுரை ஒன்று முளைத்த விபரீதங்களால் நொந்துபோன மனிதரின் ஒரே கவலை அந்த 'வளுசலு'க்கு, செல்ல மகளுக்கு ஒரு மாப்பிள்ளையத் தேடி கொடுப்பதுதான். கிராமத்தின் ஏழைப் பெண்கள்கூட இதை உணர்ந்து பேசுகிறார்கள்:

> "'அப்படி இல்லீக்கா, பொட்டைக் கெரகத்துனாலே நாளதுக்கும் துக்கம் தானக்கா. இப்பப் பாரு, பெரிய பண்ணாடிக்கு வேலாத்தா இல்லீண்ணா சடவே இருக்காதே. எவங்கையிலேயோ அந்தக் கெரகத்தைப் புடிச்சுக் குடுக்குற மட்டும் அவருக்குக் கூட்டிலே உசிரு இருக்குமா? திங்கற சோறு செரிக்குமா?' என்றாள் ராமாயி."

இந்த ஆத்ம வேதனைதான் 'அங்கமுத்துவைக் கட்டிக்

கொள்கிறேன்' என்று வேலாத்தா சொன்னதும், எந்தத் திடுக்கீடும் இல்லாமல் பண்ணாடியை இசைவு தரச் செய்கிறது.

முரண்களின் வெப்பம் தாளாமல் உறவு என்ற சட்டி சுட்டது, கை விட்டது. புதிய சொந்தம், புதிய பந்தம் வந்து விட்டது.

கவித்துவ நுட்பம்

இந்த நாவலில் பல இடங்களில் ஆசிரியர் கவித்துவத்தின் எல்லைகளைத் தொட்டு விடுகிறார். பண்ணாடி உடல் நலிவுற்றுக் கிடந்த இரவை வருணிக்கிறார் ஆசிரியர்:

> "சோகம் தனது பக்க வாத்தியங்களை மீட்டிக் கச்சேரி செய்யக் காத்திருந்தது. சாலையின் எட்டுத் திக்கிலும் தவறிய தாளங்கள்! வேப்ப மரங்கள், நல்ல கட்டத்தில் மட்டும் தலையை அசைத்து 'சபாஷ்' கூறி அமைதியில் ஆழ்ந்திடும் ரசிகனைப் போல் சில சமயம் கிளைகளைப் பலமாக ஆட்டிவிட்டுச் சலனமற்று நின்றுவிடும். புளிய மரங்கள் தெருக் கூத்துப் பாணி! அரச இலைகள் அஞ்சிய சுபாவமுள்ள அபலையின் நெஞ்சம் போன்று படபடத்துக் கொண்டிருந்தன. வாகை கிழுவை மரங்கள் வேருடன் பெயர்கின்ற மாதிரி காற்றைக் கட்டி அணைக்க முயன்று கொண்டிருந்தன."

வறட்சி நீங்கி மழை பொழிந்தால் பசுமை தலை காட்டுவதைச் சித்திரிக்கும் அழகு மனதுக்கு இதமாக அமைகிறது:

> ''வறண்டு கிடந்த இடங்களில் பசுமை தலை காட்டிற்று. ஆலம் தளிர்களும் கன்னிப்பெண் மெள்ளக் கதவைத் திறந்து எட்டிப் பார்ப்பதுபோல் முகம் காட்டிற்று."

சண்முகசுந்தரம் இந்த நாவலில் கையாண்டுள்ள ஓர் உத்தி மிகவும் சிறப்பானது. கதையின் நிகழ்வுகளுக்கும் உணர்ச்சி களுக்கும் ஏற்பக் குப்ப மூப்பனின் பாடல்களை இடையிடையே விரவித் தருகின்றார்.

வயதான குப்பு மூப்பன் இரவு நேரங்களில் நீண்ட கொட்டாவிகளை விடுவான் கொட்டாவி நின்றால் பாடப் போகிறான் என்று பொருள். சோதிடமும் ரேகைக் கணிப்பும்

தெரிந்த பெரிய கவுண்டர் தன் வாழ்வின் சோதனைகளை உணராமற் போனதைச் சுட்டிக்காட்டுவது போல் ஒரு நாள் பாடுகிறான்:

"பழமை படிச்சவங்க
பண்டிதத்தால் வெண்ணவிங்க
உங்க பழமை பலிக்கலியே
உங்க பண்டிதங்க வெல்லலியே"

இப்படிப் பொருத்தமான இடங்களில் மூப்பனின் பாடல்கள் உணர்ச்சிப் பின்புலமாக ஒலிக்கின்றன.

பளிச்சென்று மின்னும் பழமொழிகளுக்குக் கணக்கே இல்லை. கதைப் போக்கையும், உரையாடலையும் மெருகுபடுத்துவதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

"ஐங்காதம் போனாலும்
தன் பாவம் தன்னோடே"

"வெளம்பா முண்டை வெறகுக்குப் போனா
வெறகு சிக்குனாலும் கொடி சிக்காது."

"வாய் சக்கரையா இருந்தாப் போதுமிங்களா?
கை கொக்கரை."

"தாய்க்கும் புள்ளைக்கும் என்னய்யா கிடக்குது?
சட்டியோடே பானை முட்டாமலா போகப்
போகுது?"

இவ்வாறு 'நறுக்'கென்றும், 'சுருக்'கென்றும் சொலவடைகள் உரிய இடங்களில் வந்து குந்திக் கொள்கின்றன.

சண்முகசுந்தரத்தின் நாவல்களில் 'சட்டி சுட்டது' மாறுபட்ட ஒரு அடிக்கருத்தைக் கொண்டிருக்கிறது. நெஞ்சின் மீது ஒரு மலையைத் தூக்கி வைத்தது போன்ற ஒரு சோகத்தை அல்லும் பகலும் அலைபாய்கின்ற சாமிக்கவுண்டரின் வடிவத்தில் ஆசிரியர் படைத்துத் தந்திருக்கின்றார். பாலை ஊற்றிய புற்றிலிருந்து நஞ்சு கக்குகிற நாகம் புறப்பட்டு வந்த சோகம் அது!

மாயத்தாகம்

மகாகவி பாரதியார் கவிதையிலிருந்து பெற்ற சொல் 'மாயத்தாகம்.' தன் சொந்த வரலாற்றை 'ஸ்வசரிதை' என்று எழுதத் தொடங்கி நாற்பத்தொன்பது பாடல்களோடு நிறுத்திக்

கொண்டார் பாரதியார். அப்பாடல்களில் ஒரு பகுதியில் அவர் தன் தந்தையார் தேடும் பொருள் தேடும் வெறியில் மயங்கிப் பெரும் இழப்புக்குள்ளான செய்தியை விவரித்துள்ளார்.

"தீய மாய உலகிடை ஒன்றினில்
சிந்தை செய்து விடாயுறுங்கால் அதை
வாயடங்க மென் மேலும் பருகினும்
மாயத்தாகம் தவிர்வது கண்டிலம்."*

என்று தீராத பொருள் வேட்கையை மாயத்தாகம் என்று உருவகப்படுத்துவார் பாரதியார்.

இந்த ஸ்வசரிதை ஒருவேளை ஆர். சண்முகசுந்தரத்தையும் தன் வரலாற்று நாவல் ஒன்றை எழுதத் தூண்டியிருக்கலாம். எவ்வாறாயினும் பருகப் பருக வளரும் தாகத்தை மாயத்தாகம் என்று குறிப்பிடும் உருவகமும், தன்னுடைய வாழ்வில் சந்திந்த பொருள் வேட்கையும் பொருந்துகின்ற காரணத்தால் இப்படி ஒரு நாவல் பிறந்திருக்கக்கூடும்.

தன் வரலாற்றுக் கூறுகள்

நெகிழ்ந்த பின்னலாக அமைந்திருக்கும் இந்த நாவலின் தனித்தன்மை - ஆசிரியரின் தன் வரலாற்றுக் கூறுகளை உள்ளடக்கி இருப்பதுதான். ஆசிரியரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவரும், 'ஆர். சண்முகசுந்தரத்தின் கொங்கு மணம் கமழும் நாவல்கள்' என்னும் நூலைப் படைத்தவருமாகிய டி.சி. ராமசாமி, ஆசிரியரின் 'சில காலக்கட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது இந்நாவல் என்று கருதுகின்றார். நிறைவு தரும் நாவல் என்று சொல்ல முடியாவிட்டாலும், 'அவரைப் புரிந்து கொள்ள, அவரது படைப்புகளைப் புரிந்து கொள்ள இந்த நாவலை ஒரு திறவுகோல் என்று சொல்லலாம்' என்று குறிப்பிடுகின்றார். இதனை அவர் விளக்கவில்லை. ஆயினும் சில பொருத்தங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

'மாயத்தாகம்' நாவலின் நாயகன் ஆறுமுகம், சண்முகசுந்தரம் என்றும், வள்ளி - அவர் மனைவி வள்ளியம்மாள் என்றும், அருணாசலம் - அவர் தந்தை இரத்தினாசலம் என்றும், கோபாலன் - அவர் மைத்துனரே என்றும் தெரிவிக்கின்றார்.

* பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், ப. 222.

மனைவியின் ஊர் தளாபாளையம் என்பதும் பொருத்தமாக உள்ளது.

கீரனூரைச் சேர்ந்த ஆறுமுகமும் மாணிக்கமும் நண்பர்கள். இருவரும் கூட்டாகத் தொழில் செய்கிறார்கள். மாணிக்கத்துக்குப் பெண் பார்த்த கையோடு, தானும் தளாபாளையம் வள்ளியைத் திருமணம் செய்து கொள்கிறான் ஆறுமுகம். பஞ்சு மில் நடத்திக் கொண்டு செழிப்பாக இருந்த நண்பர்களில் ஒருவனான மாணிக்கம் தன் சொத்துக்களை ஒழுங்கு செய்யும் பொருட்டுப் பினாங்கு சென்று விடுகிறான். இரக்க குணமே வடிவெடுத்த ஆறுமுகம், பொருளாதார நுட்பங்களில் தடுமாறிக் கடனாளி ஆகிறான் மாமனார் வீட்டுக்கு வந்து மதிப்பின்றி வாழ்கிறான். மூன்று மாதம் கழித்து, மைத்துனன் ஏளனத்தையும் பொருட் படுத்தாது மனைவியுடன் கீரனூருக்கே செல்லுகிறான். அவன் பையில், பணத்தோடு வந்து அவனுக்கு உதவுவதாக மாணிக்கம் எழுதிய கடிதம் வீற்றிருக்கிறது.

மாயத்தாகம் என்ற தலைப்பை நியாயப்படுத்தும் வகையில் ஆசிரியர் ஆறுமுகத்தின் பொருள் வேட்கை குறித்து எழுதுகின்றார்:

> "உண்மையில் ஆறுமுகத்தின் நினைவுகள் பொருள் இருக்கும் இடத்தையே நாடி நின்றன. பொருள் வந்த போதும் - ஒரு இடைவிடாத சொல்லுக்கு அடங்காத - இனி என்ன நடக்கப் போகிறதென்ற நிச்சயமான முடிவும் அவன் கண்களுக்குத் தெரிய வில்லை. செல்வத்தை இழந்த பின்னரும் 'அடுத்தது என்ன?' என்பதைத் தீர்மானிப்பது அசாத்திய மாகவே இருந்தது. ஆனால், இந்த 'மாயத்தாகம்' எங்கே உற்பத்தியாகிறது? எதுவரை இதன் 'சூடு' அவனை வாட்டிக் கொண்டே இருக்கும் என்று எண்ண நா வறண்டது!"

சொந்த அனுபவங்கள்

கதை நெடுகிலும், பெயர்களையும் ஊர்களையும் தாண்டித் தன் வரலாற்றுக் குறிப்புக்கள் சில பளிச்சிடுகின்றன. நூலின் முன்னுரையும் இதற்கு விதிவிலக்கல்ல

> "இதுவரையிலும் பத்துப் பன்னிரண்டு சொந்த நாவல்கள் எழுதி இருக்கிறேன் எல்லாவற்றிலும்

> இது எனக்குப் பரிபூரண திருப்தியை அளித்தது. அதற்குக் காரணங்கள் பலப்பல! உள்ளத்தை வேக வைத்துக் கொண்டிருந்த வேட்கை, உள்ளுக்குள் கும்மாளமிட்ட உவகை, தாபம், தவிப்பு, மகிழ்ச்சி, மனோகரம் - யாவுமே இதனுள் மண்டிக் கிடக்கிறது. **சொந்த அனுபவங்கள்** சுகமாக இழைந்து செல்வதனால் அதிலே ஒரு இன்பம்!"

என்னும் முன்னுரை வரிகளில் இது தெளிவாகின்றது. 'சொந்த அனுபவங்கள்' என்று வெளிப்படையாகவே குறிப்பிட்டு இருக்கிறார். அலைக்கழிக்கும் பொருள் ஆசையாகிற மாயத் தாகத்தைத்தான், 'உள்ளத்தை வேக வைத்துக் கொண்டிருந்த வேட்கை' என்கிறார். வள்ளியை மணந்த குதூகலம் தான் 'கும்மாளமிட்ட உவகை... தாபம்... தவிப்பு... மகிழ்ச்சி... மனோகரம்' ஆகிறது. ஆர். சண்முகசுந்தரத்தின் இளமைக்கால வாழ்வின் சில பகுதிகள் இந்நாவலில் இடம் பெற்றிருக்கிறது என்று ஊகிக்கலாம்.

நாவலாசிரியர் சின்ன வயதிலேயே தாயாரை இழந்தவர். இந்த நாவலில் வரும் ஆறுமுகமும் அப்படித்தான்.

> "ஆறுமுகத்திற்குத் தனது தாயார் பற்றி அதிகமாகத் தெரியாது. சிறுவயதிலேயே, அதாவது ஆறுமுகத்தின் ஆறாவது வயதிலேயே தாயார் இறந்துவிட்டாள்... தனக்குத் தாயார் இல்லை யென்றோ, அல்லது தாயாரை நினைத்தோ அவன் ஒருநாளும் வருந்தியது கிடையாது. அம்மாதிரி சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டதில்லை. பாட்டி! பாட்டி! எதற்கும் பாட்டிதான்! பாட்டி தான் அவனது தாயார். சகலமும் அவனுக்குப் பாட்டிதான்."

சண்முகசுந்தரம் பாட்டியின் அரவணைப்பில்தான் வளர்ந்தார் என்பதை அவர் வரலாறு கூறும். சின்ன வயதிலிருந்தே புத்தகம் படிக்கிற பழக்கம் கொண்டிருந்த சண்முகசுந்தரத்தையே ஆறுமுகமும் பிரதிபலிக்கின்றார். இசையிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது.

> "சிறுவயதிலிருந்தே அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தைக் கேட்டுக் கேட்டுப் பழக்கம்

> அவனுக்கு, இசைக்கும் கீரனூருக்கும் நீண்ட நெடுங்காலமாகவே இறுக்கமான ஒரு இணைப்பு. ஆம், வறண்ட பிரதேசத்தைச் சார்ந்த அவர்கள், இணைபிரியாச் சோகத்தைத் துரத்தியடிக்கச் சரியான கருவியாக கானத்தை அப்யசிக்கக் கற்றுக் கொண்டிருந்தார்கள்.

என்னும் செய்தி ஆறுமுகத்துக்கு மட்டுமல்ல, நூலாசிரியருக்கும் மெத்தப் பொருந்தும்.

> "சென்னையில் இருந்த போதும் சரி, ஊருக்கு வந்த பின்னரும் புத்தகங்ககளை விட்டுப் பிரியாமல் இருந்தான். படிப்பது, படித்தவற்றைப் பற்றிச் சிந்திப்பது, அவனுடைய உண்மையான பொழுதுபோக்கு..."

என்ற கூற்றும் தன்னையே அவர் படம்பிடித்துக் கொண்டதற்கு அடையாளம். ஆர். சண்முகசுந்தரம் வெற்றிலைப் பிரியர். ஆறுமுகத்துக்கும் 'மாமரத்து நிழலில் கட்டிலைப் போட்டு உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டே இருந்தால் போதும்!'

தந்தையார், பாட்டி, வள்ளி பற்றிய செய்திகள் எல்லாம் ஆசிரியரின் வாழ்வோடு மிக நெருக்கம் கொண்டவை. அனுபவங்கள் தான் படைப்புகள் ஆகின்றன என்பது உண்மை. ஆயினும், 'மாயத்தாகம்' நாவலைப் பொறுத்தவரை ஆசிரியரின் சொந்த வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களே கதைக்கு வலுவும் வனப்பும் தந்திருக்கின்றன என்பது தெளிவு.

அதன் காரணமாகவே தவிர்க்க இயலாத படைப்பாகிறது மாயத்தாகம்.

□

7. பிற படைப்புக்கள்

நாவல்கள்

ஆர். சண்முகசுந்தரம் எழுதிய நாவல்கள் அனைத்தும் கிடைக்கப் பெறாத நிலையில் அவர் எத்தனை நாவல்கள் எழுதினார் என்பது குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

நாவல்களின் எண்ணிக்கை இருபத்தொன்று என்று குறித்த போதிலும் இருபது நூல்களின் பட்டியலையே டி.சி. ராமசாமி தந்திருக்கிறார்.* சண்முகசுந்தரத்தின் நாவல்களை ஆய்வு செய்த மு. ஜான்சிராணி தன் ஆய்வேட்டில் இருபத்தொரு நாவல்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளார்.**

எனினும் இருவர் பட்டியலிலும் வேறுபாடு உண்டு. டி.சி. ராமசாமியின் நூலில், தந்துள்ள இருபது நாவல்களில் **'எதிர் வீட்டு ஜன்னல்' (1964), 'தேன்மழை' (1963)** ஆகிய இரு நூல்கள் இடம் பெறுகின்றன. இவை இரண்டும் இரண்டாமவர் பட்டியலில் இல்லை. அதற்கு மாறாக, **புது வாழ்வு (1961), புதுக்கிளை (1968), மலர்கள் மலரவில்லை (1968)** ஆகிய வேறு நூல்கள் இடம் பெற்றுள்ளன. அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த புகழ் பெற்ற ஒரு எழுத்தாளரின் படைப்புகள் பற்றிய தகவல்கள் முரண்பாடாக இருப்பது வியப்பூட்டுகிறது.

இதனிடையே கல்கத்தா நகரப் பின்னணியில் எழுந்துள்ள சூழலையும், பிறவற்றையும் ஆராய்ந்து, 'மலர்கள் மலரவில்லை நாவல் சண்முகசுந்தரத்தின் சொந்த நாவலாக இருக்க முடியாது என்ற கருத்து வலுப்படுகிறது' என்றும் மு. ஜான்சிராணி குறிப்பது குழப்பத்தை மிகுவிக்கின்றது.

---

* டி.சி. ராமசாமி, ஆர். சண்முகசுந்தரத்தின் கொங்கு மணம் கமழும் நாவல்கள், ப. 38-40.

** மு. ஜான்சிராணி, ஆர். சண்முகசுந்தரம் நாவல்கள் - ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், (ப. 32), 1986.

இந்நிலையில் டி.சி. ராமசாமி தந்துள்ள பட்டிலை ஏற்புடையதாகக் கருதலாம். (காண்க - இணைப்பு)

1961-ல் வெளிவந்த **'இதய தாகம்'** நாவலைத் தொடர்ந்து **'எண்ணம்போல் வாழ்வு' (1963), 'தேன்மழை' (1963), 'எதிர் வீட்டு ஜன்னல்' (1964), 'காணாச்சுனை' (1965), 'மாலினி' (1965), 'அதுவா? இதுவா?' (1966), 'ஆசையும் நேசமும்' (1967), 'தனிவழி' (1967), 'மனநிழல்' (1967), 'மூன்று அழைப்புகள் (1969), 'வரவேற்பு' (1969), 'உதயதாரகை' (1969)** ஆகிய நாவல்கள் வெளிவந்தன.

1961-க்கு முன் வெளிவந்த **நாகம்மாள், பூவும் பிஞ்சும், பனித்துளி, அறுவடை** நாவல்கள் குறித்தும், பின்னர் வெளிவந்த **அழியாக்கோலம், சட்டி சுட்டது, மாயத்தாகம்** நாவல்கள் குறித்தும் முன் இயல்களில் கண்டோம். பிற படைப்புகள் பற்றிக் கிடைக்கும் செய்திகள் இங்கு முன் வைக்கப்படுகின்றன.

இதயதாகம்

இதயதாகம் **1961**-ல் வெளிவந்தது. சந்திரன்-கமலா, ரங்கசாமி -காந்திமதி ஆகியோர் தங்கள் இதயத்தில் எழும் காதலால் ஏற்படுத்திக் கொள்ளும் தாகத்தை இந்நாவல் சித்திரிக்கிறது. கிராமங்களின் இதயத்துக்குள் பயணம் செய்து கொண்டிருந்த ஆசிரியர் சற்றே விலகி, நகர வாழ்வுக்குள் நுழைந்து பார்க்கும் முயற்சியாக இக்கதை அமைந்துள்ளது. இந்த முயற்சி அவருக்கு வெற்றியாக அமையவில்லை என்று தோன்றுகிறது.

சாவடிப்பாளையம் முருகேச முதலியார், காமாட்சி தம்பதிகளின் மகள் கமலா, அவள் கோடை விடுமுறைக்கு ஊர் வந்த வேளையில், அவள் சிற்றப்பா மகன் ரங்கசாமி வயிற்றுக் கோளாறுக்காகக் கோவையில் சிகிச்சை பெறுகிறான். இரண்டொரு நாளில் ஊர் திரும்பவுள்ள அவனைத் தேடி அவ்வூருக்கு நண்பன் சந்திரன் வருகிறான். ரங்கசாமி திரும்பவிருப்பதால் அவ்வூரிலேயே காத்திருக்கிறான். அப்போது கமலாவிடம் அன்பு பூணுகிறான்.

பின்னர் மூவரும் படிப்பைத் தொடரக் கோவை வருகின்றனர். கமலா மாணவியர் இல்லத்திலும், ரங்கசாமி சந்திரனுடன் தனி வீட்டிலும் இருந்து பயிலுகின்றனர் எதிர் வீட்டு காந்திமதி என்ற இளம் பெண்ணும் ரங்கசாமியும் நெருங்கிப் பழகுகின்றனர் இதனைச் சந்திரன் விரும்பவில்லை.

அதே சமயம், ரங்கசாமியும், கமலாவும் ஒருநாள் தன்னிடம் பேசி பேச்சு, கேலியாகப்பட்டதால் சந்திரன் வீட்டை விட்டுப் போகிறான். ஒருநாள் கருக்கலைப்புச் செய்யும் ஒரு மருத்துவ மனையிலிருந்து கமலா வருவதைப் பார்த்ததும், சந்திரன் அதிர்ச்சி அடைகிறான். ஊரைவிட்டு வெளியேற ரயில் ஏறுகிறான். செய்தி அறிந்து ஓடிவந்த ரங்கசாமி, 'எங்கே போகிறாய்...?' என்று கேட்க, 'எனக்கே தெரியாது' என்கிறான். ரயில் வேகம் கொள்கிறது.

காதலில் ஏற்படும் ஏமாற்றம் மனமுறிவாக உருவாவதை இக்கதையில் காண்கிறோம். எனினும் கிராமத்து மண்ணை லாவகமாக வலம் வரும் ஆசிரியரால் இந்த நகரத்துக் கதையில் வெற்றி பெற இயலவில்லை.

காணாச்சுனை

1965-ல் வெளிவந்த 'காணாச்சுனை' அழகான தலைப்பினைக் கொண்டு விளங்குகிறது.

சிவன்மலை முருகேச முதலியார் தம்பதிகளுக்கு மகப்பேறு இல்லை. தம்பி மகன் கதிர்வேலு, மகள் கமலா இருவரையும் அன்போடு வளர்த்தார்கள். கதிர்வேலு பட்டதாரி... கமலா கல்லூரி மாணவி.

அதே ஊரைச் சேர்ந்த நாராயணசாமி முதலியார் மகள் லட்சுமியைக் கதிர்வேலு காதலித்தான். பெற்றோர்களுக்கும் திருமணத்தை நடத்த விருப்பம்தான். இடையில் நாராயணசாமி முதலியாருக்கு ஓர் ஆசை வந்தது. ஊர் சுற்றியான தன் மகன் நடராசனுக்குக் கதிர்வேலுவின் தங்கை கமலாவையும் மணம் முடித்தால் சொத்து முழுவதும் வந்துவிடுமே! முருகேச முதலியார் மறுத்துவிட்டதால், நாராயணசாமி முதலியார் அண்ணன் தம்பிகளைப் பிரிக்க முயற்சி செய்தார்.

எல்லாச் சூழ்நிலையோடும், கதிர்வேலு - லட்சுமி காதலையும் உணர்ந்த கமலா அண்ணனுக்கு மணம் முடிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்துப் பெரியப்பாவுக்குக் கடிதம் எழுதுகிறாள். அதற்கு முன்னால் தன்னைச் சந்திக்க வந்த நடராசனை, 'சீ... நாயே' என்று விரட்டி அனுப்பி விடுகிறாள். இந்தக் கடிதம் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகிறது.

கமலா என்ற அறிவாளியான பெண்ணைச் சுற்றி கதை நடந்த போதிலும் பேதைப் பெண் லட்சுமியின் காதலை வெற்றி பெறச் செய்கிற முயற்சியே முதன்மை பெறுகிறது. அவளுடைய மனதில் மறைந்து கிடக்கும் காதலே காணாச் சுனையாகிறது. கதிர்வேலுவின் உள்ளத்துக்குள்ளும் காதல் வெளிச்சம் காணாமல் மறைந்துதான் கிடக்கிறது. ஆசிரியர் கூறுகிறார்:

> "..... கதிர்வேலுவே தங்கள் இனித்த இரகசியச் சந்திப்புகளையும் அமுதமொழிகளையும் அடுக்கடுக்காக அங்கே சிந்திச் சிதற விட்டானாம். அப்படியானால் எவ்வளவு ஆசை மண்டிக் கிடக்கவேணும் அவன் மனக்கடலுள்! ஆனால் அத்தனையும் கற்பனை! இவள்தான் என்ன இளைத்தவளா? சரியாக ஈடு கொடுத்தாளே! ஏகாந்தமே இவர்களது இதயத்தின் மணிமொழிகளில் மயங்கிக் கட்டுண்டு கிடந்ததென்று காதல் கோலமிட்டாள்! அது கற்பனை அல்லாமல் வேறென்ன? இரண்டுமே கற்பனை என்றாலும் இருவர் நெஞ்சங்களிலும் சுரந்து, ததும்பி, பொங்கி வழிந்து கொண்டிருக்கும் அன்பின் அனுராகத்தின் மெல்லொலியும் ஒரு மாயமயக்கமா? காணாச்சுனை தானா? கண்களுக்குக் கைக்கு அது வசப்படாதா எந்நாளும்?"

குடும்பத்தை இரு கூறாக்கக் கத்தியைத் தீட்டி கொண்டிருக்கும் நாராணயசாமி முதலியார், மகளின் மனதில் மறைந்து கிடக்கும் காதலை அறியாமல் சூழ்ச்சி செய்கிறார்.

முதலில் கமலாவின் கடிதம் சிக்கல்களைத் தீர்க்க உதவுகிறது. அனைவரையும் அதில் விமர்சிக்கிறாள். அப்பாவை, அம்மாவை, பெரியப்பாவை, பெரியம்மாவை, அண்ணனை, நாராயணசாமி முதலியாரை..... யாரையும் விட்டு வைக்கவில்லை. உள்ளுக்குள் கொழுந்து விட்டெரியும் வெப்பத்தில் 'நமது குடும்ப மலர் வாடி வதங்குவதாகக் காண்கிறேன்' என்று எழுதுகிறாள்.

> "புகழின் சிகரத்தை எட்டிப் பிடித்த பெரியார்கள் தங்கள் புதல்வியருக்கு மடல்கள் விடுத்திருக்கிறார்கள். ஆனால், எந்தப் புதல்வியாவது தன் அப்பாவுக்கு லிகிதங்கள் விடுத்தது இலக்கியத்தில்

பதிவாகி இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை."

என்று கமலா கடிதத்தில் எழுதும்போது, அவளுடைய பொது அறிவும், உலக ஞானமும் வெளிப்படுகின்றன.

சிவன்மலையில் காணாச்சுனையும், கரு நொச்சியும் உண்டு என்றும், அந்த இரண்டையும் காண முடிந்தவர்களுக்குச் சித்தர்களும் தட்டுப்படுவார்கள் என்றும் ஒரு ஐதீகம். அதனை மனதில் வாங்கிக் கொண்ட ஆர். சண்முகசுந்தரம் அது குறித்தும் விவாதிக்கிறார். (ப. 107). இந்த ஐதீகமே மறை மனதின் உட்பொதிந்த காதலுக்கு உருவகமாகி நாவலுக்கும் பெயரைத் தந்து விட்டது.

இந்த நாவலில் கமலம் மறக்க முடியாத பாத்திரம். ஆங்கிலக் கவி பிரௌனிங் போலப் படிக்க ஆசைப்படுகிறாள். உலக சமாதானப் பணியில் ஈடுபட விரும்புகிறாள். மாறுபட்ட பாத்திரம் - கமலம். அவள் கடிதமே இந்நாவலுக்கு முத்தாய்ப்பு.

மாலினி

1965-ம் ஆண்டிலேயே வெளிவந்த மற்றொரு நாவல் 'மாலினி.' ஒரு முக்கோணக் காதல் கதை இது. கோவை நகரவாசியான ரவி, தான் பழக நேர்ந்த மாலினி, சுஜா என்னும் இருவருடைய அன்புக்கும் பாத்திரமாகிறான். மாலினி, ஒரு செல்வக் குடும்பத்தின் வாரிசு. சுஜா, சிரமத்துக்கிடையே தந்தையால் படிக்க வைக்கப்படும் ஏழைப்பெண்.

இருவரது பண்புகளும் வேறுபட்டவை. மாலினி, சுழன்றடிக்கும் காற்று. சுஜா தெளிந்த தண்ணீர். நாளடைவில் மாலினியின் அதிகாரமும் பகட்டும் சலித்துப்போய், சுஜாவை மிகுதியாக நேசிக்கிறான் ரவி. இதனால் மாலினி பொறாமைக்கு இரையாகிறாள்.

சுஜாவைக் குறித்துப் பல்வேறு வகையான பழிகளைச் சுமத்துகிறாள். ஆயினும் மாலினியை அறிந்த ரவி தன் காதலில் மாறுபடவில்லை. இதனால் ஏமாற்றமுற்ற மாலினி, ரவியை வெறுக்கிறாள். சுஜாவின் எதிர்காலத்தை அழிக்க முற்படுகிறாள்.

ஒரு சமயம் மதுரை சென்றபோது, சுஜாவின் தந்தை பணியாற்றும் நிறுவனத் தலைவரின் மகன் ஆனந்தனை, ரவி சந்திக்கிறான். அவன் மூலம் சுஜாவுக்குத் திருமணம் என

அறிகிறான். திருப்பூருக்கு விரைந்து சென்று சுஜாவின் இல்லம் சென்றபோது, தனக்கும் சுஜாவுக்கும் திருமணம் என்ற அழைப்பிதழைப் பார்த்துத் திகைக்கிறான். தன்னைத் தேடி சுஜா மதுரை சென்றதறிந்து அவனும் செல்கிறான். இடையே சந்தித்த சூழ்ச்சிக்காரியான மாலினி மேலும் சுஜாவைப் பழிக்கிறாள்.

மதுரையில் சுஜா மனம் நொந்து கிடப்பதைப் பார்க்கிறான். என்ன சொல்லியும் ஆறுதல் பெறாத சுஜா மரணமுறுகிறாள். ரவி காணாமல் போன தாயைத் தேடி ஆறுதல் பெற முயல்கிறான்.

இந்தக் கதை சண்முகசுந்தரத்தின் இயல்பான கதைப் பாணிக்கு முற்றிலும் முரண்பட்டது. எனவே சரளமான ஓட்டமோ, சாரமான கதையோ இல்லாமல் காட்சி தருகின்றது.

அதுவா? இதுவா?

1969-ம் ஆண்டு வரை சண்முகசுந்தரத்தின் எழுத்துப் பணி தொடர்ந்தது என்பதற்கு அடையாளமாகவே சில நாவல்கள் வெளிவந்தன. 1966-ல், 'அதுவா? இதுவா?' என்ற சிறிய நாவல் வெளிவந்தது.

படியூர் விவசாயி குருசாமி முதலியாரின் மகள் அருக்காணி சூட்டிகை மிகுந்தவள். அவளுக்குத் தந்தையின் நண்பர் ராமண கவுண்டர் மகள் ருக்மணியோடு நெருங்கிய நட்பு இருந்தது.

> "அருக்காணி மின்னற்கொழுந்து! ருக்கு நீண்ட சாபூத்தான மேகத்துண்டு! அது ரோஜா. இது கள்ளிப் பூ."

என்று அடையாளம் காட்டுவார் ஆசிரியர். மேற்படிப்புக்காகத் திருப்பூரில் சிற்றப்பா வீடு சென்று விடுகிறாள் அருக்காணி. உயர்நிலைப் பள்ளி படித்து வருகையில் படியூரில் உள்ள மணியைக் காதலிக்கிறாள்.

அவளுடைய திருமணம் சம்பந்தமாகத் திருப்பதியில் வேண்டுதல் செய்யச் சிற்றப்பாவும் சின்னமாவும் புறப் படுகிறார்கள். அவள் அவர்களுடன் செல்லவில்லை மாறாகப் படியூர் சென்று மணியுடன் ஓடிவிடத் திட்டமிடுகிறாள். வேறு காரணத்துக்காக ருக்கு தற்கொலை செய்து கொண்ட செய்தியையும் தாங்கிக் கொள்கிறாள் போட்டோக் கடை விஷயமாகக் கைது செய்யப்பட்டதே, மணி உரிய நேரத்தில்

ரயிலடிக்கு வராததற்குக் காரணம் என்று சொல்ல வருகிறான் இளைஞன் காளிமுத்து.

ரயில் நிலையத்தில் மணிக்காகக் காத்திருப்பவளிடம் காளிமுத்து செய்தி சொல்ல வந்தபோது நிகழ்ந்ததை ஆசிரியர் கூறுகிறார்:

> ''அருக்காணியின் கண்கள் கூர்மை மிக்கது. காளிமுத்துவைக் கண்டதும் களிப்புக் கடலில் மிதந்தாள். அடுத்து வருவான் மணி - 'அதுதான் இல்லை' என்பதை அவள் அறியாள்.
>
> விவரத்தைக் கேட்டாள். இனி, மணி வரமாட்டான். ஆம்... வரமாட்டான் என்று முணுமுணுத்தது மனம் 'அடுத்தபடியாக என்ன செய்யப் போகிறோம்?' அந்தக் கேள்விக்கு 'அதுவா? இதுவா?' என்று அவள் மனம் மயங்கவில்லை. எதிலும் விரைவாக ஒரு முடிவுக்கு வந்துவிடுவாள். தோல்வியை 'தூ' என்று தள்ளும் சுபாவம்! தங்கப் பூட்டைத் திறக்க வெள்ளிச்சாவிதான் வேண்டுமா?
>
> காளிமுத்துவைப் பார்த்தாள். அடிக்கும் தலைக்கும் ஊடுருவினாள், நல்ல இளைஞன். நல்ல தேகக்கட்டு.
>
> 'புறப்படு முத்து! போவோம்' என்றாள் அருக்காணி. அவன் புரிந்து கொண்டான். அருக்காணியின் வாழ்க்கை வண்டி பிரயாணத்தைத் தொடங்கி விட்டது. இனி போகப் போகத்தான் தெரியும் சவாரியின் சுகம்."

இப்படி முடிகிறது இந்த நாவல். என்னதான் அருக்காணி துணிச்சல் மிக்கவள் என்றாலும், ஒருவனைக் காதலித்து இன்னொருவனைக் கூட்டிக்கொண்டு ஓடுவாளா? என்ற வினா விசுவரூபமாய் நமக்குள் எழுகிறது. ஒரு பெண் எப்படியும் முடிவு எடுப்பாள் என்ற அனுபவத்தில் கண்டதனாலோ என்னவோ, ஆசிரியர் சட்டென்று கதையை முடித்து விடுகிறார்.

'அதுவா? இதுவா?' என்ற கேள்விக்கு அசுர வேகத்தில் பதில் வந்து விடுவது மிகவும் வியப்பளிக்கிறது. கதையைவிட முடிவு திகைப்பூட்டுகிறது.

தனி வழி

1967-ல் எழுதப்பட்ட நாவல் 'தனி வழி.'

மீண்டும் சண்முகசுந்தரம் கீரனூரை நோக்கி பயணம் செல்ல இந்த நாவல் உதவுகிறது. எனினும் இக்கதை கிராமங்களின் சிதைவையும் நகரங்களின் ஆதிக்கத்தையும் புலப்படுத்தும் முயற்சியையே சித்திரிக்கின்றது.

கீரனூர் நாச்சியப்பன் வண்டி ஓட்டிப் பிழைப்பவன். அசல் கிராமத்தின் அடையாளச் சின்னம். வண்டி கவிழ்ந்து கால் முறிந்து போனதால் சிங்காநல்லூருக்கு மகன் கிட்டப்பனோடு வந்து தங்குகிறான். தன் நண்பன் கருப்பணன் உதவியால் கிட்டப்பனைப் பஞ்சாலையில் வேலைக்குச் சேர்த்து விடுகிறான்.

நாச்சியப்பனுக்கு நகரமும், அதன் சந்தடியும், வாழ்க்கை முறையும் சற்றும் பிடிக்கவில்லை. ஆனால், கிட்டப்பன் ஆலைப் பணியில் ஒன்றிவிடுகிறான். காலம் செல்லச் செல்ல வேலைக்குச் சேர்த்த கருப்பணனையும் அவன் தொழிற்சங்கத் தலைமையையும் எதிர்த்துப் பேசவும் தொடங்கினான். நாச்சியப்பன் கிராமவாசியதலால் இதனை வெறுத்தான். ஆனால், நகரம் போட்டிகளின் உலகம் அல்லவா? ஆகவே கிட்டப்பன் செயல், அவனுக்கு நியாயமாகவே பட்டது.

கிட்டப்பனுக்குக் கீரனூரில் பெண் பார்த்து முடித்தால் அந்தக் கிராமத் தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ளலாமே என்று நாச்சியப்பன் திட்டமிட்டான். இதனிடையே ஆலைத் தொழிலாளி மாரக்காள் மகள் குஞ்சாளைக் கிட்டப்பன் காதலித்தான். இதைத் தடுக்க நாச்சியப்பனும் பிறரும் முயன்றனர்

கிட்டப்பன், குஞ்சாளைத் திருமூர்த்தி மலைக்கு அழைத்துப் போய்த் திருமணம் செய்து கொள்கிறான்.

தொழில் நகரங்களின் வளச்சியால் கிராமங்களும், கிராமிய விழுமியங்களும் சிதைந்து போகும் அவலத்தைச் சொல்ல ஆசிரியர் முற்பட்டது பாராட்டுக்குரியது ஆனால், அந்த முயற்சியை இன்னும் விரிவாகச் செய்திருந்தால், சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தர்க்க ரீதியாகத் தொடுத்துக் கூறியிருந்தால் உண்மையாகவே இந்த நாவல் குறிப்பிடத்தக்கதாக வடிவெடுத்திருக்கும்.

மனநிழல்

1967-ம் ஆண்டில் 'மனநிழல்' என்ற மற்றொரு நாவலையும் படைத்தளித்தார் சண்முகசுந்தரம். இதுவும் கீரனூர்க் கதைதான்.

இந்த நாவலிலும் நகரம் கிராமத்தை நோக்கிப் படையெடுக்கிறது. சிலரது வாழ்வைச் சீரழித்து விடுகிறது?

'மனநிழல்' - கதைத் தலைவனின் கூற்றாக மொழியப்படும் கதை. ராஜா என்ற கீரனூர் இளைஞன், கோவையில் கல்லூரியில் படித்து வந்தான். முதியவரான அவன் தாயாருக்கு அனாதைச் சிறுமி குஞ்சாள் உதவி வந்தாள். முழுச் சுதந்தரத்தோடு இயங்கி வந்த அவளை, அவன் விரும்பினான். படிப்பு முடிந்து திருமணம் செய்யத் திட்டமிட்டிருந்தான்.

அவன் நகரத்தில் இருக்கும்போது, கீரனூரில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்து விடுகின்றன. கீரனூரில் குடியேறிய பெரிய பாப்பா என்ற நாடக நடிகை இந்தச் சின்னப் பெண்ணுக்கு ஆசைகள் காட்டித் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறாள். ஒரு கிழவருக்குத் திருமணமும் செய்து வைத்து விடுகிறாள். ஆனால், கிழவரின் பிள்ளைகள் அவரை மீட்டுப் போய் விடுகின்றனர்.

ஏமாற்றப்பட்ட குஞ்சாள், ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து விடுகிறாள். ஊர் திரும்பிய ராஜா துயரமடைகிறான். அவளின்றி வாழ்வில்லை என்ற நிலை அவனுக்கு ஏற்படுகின்றது. நண்பர்கள், அவள் நடிக்கும் நாடகத்துக்கு அழைத்துப் போகின்றனர். அவன், குஞ்சாளை அடையாளம் காண்கிறான். அவளைச் சந்திக்கப் போகும்போது, அவள் நஞ்சருந்தி இறந்து விடுகிறாள். தன்னை அவன் ஏற்கமாட்டான் என்று கருதி அவ்வாறு செய்கிறாள்.

அவன் 'மனநிழலாக', அவள் மாறிவிடுகிறாள்.

அருமையான கீரனூர்க் காட்சிகளையும், சிறுமி குஞ்சாளின் களங்கமற்ற விளையாட்டுக்களையும் சொல்லும்போது 'பழைய' நாவலாசிரியரைப் பார்க்க முடிகிறது.

ராஜா கீரனூருக்குள் நுழைகிற காட்சி, அதற்கு ஒரு எடுத்துக்காட்டு:

"'வா கண்ணு' இப்படி ஒரு வரவேற்பு. 'இப்பத்தா வாரயா சாமி' - இதொரு அன்பின் அழைப்பு. 'தம்பிக்கு நூறு ஆயுசு போ! காத்தாலே உன்னைப் பத்திப் பேசிக் கொண்டு இருந்தமப்பா..' - வாய் நிறையச் சிரித்து மகிழும் குரல்

'மாப்பிள்ளை - ம்...' - ஒரு அழுத்தத்துடன் எதிர்கொண்டு உவக்கும் நெஞ்சு..."

இத்தகைய அழகு ததும்பிய கிராமத்து ஓவியங்கள் இந்நாவலில் காட்சி தருகின்றன. நகரத்தால் பாதிக்கப்படாத ராஜா - அதன் பாதிப்புக்கு இரையான குஞ்சாள் இருவரின் நெகிழ வைக்கும் கதை 'மனநிழல்.'

ஆசையும் நேசமும்

'ஆசையும் நேசமும்' என்னும் நாவலையும் 1967-ல் எழுதித் தந்தார் ஆர். சண்முகசுந்தரம்

காடையூர் ராம பண்டாரத்தின் மகள் மீனாட்சி, படிக்க ஆசைப்படுகிறாள். அப்பா ஊரை விட்டு ஓடிப் போனதால், இட்லிக்கார ராமாயி வீட்டில் வளர்கிறாள். விஜயமங்கலம் தாத்தா படிக்க வைத்து மேல்படிப்புக்குக் கோவை நண்பர் மூலம் ஏற்பாடு செய்கிறார். சிறந்த பேச்சாளி ஆகிறாள் மீனாட்சி.

காடையூர்க் செல்வர் சூடக்காரரின் மகன் சேகர் அவளைக் காதலிக்கிறான். தனக்குக் கிடைத்த வானொலி வேலையையும் விட்டுத் தேர்தலில் நிற்கிறான். அவன் நிற்பதை அறியாமல், எதிர்த்து நிற்பவருக்குப் பிரசாரம் செய்ய ஒப்புக் கொள்கிறாள் மீனாட்சி. சேகர் தோல்வியடைகிறான். மீனாட்சியின் மீது கோபமும் கொள்கிறான்.

ஆசை தோல்வி காண்கிறது. நேசம் வெல்கிறது. அவர்கள் சமாதானம் அடைகின்றனர்

சண்முகசுந்தரம் படைத்த சாதாரணமான கதைகளில் ஒன்று இது.

மூன்று அழைப்புக்கள்

1969-ம் ஆண்டு மூன்று நாவல்களைப் படைத்தார் **மூன்று அழைப்புக்கள், வரவேற்பு, உதயதாரகை** என்பன அவை

கீரனூர் மாமாவால் தத்தெடுக்கப்பட்ட சாவித்திரியின் கதை முதல் நாவல். நன்கு படித்து வரும் அவளுக்கு அவளைக் கேளாமல் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. மனம் கசந்து வீட்டை விட்டு வெளியேறுகிறாள்

ஈரோட்டுத் தோழி கமலா வீட்டுக்குப் போகிறாள் அவள் கணவன் எல்லை மீறிப் பழகியபோது அங்கிருந்தும் வெளியேறுகிறாள்.

சென்னையில் தோழி சுலோசனா இல்லம் செல்கிறாள். என்ன காரணத்தாலோ சுலோசனா திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றதையும், அவள் கணவன் இதய நோயாளி என்பதையும் யாரும் சொல்லவில்லை. குடும்ப நண்பன் என்று கருதி அவனோடு பழகி வரும்போது உண்மை தெரியவருகிறது. அங்கிருந்தும் வெளியேறுகிறாள்.

பெருமாநல்லூர் பாலா வீட்டில் இருக்கும்போது தன் திருமணம் நின்றதால் மாமா காலமானதையும், அத்தை நோய்வாய்ப்பட்டதையும் அறிந்து கீரனூருக்கே திரும்புகிறாள் சாவித்திரி.

இது குறிப்பிட்டுக் கூறத்தக்க நாவலாக அமையவில்லை.

வரவேற்பு

அதே ஆண்டில் வெளிவந்த 'வரவேற்பு' என்ற நாவலில் மனித முரண்களின் மோதல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

சிவியார்பாளையம் வெங்காத்தா, வெங்கடாசலக் கவுண்டரின் தங்கை. பல்வேறு காரணங்களால் அவர்கள் மனம் வேறுபட்டிருந்தனர். தோட்டத்தில் வசித்த விதவை வெங்காத்தா, மகன் சாமியப்பனையும் மகள் தனலட்சுமியையும் படிக்க வைத்தாள். இதனிடையே வெங்காத்தாவின் கணவன் முன்பு தன்னிடம் வாங்கிய கடனுக்காக நடவடிக்கை எடுத்தார் வீரப்ப செட்டியார்.

யாரும் உதவாத நிலையில் முப்பாண்ட வலசு தேவண கவுண்டர் உதவ முன்வந்தார். தன் மகள் பூவாயாவை சாமியப்பனுக்குக் கொடுப்பது அவருடைய திட்டம்.

சாமியப்பன் சீர்திருத்த உள்ளமும் சேவை மனப்பான்மையும் கொண்ட காந்தியவாதி. அவனோ மாமன் வெங்கடாசலக் கவுண்டர் மகள் ருக்மணியைக் காதலித்தான். மகள் தனலட்சுமி திருமணத்தைத் தன்னிச்சையாகச் செய்து முடித்தாள் வெங்காத்தா. வெகுண்ட தேவண கவுண்டர், தம் உதவிகளை நிறுத்திக் கொண்டார்.

சாமியப்பன் - ருக்மணி காதலை வெங்காத்தா ஏற்கவில்லை. வெங்கடாசலக் கவுண்டர் ஏற்கவில்லை. அதன் விளைவாக ருக்மணியும் மறுப்புத் தெரிவித்து விட்டாள். இறுதியில் சாமியப்பன், தங்கை வீட்டிலிருந்து கொண்டு சமூகப் பணிகளைத் தொடர முடிவு செய்தான்.

தேசபக்தராக விளங்கிய சண்முகசுந்தரம் தம் கொள்கைகளைப் பாத்திரங்களின் மூலம் பெரிய அளவில் பிரசாரம் செய்ய முனையவில்லை. எனினும் இந்த நாவலிலும் 'உதய தாரகை' நாவலிலும் ஓரளவு கருத்துக்களைச் சொல்லும் பாத்திரங்களைப் படைத்திருக்கிறார். அப்போதும் கூட வெறும் பிரசாரமாகி விடாதபடி அவர் பார்த்துக் கொண்டார்.

ஒரு உயர்ந்த மனிதனுக்கு எப்படிப்பட்ட வரவேற்பு காத்திருக்கிறது என்பதையே 'வரவேற்பு' நாவல் வழியாக உணர்த்தினார்.

உதய தாரகை

ஏறத்தாழ ஆர். சண்முகசுந்தரத்தின் கடைசி நாவல் என்று கருதத்தக்கது 'உதய தாரகை' **(1969)**. இதுவும் கீரனூர் இலக்கியமே ஆகும். வலிமையின்றி மெலிந்த பல நாவல்கள் எழுதிய பின் இறுதியாக **1969**-ல் வெளிவந்த நாவல்களில் சிறப்புக்குரிய படைப்பாக 'உதய தாரகை'யைக் கருதலாம்.

1969-க்குப் பின் சொந்த நாவல்கள் எதுவும் சண்முக சுந்தரத்தால் எழுதப்படவில்லை. எனவே அவர் படைப்புத் திறன் மங்கிக் கொண்டிருந்த மாலைப் பொழுதில் 'உதய தாரகை' மின்னியது ஒரு வேடிக்கையான முரண்பாடே ஆகும்.

கதை சிறியதுதான். கீரனூரை விட்டுப் பத்து பதினைந்து ஆண்டுகள் முன்பு சென்று மேட்டூர் அணை கட்டும் பணியில் பங்கு வகித்து நிறை செல்வத்தோடு திரும்புகிறார் முத்து முதலியார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள் - பெயர் சீதா.

அவருடைய நண்பர் சாமியப்ப கவுண்டர்-தேவானை தம்பதிகளுக்கு பாலுசாமி என்ற மகன் இருந்தான். அவனுடைய அத்தை மயிலாத்தாள் அவளது கணவன் இரண்டாம் திருமணம் செய்த அதிர்ச்சியால் பிரமை பிடித்தவளாய்ப் போனாள். சாமியப்ப கவுண்டர் மகன் பாலுசாமியும், முதலியார் மகள் சீதாவும் கோவையில் படிக்கிறார்கள். ஒருவரை ஒருவர் நேசிக்கவும் செய்கிறார்கள்.

பாலுசாமி ஊர் மக்களைக் குறித்துக் கவலை கொண்டவன் எதிர்பாராவிதமாக சாமியப்ப கவுண்டரோடு இருந்த நெட்டைச் சாமியார் சூலூர் விமான நிலையத்துக்குத் தீ வைத்த வழக்கில் சிக்கியபோது, கவுண்டரையும் கைது செய்கின்றனர் பின்னர் விட்டு விடுகின்றனர் என்றாலும், மேல் படிப்புக்குச்

செல்லவிருந்த பாலு அத்திட்டத்தைக் கைவிடுகிறான். சீதா, சென்னை வருகிறாள். பாலு அவளிடம்,

> "நம்ம ஊர் சனங்கள் அப்பாவிகள்.. புழு பூச்சிகள் அவர்களோடேயே நான் இருந்து விடுகிறேன். எங்கும் வரவில்லை."

என்று கூறி வழி அனுப்புகிறான். காதல் காத்திருக்கிறது!

முத்து முதலியார் கதர் உடுத்தும் தேசப்பற்று மிக்கவராக வருவது போலவே, பாலுவும், "'வந்தே மாதரம்' என்ற சொல் காதில் விழும்போது வகுப்பறையில் என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லையே" என்கிறான். நாட்டுப்பற்றின் பிரதிநிதிகளாக இவர்கள் உலா வருகின்றார்கள். சுதந்தரப் போராட்ட அலை வீச்சுக்கள் இடையிடையே இந்த நாவலில் ஒலிக்கின்றன.

கீரனூர்ச் சித்திரங்கள்

இந்த நாவலின் தனிச்சிறப்பு கீரனூர்ச் சித்திரங்கள் தான். பஞ்சத்தின் அடையாளங்கள் ஆங்காங்கே வந்து போகின்றன. அப்பட்டமான கிராமத்து மக்களின் பேச்சும் நிகழ்வுகளும் நிரம்பிக் கிடக்கின்றன. வேறு எந்த நாவலையும் விட நகைச்சுவை வெள்ளமாய்ப் பொங்குகிறது.

கீரனூர் எத்தனை வருடமானாலும் மாறுவதில்லை என்பதைப் பின்வருமாறு சொல்லுகிறார் சண்முகசுந்தரம்:

> "ஐம்பது வருஷங்களுக்கு முன் இருந்தது போலத் தான் இன்றைக்கும் இருக்கிறது! வேண்டுமானால் கூரையும் சுவரும் மடிந்து புத்துருப் பெற்றிருக்கும். சில பழைய போர்வைக்கே புதுத் 'தைப்புக்கள்' போட்டிருக்கும்!"

அண்ணன் தம்பிக்குள் பேச்சு வார்த்தை இல்லாத நிலை பற்றி இரண்டு பெண்கள் பேசிக் கொள்கிறார்கள்.

> "'இப்ப அண்ணன் தம்பிக்குள் பேச்சு வார்த்தை இல்லையா?'
>
> 'ஒண்ணையும் காணமுங்க...'
>
> 'காணாட்டியும் மனசுக்குள் இருக்குமல்லோ?'
>
> 'நாங்க என்ன பூந்தோ பார்த்தோம்?'"

குபீரென்று சிரிக்க வைத்து விடுகிறது, கடைசி வரி. ஊரில் திருட்டு நடந்து விடுகிறது. பொன்னப்பன், ஒரு சாமியாரை விசாரிக்கிறான்:

> "'கஞ்சா வெறியிலே பணத்தை மாத்திரம் மறக்காம எடுத்து வச்சிருக்கிறியே...?'
>
> 'எந்தப் பணமுங்க?' என்றார் சாமியார்.
>
> 'உங்க பாட்டன் ஊட்டுப் பணம். இடுப்பில் என்னடா?' என்றான் அங்கமுத்து.
>
> 'அடடே, சாமியாரை அடாபுடா என்று பேசாதீங்க' என்றார் ஒரு பெரியவர்.
>
> 'இங்க எங்கத்த சாமியாருங்க? ஏண்டா நீ பெண்டாட்டியோடு சண்டை போட்டுக்கிட்டு ஓடிவந்தவன் தானே?' என்றான் ஆரப்பன்.
>
> 'வாழ்க்கை ரகசியம் எப்படியோ இவருக்குத் தெரிந்து விட்டதே' என்று சாமியார் நடுங்கிப் போனார். 'ஆமாங்க, அவ இமிசை பொறுக்கிலீங்க. ஓடியாந்திட்டேன்.' என்றார் சாமியார்."

இவ்வாறு நகைச்சுவை கமழக் கமழ எழுதிச் செல்லுகிறா சண்முகசுந்தரம்.

கொங்குத் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது இந்நாவலில். கிராமத்துப் பள்ளிக்கூடம், கள்ளுக்கடை, கோயில், பச்சை குத்துவோர் கூட்டம், ஆடு வெட்டும் அழகு, கூத்தாடிகள் நிலை, தின்பண்டங்கள், ஊருக்குள் ஆண்-பெண் உறவு, குடிகாரன் ஆட்டம், பிறகு அவன் வாங்கும் அடி, உதை என்று நிதானமாகக் கீரனூர்ச் சரித்திரத்தையே எழுதிவிடுகிறார் ஆசிரியர். 'உதய தாரகை'யின் தனி அழகாக இவையெல்லாம் நிற்கின்றன.

மேலே குறித்த நாவல்கள் அன்றி, 'எண்ணம் போல் வாழ்வு' **(1963)**, 'எதிர் வீட்டு ஜன்னல்' **(1964)**, 'தேன்மழை' **(1963)** ஆகிய படைப்புக்களையும் தந்திருக்கிறார் ஆர் சண்முகசுந்தரம் அவற்றைக் குறித்து அறிமுகம் செய்து எடுத்துக்கூற எதுவும் இல்லை.

சிறுகதைகள்

'வசந்தம்', 'மணிக்கொடி' இதழ்களில் சிறுகதைகளி...

பலவற்றைச் சண்முகசுந்தரம் எழுதியுள்ளார். உண்மையில் சிறுகதையிலிருந்து தான் நாவல் படைப்புக்குக் கு.ப.ரா. தூண்டுதலால் மாறினார் என்பதை முன்னர் பார்த்தோம். மணிக்கொடி இதழுக்குக் கதை அனுப்பிய கதையை அவரே தீபம் - இலக்கியச் சந்திப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்:

> "பாறையருகே என்ற அக்கதையைப் படித்துவிட்டு உதவி ஆசிரியராக இருந்த கி.ரா. அவர்கள் உடனே கடிதம் எழுதினார். அதில் 'கதை உங்கள் சொந்தக் கற்பனையா? அல்லது வேறு மொழியிலிருந்து மொழிபெயர்த்து அனுப்பியதா?' என்று கேட்டிருந்தார். 'என் கதைதான்' என்று பதில் எழுதினேன். அடுத்த இதழிலேயே அக்கதை பிரசுரமாயிற்று.

என்று விவரித்துள்ளார். **(தீபம் – அக்டோபர், 1970)**

இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் பதினாறு கதைகளை மட்டும் 'நந்தா விளக்கு' என்ற தொகுப்பாகப் புதுமலர் நிலையம் 1944-ல் வெளியிட்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள கதைகள் சண்முகசுந்தரத்தின் எழுத்தாற்றலுக்குக் கட்டியம் கூறுகின்றன. **(நந்தாவிளக்கு – புதுமலர் நிலைய வெளியீடு, 1944).**

'வெற்றி' என்னும் கதை நந்திவர்மன் அறம் பாடும் பாடல்களால் ஈர்க்கப்பட்ட நந்திக்கலம்பகக் கதையைக் கூறுகிறது. தன் தம்பியின் அருமையான பாடல்களுக்குப் பத்து சாம்ராஜ்யங்கள் இருந்தாலும் கொடுப்பேன் என்கிறான். பாடல் பெறும் வெற்றியைக் கதை எடுத்துரைக்கிறது.

வேதாசலம் என்ற வைத்தியனின் காதலி ஜோதி, அவன் மருத்துவத்தால் உயிர் பிழைத்த செய்தியைப் 'பிழைத்த ஜோதி' சொல்லுகிறது.

ஆர். சண்முகசுந்தரத்துக்கு இத்தொகுதியில் மிகவும் பிடித்த கதை 'தறிகாரன்' என்று சொல்லப்படுகிறது. வறுமை வாய்ப்பட்ட ஏழை நெசவாளியின் நெஞ்சின் அலைகள் இக்கதையில் படம் பிடிக்கப்பட்டுள்ளன. 'வாழ்க்கை வசதிகள் எல்லாம் யாருக்கு? மனிதனுக்காக? மிருகத்துக்கா? அப்படியானால் நான் மனிதன் அல்லவா?' என்று அலைபாயும்

சிந்தனையோடு தூங்கி விடுகிறார். 'அந்தத் தூக்கமும் இல்லாதிருந்தால்?' என்ற வினாவோடு கதை முடிகிறது.

பஸ்ஸில் அழுதுகொண்டே வரும் பெண்ணிடம் அனுதாபம் ஏற்படுகிறது. நண்பர் வீட்டுக்கு அழைத்துப் போகிறார் ஒரு சக பயணி. அங்கே அந்த நண்பர் அவளை அறிந்தவராக, 'உங்கள் சகோதரி ஆஸ்பத்திரியில்' என்று நிறுத்துகிறார். மூன்று மணிக்குச் சகோதரி காலமானதாகச் சொல்லி அழைத்துப் போகிறார் நண்பர். ஆனால், இவருக்கோ இச்சூழ்நிலையிலும் அப்பெண்ணை மறுபடியும் காணும் ஆசை எழுகிறது. இதனை 'ஒரு ஆசை' அழகாகக் கூறுகிறது.

'திரும்பிய உயிர்' மிக அழகான கதை. மாமனார் மகளுக்குப் பிரியமான காளையைப் பரிசாக 'மருமகன்' கருப்பணனுக்குத் தருகிறார். செல்லமாக வளர்ந்த காளையை விற்க வேண்டிய கட்டாயம். இரவெல்லாம் தூக்கமில்லை. அடுத்தநாள் கண்ணீரோடு நின்ற மனைவி 'விற்க வேண்டாம். தேவையான பணத்துக்கு என் மங்கிலியத்தை விற்று விடுங்கள்' என்று கூறுகிறாள். உருக்கம் ததும்புகிறது கதையில்.

முன்பு காதலித்த ஒருவன் தன் கணவனின் நண்பனாக வீட்டுக்குள் வந்தபோது ராதா அதிர்ந்தாள். அவனுக்கும் அப்படியே அதிர்ச்சி ஏற்பட்டது. அடுத்த நாளே அவன் விடை பெற்றபோது இருவர் கண்களிலும் கண்ணீர். நல்லவேளை, அவள் கணவனுக்கு ஏதும் தெரியவில்லை. 'பழைய நினைவு' கதையின் சாரம் இது.

'கல்லினுள் தேரை' என்ற சிறுகதை ஒரு பழைய நம்பிக்கையை - பாறைக்குள் தேரை இருக்கும் என்ற நம்பிக்கையை வைத்துப் பின்னப்பட்டதாகும்.

தன் மகளை நீண்ட பல ஆண்டுகள் கழித்துத் தேடி வந்த ஒரு பிச்சைக்காரன் அவள் குடிசையோடு எரிந்து போனதை அறிகிறான். இதனை உருக்கமாகச் சொல்கிறது 'அவன் தனி' என்ற கதை.

சோளக்காட்டை எருது அழித்ததே என்று கோபம் கொள்ளும் விவசாயி, அந்த எருதை மேய்த்த ஏழைப் பெண்ணின் அவலம் கண்டு மன்னித்து விடும் மனிதநேயத்தைக் கூறுகிறது 'மன்னிப்பு' என்ற கதை. தேடிய பையன் கிடைக்கவில்லை. கடைசியில் விபத்தில் சாக் கிடந்தவனைக்

கண்டுபிடித்தபோது, ஓர் இளம் புன்னகையோடு இவனைப் பார்த்துவிட்டுச் சாகிறான். 'ஏழைப் பையன்' கதையில் ஓர் ஏளனம் பொதிந்திருக்கின்றது.

ஊர் மணியகாரர் செட்டியாருடன் சேர்ந்து கொண்டு பல விவசாயிகளைச் சீரழித்தார். ஒருநாள் அவர் பூமியே ஏலத்துக்கு வந்தபோது, மாடு கட்டும் கயிற்றுடன் காணாமல் போனவர் தூக்குக் கயிற்றில் பிரேதமானதை 'ஓட்டமும் ஓய்வும்' கூறுகின்றது.

பேரழகி ஒருத்தியைக் காதலித்துப் பிரிந்தவன் மீண்டும் சந்திக்க வரும்போது அவளுக்குத் திருமணமாகி விடுகிறது. அவள் அவனோடு செல்ல மறுத்து விடுகிறாள். அவன் பைத்தியமாகி விடுகிறான். 'மன மயக்கம்' சொல்லும் கதை இது.

சகோதரர்களின் மண்ணாசை பொறாது அவர்களின் ஒரே தங்கை தற்கொலை செய்து கொள்வதை 'மண்ணாசை' கதை பேசுகின்றது.

தன் திருமணமான மகளை வசப்படுத்த முயலும் பண்ணாடி மகன் மீது கோபம் கொள்கிறான் வீராசாமி. ஆனால், அவன் குடும்பத்துக்கே தீமை செய்கிறார்கள் பண்ணாடி குடும்பத்தினர். ஏதோ ஒரு குடிகாரன் பண்ணாடியின் வைக்கோல் போரில் தீ வைக்க முனைகிறபோது, அதைத் தடுத்து தன் போரில் வைக்கிறான் வீராசாமி. 'தன் போர் நாசமானாலும் பரவாயில்லை. பண்ணாடி போர் நாசமாகாமல் தப்பியதே' என்று வீராசாமி கருதும் பெரிய மனதைப் 'போர்த் தீ' சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

'நந்தா விளக்கு' கதை, விளக்கு ஏற்றி வைக்கப்பட்டபோது மனதில் எழும் பல்வேறு கற்பனைகளைக் கூறுகிறது. 'பாறையருகில்' கதையில் வயதான ஒரு கிழவன் முன்பு, தன் காதலி தவறி விழுந்த ஆற்றங்கரைக்குத் திரும்பத் திரும்ப வருவதைச் சொல்கிறது.

'நந்தா விளக்கில்' வெளிவந்த கதைகள் இதுவரை முறையான மதிப்பீட்டுக்கு இலக்காகவில்லை

பிற துறைகள்

வானொலிக்காக நாடகங்கள் எழுதிய அனுபவம் 'புதுப்புனல்' என்னும் நாடக நூலை 1961-ல் உருவாக்கச் செய்தது

'கிராம ஊழியன்', 'வசந்தம்' இதழ்களில் சண்முகசுந்தரம் வசன கவிதைகள் எழுதியுள்ளதாகவும் தெரிகிறது

'நவசக்தி', 'சமுதாயம்' இதழ்களில் 'ஆலோலம்' என்ற புனைபெயரில் அரசியல் கட்டுரைகள் எழுதி இருக்கின்றார். அவற்றின் தொகுப்பு ஏதும் கிடைக்கவில்லை.

'கானல் நீர்' என்ற திரைப்படத்துக்கு உரையாடல் எழுதியுள்ளார் என்று டி.சி. ராமசாமி தம், **'ஆர். ஷண்முக சுந்தரத்தின் கொங்குமணம் கமழும் தமிழ் நாவல்கள்'** நூலில் தெரிவித்துள்ளார். (ப. 30)

பல்வேறு வகைப்பட்ட இலக்கிய வடிவங்களான சிறுகதை., நாவல், நாடகம், திரைப்படம், உரைக்கவிதை, கட்டுரை ஆகியவற்றில் எல்லாம் அவரது எழுதுகோல் இயங்கி இருக்கின்றது. ஆயினும் அவர் பெயரோடும், புகழோடும் 'வட்டார நாவல்' தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

□

8. மொழி பெயர்ப்புச் சாதனைகள்

மொழி பெயர்ப்புக் கலை

மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன் மொழி பெயர்ப்பைக் குறித்து ஒரு கவிதையில் எழுதியிருக்கிறார்:

"தண்ணீருக்கடியில் மீன் நீந்துவது போல்
மொழிபெயர்ப்பாளன்
மனங்களுக்குள் நீந்துகிறான்."

மொழி பெயர்ப்பு என்கிற கூடு விட்டுக் கூடு பாய்கிற வித்தை கைவர வேண்டுமானால் மிக முக்கியமாகத் தேவையானது மூலமொழியில் தேர்ச்சி. அதன்பின் அம்மொழியின் நுணுக்கங்கள் கைவரப் பெறுதல் வேண்டும். மொழியும் பயிற்சியும் தேர்ச்சியும் அவசியம் என்றாலும், எந்த ஆசிரியனை மொழி பெயர்க்க விரும்புகிறோமோ அந்த ஆசிரியன் படைப்புகளோடு நேசமும் நெருக்கமும் கொள்ளுதல் வேண்டும். அவனை அறிதலும் உணர்தலும் இல்லாமல் அவனுடைய படைப்பின் ஆழ, நீள, அகலங்களுக்குள் நுழைவது சாத்தியமில்லை.

பருந்தும் நிழலும் போல் மூலத்தோடு இசைந்து செல்கிற பக்குவம் இன்றியமையாதது. மூலத்தை அதன் ஆற்றலோடு பெயர்த்தெடுத்து வரும் மொழிபெயப்பாளன் எந்த மொழியை இலக்கு மொழியாகக் கொண்டிருக்கிறானோ, அந்த மொழியில் வல்லமைமிக்கவனாக இருத்தல் வேண்டும். சொற்களஞ்சியம் படைத்தவனாகவும், நடைநலம் வாய்ந்தவனாகவும் துலங்குதல் வளம் தருவதாக இருக்கும்.

இப்படி மொழி பெயர்ப்பாளனுடைய ஆயுத சாலை குறித்து அறிஞர்கள் பல நிலைகளிலிருந்து கருத்துரைத் துள்ளனர். இலக்கிய மொழிபெயர்ப்பாளன் பிறவகை மொழி பெயர்ப்பாளர்களைக் காட்டிலும் நுட்பங்களில் தேர்ந்தவனாக இருக்கவேண்டும். ஏனெனில் மொழியின் பேரொளிப் பிழம்பாக இலக்கியம் திகழ்கிறது.

சண்முகசுந்தரமும் மொழி பெயர்ப்பும்

ஆர். சண்முகசுந்தரத்தைப் பொறுத்தவரை அருமையான மொழி பெயர்ப்புக்கள் பலவற்றை அவர் செய்திருந்தும் மொழி பெயர்ப்புக்களின் விவாத மண்டபங்களில் அவருடைய பெயர் தேவையான தீவிரத்துடன் உச்சரிக்கப் படவில்லை என்பது குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய குறை ஆகும். கா.ஸ்ரீஸ்ரீ., த.நா. குமாரசாமி, சரஸ்வதி ராம்நாத் என்ற பெயர்கள் பேசப்பட்ட அளவுக்குச் சண்முகசுந்தரத்தின் வியத்தகு பணி விவாதிக்கப் படவில்லை.

அவருடைய மொழி பெயர்ப்புக்கள் பலவும் மறுபதிப்புக் காணாமல் போய்விட்டதால் இக்குறை ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. எனினும் கவனிப்புப் போதாது என்பதே உண்மை.

ஏறத்தாழ நூற்றிருபது நாவல்கள் அவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள என்பது மிகப் பெரிய சாதனையாகக் கருதத்தக்கது. **(தீபம் - அக்டோபர், 1970)**

மொழிபெயர்ப்புக் கலை குறித்து நல்ல தெளிவு சண்முகசுந்தரத்திற்கு இருந்தது. அதனால் அவர் இது குறித்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்:

> "என் அனுபவம் மட்டுமல்ல, மொழி பெயர்க்கும் ஒவ்வொருவரின் அனுபவமும் இந்தக் கலையில் சற்றுச் சிரமம் மிக்கதுதான். தமிழில் எழுதி விட்டால் மட்டும் அது தமிழாகிவிடாது. மொழி பெயர்ப்பும் ஆகிவிடாது."

என்று கூறும் சண்முகசுந்தரம் மொழி பெயர்ப்பின் வெற்றிக்குச் சில அடிப்படைகளை எடுத்துக் காட்டியுள்ளார்:

> "மூல ஆசிரியரின் உள்ளக்கிடக்கை இன்னதென இனம் காணும் பண்பு இன்றியமையாதது. மூல ஆசிரியரே மொழி பெயர்க்கப்படும் மொழியில் எழுதுவாரானால் எப்படி எழுதுவாரோ அப்படி எழுதவேண்டும் கூடிய அளவுக்கு இருமொழிப் பண்புகளையும், வாழ்க்கை, இலக்கிய மரபுகளையும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு நம்மொழி இடம் கொடுக்குமோ அந்த அளவுக்கு எழுதும் பக்குவம் வரவேண்டும்.

> முதலில் எழுதும் போதே தப்பும் தவறும் இல்லாமல், அடித்தல், திருத்தல் இன்றி எழுதும் பழக்கம் கைவரப் பெற்றால் தான் சிந்தனைப் போக்கில் ஒருமையும் ஒழுங்கும் உண்டாகும்."

இத்துணைத் தெளிவையும் தேக்கிக் கொண்டு தான் சண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பில் இறங்கியுள்ளார்.

மொழிப் புலமை குறித்து அவரே தெரிவித்திருக்கின்றார். நேரடியாக வங்கமொழி அவருக்குத் தெரியாது. ஆனால், உருது, இந்தி, பார்சி மொழிகளில் வல்லவராய் இருந்தார். சென்னையில் இளம்வயதில் தந்தையாருடன் தங்கி இருந்தபோது இந்தி மொழி கற்றுக்கொண்டார்.

> "பார்சீ, உருது இலக்கியங்களிலே அரிய பொக்கிஷங்கள் மண்டிக் கிடக்கின்றன என்று என் நண்பர்கள் சொன்னார்கள். அதற்காகவே உருது, பார்சீ மொழிகளைக் கற்றுக் கொண்டேன். ஒரு முஸ்லீம் பெரியார் முறைப்படி எனக்குச் சொல்லித் தந்தார். அதிலும் பார்சீ மொழியை அடிக்கடி பழக்கப்படுத்திக் கொள்ளாத காரணத்தால் கொஞ்சம் மறக்கிறது. ஆனால், உருதுவும் ஹிந்தியும் அப்படியல்ல."

என்று 1962-ல் எழுத்து இதழில் எழுதிய 'என்ன படிக்கிறேன்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கிற அளவுக்கு அவர் புலமைமிக்கவராகத் திகழ்ந்தார். ஒருவகையில் பன்மொழி வல்லுநராகச் சண்முகசுந்தரம் விளங்கியிருந்தமை மொழிபெயர்ப்புக் கலைக்குப் பெரிய பேறு ஆயிற்று.

மொழிபெயர்ப்புக் கலையின் தாக்கம்

இவ்வளவு எண்ணிக்கையில் மொழி பெயர்ப்புக்களை எழுதிக் குவித்திருக்கும் சண்முகசுந்தரத்துக்குப் பயனுள்ள தாக்கங்கள் அதனால் ஏற்பட்டுள்ளதாக அவரே தெரிவித்திருக் கின்றார். சொந்தமாக எழுதும் திறன் வளர்ந்திருந்தமையால் பாதகமான பாதிப்புகள் ஏற்படவில்லை. பிறமொழி இலக்கியங்களோடு ஏற்பட்ட இனிய உறவு குறித்து இலக்கியச் சந்திப்பு ஒன்றில் சண்முகசுந்தரம் மிக அருமையாகவும் பெருமையோடும் பேசி இருக்கின்றார்:

> "எவ்வளவோ அற்புதமான புத்தகங்கள் என் இதயக் கூரையில் மோதியிருக்கின்றன. இனிய இசை பாடியிருக்கின்றன. அவற்றின் கானம் இன்னமும் மெல்லியதாய் மிக இனியதாய் மனதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. சரத்சந்திரர், பங்கிம் சந்திரர், தாகூர், விபூதி பூஷண், தாரா சங்கர் போன்றோரின் வங்க நவீனங்களைப் படித்துப் படித்து இன்பமும் உற்றேன்." **(தீபம் – அக்டோபர், 1970)**

என்று தம் இலக்கிய அனுபவங்களைப் பகிர்ந்து கூறியுள்ளார். இந்த ஈடுபாடு ஏற்படாத ஒருவர் மொழிபெயர்ப்புக் கலையில் முத்திரை பதிப்பது இயலாது.

இந்திய இலக்கியத்தின் நிகரற்ற படைப்பாளிகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தபோது தாம் அறிந்துகொண்ட நுட்பங்கள் என்ன என்பதையும் சண்முகசுந்தரம் எடுத்துக் கூறியுள்ளார்:

> "சமூகத்தின் மீது வங்க நாவலாசிரியர்கள் வைத்திருக்கும் இறுக்கமான அன்பையும், உண்மையான அன்பையும் உணர்ந்தேன். அவர்கள் கலையைக் கலையாக மட்டும் கண்டவர்கள் அல்லர். மற்றவர்களைக் காட்டிலும் சரத்சந்திரர் என்னை நிரம்பக் கவர்ந்தவர். வங்கத்தின் இதயநாடி வங்க நாட்டுப்புறங்களில் தான் துடிக்கிறது என்ற உண்மையை அவருடைய ஒவ்வொரு எழுத்தும் ஒலித்தது. அதனால்தான் அவருடைய 'அசலா'வை முதன்முதலில் மொழி பெயர்த்தேன்————
>
> எதில் ஆழ முயற்சித்தாலும் சாதகமானதைத் தேடிக் கொள்வது மனித இயல்பல்லவா? அந்த விதத்தில் சரத்சந்திரரின் நவீனங்களை மொழி பெயர்த்த போது அவருடைய பாத்திர சிருஷ்டி என்னுள் பதிந்தது. அவரிடமிருந்து கற்றுக் கொண்ட கலை நுட்பங்கள் நான் புதிது புதிதாகச் சோதனைகள் நிகழ்த்த உதவின ஆனாலும், உண்மையில் நான் காணும் மக்களும், அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுமே என்னைப் பாதிப்பதாக உணர்கிறேன். இயல்பாக அவைகளையே அழியாக்

கோலங்களாக்க முயற்சித்து வருகிறேன்." **(தீபம் - அக்டோபர், 1970)**

மேற்குறித்த கருத்துக்களிலிருந்து சமூகத்தின் மீது பற்று, நாட்டுப்புற மக்களின் மீது காதல், சிறந்த பாத்திர படைப்பு, புதிய சோதனை முயற்சி ஆகியவற்றைத் தமக்குள் சண்முக சுந்தரம் வேரூன்ற வைத்துக் கொண்டார் என்பது தெளிவாகிறது. ஏற்கெனவே அவரிடம் கால் கொண்டிருந்த படைப்பாற்றல் செழுமை பெறக் கிரியா ஊக்கிகளாக மொழி பெயர்ப்புக்கள் பயன்பட்டுள்ளன.

மொழி பெயர்ப்பு நூல்கள்

1970-ல் நிகழ்ந்த தீபம் இலக்கியச் சந்திப்பின்போது, அவர் மொழி பெயர்த்த நூல்களின் எண்ணிக்கை நூற்றி இருபது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் முழுமையான பட்டியல் நமக்குக் கிடைக்கவில்லை.

சரத்சந்திரர், தாரா சங்கர் பானர்ஜி, விபூதி பூஷண், பங்கிம் சந்திரர், ரமேஷ் சந்திரர், அம்ருதாப்ரீதம், ஜேக்ஷாபர் முதலிய ஆசிரியர்களின் பல நூல்களை சண்முகசுந்தரம் மொழி பெயர்த்து அளித்துள்ளார். அநேகமாக அன்று தமிழ்நாட்டில் இருந்த எல்லாப் பதிப்பகங்கள் வழியாகவும் இந்த மொழி பெயர்ப்புக்கள் வெளிவந்துள்ளன.

சரத்சந்திரர்

சரத்சந்திரரின் 'அசலா' தான் அவர் மொழி பெயர்த்த முதல் நாவல் என்று அவரே குறிப்பிட்டிருக்கின்றார். சரத் சந்திரரின் எல்லா நாவல்களையுமே அவர் மொழி பெயர்த்திருக்கின்றார் என்றொரு குறிப்பைப் 'பழிக்குப் பழி' நாவலின் பதிப்புரை தெரிவிக்கின்றது.

> "இந்தியாவில் நாவல்துறைக்குப் புத்தழகும் புத்துயிரும் ஊட்டிய ஸ்ரீசரத்சந்திர சட்டர்ஜி அவர்களுக்குத் தனியான அறிமுகம் தேவையில்லை. நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல மொழிகளில் அவரது நூல்கள் மொழி பெயர்க்கப் பட்டு லட்சோப லட்சம் ரசிக மக்கள் ஏகமனதாகப் பாராட்டுவதிலிருந்தே சரத்தின் உயர்வு எத்தகைய தென்பது நன்கு விளங்கும். ஒவ்வொரு நாவலிலும்

ஒவ்வொரு அருமையான சுவையைச் சித்திரிப்பது ஸ்ரீசரத்சந்திரரின் அலாதியான சிறப்பு. நடமாடும் மனிதர்களை, ஆண்-பெண் இருபாலரது மன ஓட்டங்களையும், இயல்புகளையும் ஈடு இணையற்ற முறையில் அவர் கையாள்வது வழக்கம்."

என்று 'பழிக்குப் பழி' நாவலின் முன்னுரையில் தான் நேசித்த சரத்சந்திரரைப் போற்றுகின்றார் சண்முகசுந்தரம்.

அவர் மொழிபெயர்த்த சரத் சந்திரரின் நாவல்கள் சிலவற்றின் பெயர்களே நமக்குக் கிடைத்துள்ளன. அசலா, புதுமணப்பெண், பழிக்குப் பழி, அநுபமா, புயல் ஓய்ந்தது, பள்ளி நட்பு, தூய உள்ளம், சந்தியா, பைரவி, அமர்நாத், ரமா, புது வாழ்வு, உரிமைக்குரல், சந்திரநாத், வைகுந்தன் உயில், ஜமீன்தாரிணி, அன்பு உள்ளம், கால வெள்ளம், இருளில் ஒளி, விராஜகுமாரி, பார்வதி, ஞானரதா, ஹேமா ஆகிய பெயர்களையும், சில நூல்களையும் குறித்து அறிய முடிகிறது. இவற்றுள் "சந்திரநாத்" ஆனந்தவிகடனில் தொடர்கதையாக வெளிவந்துள்ளது என்றும், அப்போது கல்கி, அவ்விதழுக்கு ஆசிரியராய் இருந்தார் என்று டிசி. ராமசாமி குறிப்பிட்டுள்ளார். 'மொழி பெயர்த்தவர் சண்முகசுந்தரம்தான். படிக்கிறவர்களுக்கு மொழி பெயர்ப்பு என்ற உணர்ச்சி ஏற்படா வண்ணம் திறமையாகச் செய்கின்றவரே நல்ல மொழிபெயர்ப்பாசிரியர். சண்முகசுந்தரத்திற்கு அந்தக் கலை கைவந்திருக்கிறது.' என்று கல்கி பாராட்டியுள்ளார் என்பதையும் டி.சி. ராமசாமி தெரிவித்துள்ளார்.

தாரா சங்கர் பானர்ஜி

தாரா சங்கர் பானர்ஜியின் ராஜதாமரை, நிலத்தின் கீதம், தியாகி, ராதா, வைகறை, கவி ஆகிய நூல்கள் சண்முகசுந்தரத்தின் மொழிபெயர்ப்புப் பட்டியலில் இடம் பெற்றவை.

பங்கிம் சந்திரர்

பங்கிம் சந்திரரின் இனிப்பும் கசப்பும், ராஜசிம்மன், சீதாராமன் ஆகிய நாவல்களையும், ரமேஷ் சந்திரரின் மாதவி கங்கணம், மலர்ந்த உள்ளம் நாவல்களையும், உபேந்திரநாதரின் அமலாவையும், அம்ருதா ப்ரீதத்தின் பாடகி நாவலையும் அவர் மொழி பெயர்த்துள்ளதாக அறிகிறோம்.

ஆங்கில நூல் மொழிபெயர்ப்பு

ஆங்கிலத்திலிருந்து அவர் செய்துள்ள மொழிபெயர்ப்புக் களுள் ஜேக்ஷாபர் என்பாரின் முன்னோடிகள் **(The Pioneers)** நமக்குக் கிடைத்துள்ளது. சண்முகசுந்தரத்தின் மொழி பெயர்ப்புக்கள் திரட்டப்பட்டு அவை குறித்துத் தீவிரமாக ஆய்வு செய்யப்படவேண்டியது அவசியம்.

மொழி பெயர்ப்பு நுட்பம்

வெகு இயல்பாகவும் சரளமாகவும் அமைந்திருப்பது சண்முகசுந்தரத்தின் மொழிபெயர்ப்பு. 'பழிக்குப் பழி' நாவலில் ஒரு காட்சி:

> "சுரேந்திரன் சொந்த ஊருக்குப் போய் ஆறு மாதமாகி விட்டது. இதற்கிடையில் ஒரே ஒருதரம்தான் மாதவி, மனோரமாவுக்குக் கடிதம் எழுதினாள்.
>
> துர்க்கா பூஜைக்காகத் தன் தாய் வீடு வந்திருந்தாள். மனோரமா, மாதவியிடம் வந்து, 'உனது குரங்கைக் காட்டு...' என்றாள்.
>
> மாதவி சிரித்துக் கொண்டு, 'நான் குரங்கு வளர்க்கிறேனா?' என்றாள்.
>
> மனோரமா அவளுடைய முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு, 'உன் குரங்கைக் காண என் மனம் குதி போடுது' என்றாள்.
>
> 'எந்தக் குரங்கு...?'
>
> 'நீ வளர்த்து வருவதுதான்.'
>
> 'எப்போது..?'
>
> மனோரமா புன்முறுவலுடன், 'உன்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியாதா?' என்றாள்.
>
> மாதவி முதலிலேயே தெரிந்து கொண்டாள். இருந்தாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், 'ஓஹோ, அவரைப் பற்றிக் கேட்கிறாயா? அவர் தான் போய்விட்டாரே!' என்றாள்."

அன்னியத் தன்மை ஒரு சிறிதும் தட்டுப்படாதவாறு மிக நேர்த்தியாக மொழி பெயர்ப்பதில் வல்லவர் சண்முகசுந்தரம் என்பதை இவ்வெடுத்துக் காட்டால் உணரமுடியும்.

> "தாரா சங்கர் பானர்ஜியின் 'ராதா' நாவலுக்கு எழுதிய முன்னுரை மிகச் சிறப்பானது. தாரா சங்கர் பானர்ஜியின் வரலாற்றைத்... தெளிவாகத் தந்துள்ளார். 'தாரா சங்கர் பானர்ஜியின் படைப்புக்கள் ஒவ்வொன்றிலும் நவநவமான உலகங்களைக் காணலாம். உயிரும் உணர்ச்சியுமுள்ள நம்மோடு இணைந்திருக்கும் ஜீவ சித்திரங்கள் தான் ஆழ்ந்த அமைதி, பரந்த அறிவு, விரிந்த நோக்கம், அனுபவ உண்மை - இவையெல்லாம் கலந்து அம்மேதையின் கரங்களிலே விளையாடி மகத்தான சிருஷ்டிகளை உருவாக்குகின்றன' என்று மிக அழகாகத் தெரிவிக்கின்றார்" (க.நா. **சுப்பிரமணியம், இலக்கியச் சாதனையாளர்கள் – ப. 59)**

ஆங்கிலத்திலிருந்து வெகு இயற்கையாக மொழி பெயர்ப்பவர் என்பதை ஜேக்ஷாபரின் 'முன்னோடிகள்' மொழிபெயர்ப்பால் அறியலாம். ஜேக்ஷாபர் என்னும் அமெரிக்கச் சிறுகதை ஆசிரியரின் பதினொரு கதைகளை இந்நூலில் தந்துள்ளார். கதைகள் ஒவ்வொன்றும், 'பத்தரை மாற்றுத்தங்கம்' என்று அவரே முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மொழி பெயர்ப்புத் துறையில் சண்முகசுந்தரம் ஆற்றியுள்ள பணிகள் தமிழுக்குப் பெருவளம் தரும் சாதனைகள். அவர் மொழி பெயர்ப்பு ஆக்கங்களைத் தொகுப்பது இன்றியமையாத இலக்கியத் தொண்டாகும்.

□

9. படைப்புக் கலைஞர் சண்முகசுந்தரம்

தலை சிறந்த இலக்கியத் திறனாய்வாளரான க.நா.சுப்பிரமணியம் தெளிவாகவும் தீர்மானமாகவும் சொல்லியிருக்கும் கருத்து முக்கியமானது.

> "நாகம்மாள், அறுவடை, சட்டி சுட்டது போன்ற நாவல்களை எழுதிய சண்முகசுந்தரத்தை மறந்து விடுகிற தமிழர்கள் துரதிர்ஷ்டக்காரர்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது."

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தை வளமும் வனப்பும் உடையதாக உருமாற்றியவர்களில் சண்முகசுந்தரத்தின் பங்களிப்பு கணிசமானது.

முதல் ஏர்

இன்று தமிழ் இலக்கியத்தில் வட்டார இலக்கியம் ஒரு செழுமையான கூறாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. கி.ரா. முதல் பொன்னீலன் வரை இந்த வளவயலில் பாத்தி பிடித்து நாற்று நட்டு, தானிய மணிகளை அறுவடை செய்கிறார்களென்றால் அதற்கு முதல் ஏர்பிடித்த வலாற்றுச் சிறப்புமிக்க பெருமை ஆர். சண்முகசுந்தரத்துக்கு உண்டு.

> "என்னுடைய நாவல்களுக்கு நான் நேரில் கண்ட மனிதர்கள் தான் அடிப்படை. அவர்களுடைய வாழ்க்கையை, கதைக்கு ஏற்றவாறு வேண்டியதை எடுத்துக்கொள்கிறேன். பின்னர் மனதில் அசை போட்டுப் போட்டு வடிவம் கொடுத்த பிறகு எழுதுகிறேன் - இது என் வெற்றியின் ரகசியம்."

என்று தம் எழுத்துக்கலை குறித்து ஓர் உரையாடலில் (எழுத்து – மே, 1962) கருத்துத் தெரிவித்துள்ளார் சண்முகசுந்தரம்.

எதற்காக எழுதுகிறேன்?

'எதற்காக எழுதுகிறேன்?' என்ற இலக்கிய வட்டக்

கருத்தரங்கில் கட்டுரை படைத்த சண்முகசுந்தரம் தம் எழுத்தின் பின்புலம் என்ன என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றார்.

> "நான் பிறந்து வளர்ந்த கொங்கு நாட்டுக் கிராமத்தையும், அங்கு நான் பழகிய கிராம மக்களையும் உள்ளது உள்ளபடி எழுத்தில் சித்தரிப்பது என்ற பேரார்வம் எனக்குள் துளிர்த்தது. அந்த ஜனங்களின் விருப்பங்கள், துயர்கள், வேடிக்கை விமரிசைகளை வனப்புடன் தீட்டிவிடத் திட்டமிட்டேன். ஒவ்வொரு சிறிய காரியத்தையும் நுட்பமாகக் கவனித்தேன். கவனிப்பது என்ன? என் இதயத்தில் வீற்றிருந்த வடிவுகளுக்கு உயிர் கொடுத்தேன்."

இந்தப் புது நோக்கின் மலர்ச்சிதான் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு பூச்சொரிதலாக இன்று வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

கீரனூர்ப் பின்புலம்

சண்முகசுந்தரம் தம் நாவல்களின் களமாகத் தேர்வு செய்து கொண்டது தாம் பிறந்த கீரனூர் வட்டாரத்தைத்தான். அவருடைய நாவல்களில் எண்பது விழுக்காடு இந்த வட்டாரத்தைச் சுற்றியே வட்டமிடுகின்றது. கீரனூர், ஒரத்தப்பாளையம், சிவியார்பாளையம், வெங்கமேடு, தளாபாளையம், சாவடிப்பாளையம், ராசிபாளையம், சுள்ளிவலசு என்ற சின்னஞ்சிறு கிராமங்களையே திரும்பத் திரும்ப அவர் கதைகள் வலம் வருகின்றன.

இந்தக் கிராமங்கள் அப்படியென்ன ஆறுகளும், குளங்களும், மாந்தோப்பும் வயல்வெளியுமாக வளம் கொழிக்கக் கூடியவையா? அப்படியும் இல்லை! வறண்ட பூமி, வெப்பக் காற்று, புன்செய் விவசாயம் சோளம் போன்ற எளிய பயிர்களின் விளைச்சல், அடிக்கடி தாக்கும் பஞ்சம், பட்டினி - இந்த அடையாளங்களைக் கொண்ட வட்டாரத்தில் விடாப்பிடியாக வாழும் மனிதர்களையும் அவர்களுடைய எளிய வாழ்க்கையையும் இலக்கியத்துக்கு ஒரு பொருளாகக் கொண்டதில் தான் சண்முகசுந்தரத்தின் சிறப்பு அமைந்திருக்கிறது.

> "சண்முகசுந்தரம் கிராம வாழ்வின் ஒரு நேர்மையான சாட்சி இவருடைய அனுபவங்கள்

தீவிரமானவை. தீவிரம் என்பது ஏனெனில் முன் கூட்டி வகுத்துக் கொண்டிருக்கும் தத்துவங் களுக்கோ, கெட்டி தட்டிப் போன எண்ணங் களுக்கோ, அவல வெற்றி தேடித்தரும் பொருட்டுத் தம் அனுபவங்களின் சிறகுகளை ஒடிக்கும் கயமையின்றி, அவற்றை முழுமையாக முன் வைத்திருப்பதால்தான், அனுபவங்கள் அவற்றின் ஜீவ களையை, சத்தை அவர்முன் உமிழ்ந்து விடுவதால், அந்த அளவுக்கு அவருடைய அனுபவப் பதிவுகள் உயிரோட்டம் கொண்டிருப்பதால், அனுபவத்தின் ஜீவனுள்ள பகுதியையே கூறித் தாம் விரும்பும் விளைவை எளிதில் எழுப்புகிறார்." **(எழுத்து – ஆகஸ்ட், 1962)**

என்று சுந்தர ராமசாமி, சண்முகசுந்தரத்தின் நாவல்களில் துள்ளும் உயிர்த்துடிப்புக்கான காரணத்தைத் தொட்டுக் காட்டுகின்றார்.

கொங்கு வாழ்வியல் படப்பிடிப்பு

சண்முகசுந்தரத்தின் கிராமங்கள் கொங்கு நாட்டின் இதயத்துக்குள் பாதுகாப்பாக உள்ள நாட்டுப்புறத்தின் உயிர்ச் சிற்பங்கள்.

சித்திரிக்கப்பட்ட காலத்தில் புறவெளிச்சம் ஏதும் காணாதவை அவை. பல்வேறு இன மக்களும் ஒன்றுபட்டு வாழும் சாதிச் சச்சரவுகள் முற்றாத சூழலை அவை பிரதிபலிக்கின்றன.

பெரிய கனவுகள் ஏதுமின்றி, தமக்குள் தாமே நிறைவு காணும் மக்கள் இந்தக் கிராமங்களில் காட்சி தருகின்றனர். மனித உறவுகளில் ஏற்படும் மோதல் - ஒன்று நிலம் அல்லது மறுக்கப்படும் காதல் என்ற எளிய நேர்கோட்டிலேயே இயங்கக் காண்கிறோம்.

நகரங்களின் அலைமோதும் சிக்கல்கள் அணுகாத ஒரு 'பவித்திர'ச் சூழல் பெரிதும் காணப்படுகின்றது. மண்ணும் மனிதர்களும் இயற்கையும் கொங்கு வாழ்வியலின் எல்லா அழகுகளோடும் சண்முகசுந்தரத்தால் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

பாத்திரப் படைப்பு

தன் சுயத்தைக் காணும் முயற்சியில் அதிர்ச்சியைச் சந்திக்கும் 'நாகம்மாள்', அசல் கிராமத்துப் பெண்ணாக இருந்தும் துணிவோடு முடிவெடுக்கும் வேலாத்தாள் (சட்டி சுட்டது), இரண்டு பெண்களைக் காதலித்து இருவருக்கும் வாழ்வு தர முடியாமல் போன துரைசாமி (அழியாகக்கோலம்), காதலித்த பணிப்பெண்ணின் நினைவை 'மன்நிழலாய்' ஏந்தும் ராஜா, தன் ஒழுக்கத்தின் மீது சந்தேகம் படிவதை அறிந்ததும், நஞ்சருந்தும் முத்தாய, காதலை விளையாட்டாக்கி விட்ட காதலனைப் 'பளார்' என்று அறைந்து காறித் துப்பிய தேவானை (அறுவடை), இரவுகளைக் கிழக்கும் கொட்டாவியோடு, பாட்டும் பாடும் குப்ப மூப்பன், சூலூர் விமான நிலையத்துக்கு நெருப்பு வைக்கும் தேசபக்தர் நெட்டைச்சாமி - என்று இரத்தமும் சதையுமாக உலா வரும் நேசத்துக்குரிய பாத்திரங்களை நெஞ்சத்துக்கு நெருக்கமாக்கி விடுகிறார் சண்முகசுந்தரம். நகல்களை அல்ல, அசல்களைக் காணிக்கை வைத்தவர் சண்முகசுந்தரம்.

படைப்பாளியின் பயிற்சிக்களம்

எழுத்துக்கு இன்றியமையாத ஒன்று படிப்பு. கண்ணில் பட்டதையெல்லாம் படித்தார் சண்முகசுந்தரம். இது குறித்து அவரே பேசியிருக்கின்றார்:

> "புரிந்து கொள்ளும் பருவம் வந்ததும் நானாக அல்லி அரசாணி மாலையிலிருந்து அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துவரை படித்தேன். கவிதைகளிலே எனக்கு இயல்பான காதல். சங்க இலக்கியத்திலிருந்து தற்கால வெற்றுச் செய்யுள்கள் வரை ஒரு நோட்டம் விட்டிருக்கிறேன்"

இக்குறிப்பு மிகவும் முக்கியமானது. நவீன இலக்கியத்தில் பணி செய்யப் புறப்படும் ஒரு படைப்பாளி பெற வேண்டிய பயிற்சிக்களம் எது என்பது இதனால் புலனாகின்றது. குறிப்பாகப் பாரதியும், கம்பனும் சண்முகசுந்தரத்துக்குள் ஆளுமையை வளர்ப்பதற்கு மூலக்கனலாக விளங்கி இருக்கிறார்கள். எல்லா நாவல்களிலும் இந்த அடையாளத்தைப் பார்க்க முடியும்.

> "பொருளிலார் பொருள் சேர்த்தல் முதற்கடன்'
> (மாயத்தாகம்)

'நரை கூடிக் கிழப் பருவம் எய்தி (மாயத்தாகம்)

'சிறு வள்ளி' (மாயத்தாகம்)

'மனம் வெளுக்க மருந்து உண்டா?' (மாயத்தாகம்)

'ஆமாம். பிணிகளுக்கு மாற்றம் உண்டு என்கிறார்கள்.'

'பேதைமைக்கு மாற்றம் இருக்கிறதா என்று பார்க்கலாம்' (உதயதாரகை)

'தோற்ற மாற்றம்' (மனநிழல்)

'போற்றி போற்றி நின் பொன்னடிக்காயிரம் போற்றி!' (காணாச்சுனை)

இப்படிச் சொல்லிலும், பொருளிலும் பாரதி சண்முகசுந்தரத்திடம் தோழமை பூணுவதைக் காணமுடிகிறது. கம்பரும் இந்த எழுத்துக் கலைஞரோடு நெருக்கம் கொண்டிருப்பதாக உணரமுடிகிறது.

'இரணியன் தூணை உதைத்ததும், 'திசை திறந்து அண்டங்கீறிச் சிரித்தது செங்கட் சீயம்.' (மாயத்தாகம்)

என்று அவர் எழுதுவது இதற்கு எடுத்துக்காட்டு.

அவல மூலம்

சண்முகசுந்தரத்தின் நாவல்கள் அவலமுறும் பெண்களை நம் மன அரங்குக்குக் கொண்டு வருவதை முக்கிய இயல்பாகக் கொண்டிருக்கின்றன. நாகம்மாள் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. தன் உள்ளத்து உணர்வுகளை அவள் ஒரு முனைப்படுத்தும்போது தீராத சோகம் அவளைச் சூழ்ந்து கொள்கிறது. 'பனித்துளி'யில் வரும் முத்தாயாவை ஒரு சொல்லே மரணத்தின் விளிம்பு வரை இழுத்துப் போய்விடுகிறது. ஆசிரியரே இந்தப் பாத்திரத்துக்காக அழாக்குறையாகப் பேசுகிற ஒலி கேட்கிறது. 'அழியாக் கோலத்தில்' ஒரு நாயகியாக வரும் முத்தாயா தாங்க முடியாத உணர்ச்சிச் சுமையால் கிணற்றில் விழுந்து மாய்கிறாள். மற்றொரு நாயகியான நிர்மலா கட்டாயத் திருமணத்தால் கருகிப் போன காதற் சின்னமாகிறாள்.

டி.கே. துரைசாமி, இந்த அவலமே சண்முகசுந்தரத்தின்

எல்லாப் பாத்திரங்களுக்கும் பொதுவான பண்பெனக் கணிக்கின்றார். (எழுத்து – ஏப்ரல், 1966)

> "இவைகளில் (சண்முகசுந்தரம் நாவல்களில்) கோவை ஜில்லாவின் கிராமியச் சூழ்நிலை உயிர்த் துடிப்புடன் காட்சி அளிக்கிறது. இங்கு பாத்திரங்கள் கிராமவாசிகள். இவர்கள் சமூகத்தின் மாறுபட்ட நியதிகளால் இயக்கப்பட்டு எதிரிடும் கட்டங்களில் நாசமுறுகின்றனர். அவர்கள் லட்சியங்கள் பாழ்படுகின்றன. பாத்திர சிருஷ்டி ஆழமாகவும் நுண்மையாகவும் அமைந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால், இவர் காணும் வாழ்க்கையில் பாசங்கள் மனிதனை ஆட்டி வைக்கின்றன. சாவு வெற்றி பெற்றுக் கொக்கரிக்கிறது."

இந்த நுட்பமான பார்வையின் வெளிச்சத்தில் பிள்ளைகளோடு கருத்து மாறுபாடு கொள்ளும் சாமிக்கவுண்டர் முதல், 'அதுவா? இதுவா?' என்ற வினாவுக்குத் துணிவுடன் முடிவு காணும் அருக்காணி வரை அனைத்துப் பாத்திரங்களையும் அடையாளம் காணமுடியும்.

தலைமுறை இடைவெளி

தலைமுறை இடைவெளியின் சூறாவளியான தாக்கம் (சட்டி சுட்டது), சூழல் மாற்றத்தால் காதலியைப் பிரிந்து வாழ்க்கைக் களம் காணும் நிர்ப்பந்தம் (உதயதாரகை), பழைய உறவுகள் பொருளாதாரச் சிக்கல்களாகிக் கந்தலாய்க் கிழியும் வேதனை (மாயத்தாகம்), கிராமத்து ஒழுக்க வரம்பைக் காப்பதாகக் கருதிக் கொலைவெறிக்கு இலக்காகும் சோகம் (நாகம்மாள்), நிலம் கை மாறும் கோபத்தில் ஏற்படுத்தும் தீராப்பழி (பனித்துளி), கலை உலகக் கவர்ச்சிக்கு இரையாகிக் காதலைப் பலி கொடுத்து மரணத்தை வரவேற்கும் வீழ்ச்சி (மனநிழல்) என முரண்களின் மோதலை சண்முகசுந்தரத்தின் நாவல்கள் ஆரவாரமின்றிக் காட்சிக்கு வைக்கின்றன.

சமூக விமர்சனம்

அடங்காமல் எழும் சமூக விமர்சனம் சில வேளைகளில் கதையின் போக்கில் ஒரு விம்மலாக வெடித்து ஓய்வதையும் அவர் கதைகளில் காணமுடிகிறது. எஸ். தோதாத்ரி இதனைச் சுட்டிக்காட்டுகின்றார்.

"சண்முகசுந்தரம் உழைப்பாளி மக்களின் உணர்வைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

> வெங்கக்கா சொன்னாள்: 'நாங்க தெக்கே போகத் தடம் பார்த்துக்கிட்டு இருக்கிறோம். இந்த மாளாத வெயிலில் பாடுபடறதுக்கு நா சலிக்கிலே அக்கா... உன் மடியைக் காட்டுங்கோண்ணு பருத்தி கொட்டப் போறப்போ செல்லக்கா சொல்றா பாரு.... அதைக் கேக்கறப்போ நாணுகிட்டுச் சாகலாம்னு இருக்கு." **(தமிழ் நாவல் - சில அடிப்படைகள், ப. 68)**

இப்படி ஆங்காங்கே பொடி தூவினாற்போல சொல்லிப் போவது சண்முகசுந்தரத்தின் பண்பு.

கொங்குக் களஞ்சியம்

முன்பே குறிப்பிட்டுள்ளதைப் போன்று, கொங்குத் தமிழின் நயம்படு சொற்கள் பயன்படு கனிகள்போல் அவர் நடையில் அசைந்து குலுங்குகின்றன.

சாபூத்து (அமைதி)

தண்டுவன் (மணமாகா இளைஞன்)

தண்ணிக் கொட்டம் (குளியல் அறை)

ஆசாரம் (வீட்டின் ஒரு பகுதி)

செலவாந்தரம் (பழமொழி)

பொளுதோடு (சாயங்காலம்)

திப்புறு திப்புறுண்ணு (ஓடுவது பற்றிய ஒலிக்குறிப்பு)

பழமை (பேச்சு)

வளுசல் (மணமாகாத இளம்பருவப் பெண்/ஆண்)

வேய்க்கானம் (புத்திசாலித்தனம்)

அட்டாலி (பரண்)

வனக்கெழுடு (பழுத்த கிழவன்/கிழவி)

எடவாடு (தொடர்பு)

ஈசுரோச (மானம், வெட்கம்)

விருமித்தி (பிரமை)

பொட்டிலி (வேட்டு)

ஒரு விசுக்கா (ஒரு தடவை)

மிசிற மாட்டேன் (நகர மாட்டேன்)

ரக்கிரி (கீரை)

மூய்க்க (முடிக்க)

இப்படித் தொகுத்துக் கொண்டே போனால் சண்முகசுந்தரம் மொழியில் கூறுவதுபோல, அவற்றை 'மூய்க்க' முடியாது. கொங்குச் சொல்லகராதி ஒன்று உருவாக்கப் படுமானால் அதற்குச் சண்முகசுந்தரத்தின் நாவல்கள் நிதிக் களஞ்சியங்களாக உதவிபுரியும்.

தொடரும் தலைமுறை

வட்டார மொழியும், நடையும், வாழ்வியலும் வளைய வரும் ஆர். சண்முகசுந்ரதத்தின் படைப்புகளை மனதில் வாங்கிக் கொண்டு ஒரு புதிய தலைமுறை இன்று வலம் வருகிறது. அந்தத் தலைமுறைக்குக் கரிசல் இலக்கிய மூலவர் கி. ராஜநாராயணன், தலைமை தாங்குகின்றார். ஹெப்சிபா ஜேசுதாசன், நீல. பத்மாநாபன், ஆ. மாதவன், நாஞ்சில் நாடன், பொன்னீலன், பூமணி, தி. ஜானகிராமன், சா. கந்தசாமி, சின்னப்பபாரதி, பிரபஞ்சன், பா. செயப்பிகாசம் என வளரும் பரம்பரைக்குக் கால்கோள் இட்டவர் சண்முகசுந்தரம்.

பின் தலைமுறையினரோடு சண்முகசுந்தரத்தின் படைப்பு களை ஒப்பிடுவது பயன்மிக்கதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கி. ராஜநாராயணனின் கதைகளில் ஒருகாவிய மெருகு இழையும். சண்முகசுந்தரம் கதைகளில் அலங்கரிக்காத இயற்கை அழகு மிளிரும். முன்னவரிடம் வட்டார மொழி ஆதிக்கம் செய்யும். சண்முகசுந்தரத்திடம் வட்டார மொழி அடங்கி நடக்கும். ஒப்பீடு - ஒரு தனித்துறையாதலால் அதனை விரிந்த தளத்தில் மேற்கொள்வது நல்லது.

படைப்பாளிகளின் மனம் கவர்ந்தவர்

மனிதர்களையும், சமூகத்தையும் நேசித்து, இயற்கையை இதயத்தில் குடியிருத்திக் கொண்ட சண்முகசுந்தரம் ஒரு புதிய இலக்கியப் பாணியைத் தமிழுக்கு அறிமுகம் செய்ததால்

மட்டுமல்ல. மறுக்க முடியாத ஒரு மாயக் கவர்ச்சியால் திரும்பத் திரும்பப் படிக்கும்படி தூண்டுகின்றார். இந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டவர்கள் வரிசையில் தமிழ் இலக்கியத்தின் மகாரதர்களை எல்லாம் காணமுடியும்.

> "சண்முகசுந்தரத்தின் நாவல்களை அவை வெளிவர வெளிவரப் படித்ததுடன், பின்னர் கையில் கிடைக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் படிப்பது என்பது எனக்குப் பழக்கமாகிப் போய் விட்ட ஒரு காரியம். அவற்றில் சிலவற்றைப் படித்த நினைவு மறக்காமல் மீண்டும் படிக்கவேண்டும் என்ற தாகத்துடன் பல தடவைகள் தேடிப் பிடித்துப் படித்ததும் உண்டு." **('நாகம்மாள்' - முன்னுரை)**

என்று க.நா.சு. தெரிவிக்கின்றார்.

கு.ப.ரா.வால் தூண்டப்பட்டு நாவல் இலக்கியத்துக்குள் அடியெடுத்து வைத்த ஆர். சண்முகசுந்தரம் எளிதில் நிறைவு அடையாத படைப்புக் கலைஞர்களை எல்லாம் வசப்படுத்திய கலையாற்றலுக்கு உறைவிடமாக இருந்தார்.

சோதனைகள் வாழ்வில் குறுக்கிட்ட போதும், நம்பிக்கையை ஒரு நாளும் அவர் இழந்ததில்லை. இது குறித்து க.நா.சு. நினைவு கூர்ந்துள்ளார்.

> "வாழ்க்கைக்கு ஆதாரமான நம்பிக்கைகளை அவர் என்றுமே இழந்தது கிடையாது. உரிய காலத்தில் ரெயிலில் கிளம்ப முடியவில்லை என்றால், நாளைக்கு பிளேனில் போய்விடலாம் என்று சொல்லுவார். பணம் எங்கிருந்து வரும் என்று கவலைப்பட மாட்டார்.'' **(இலக்கியச் சாதனையாளர்கள், ப. 58)**

அதனால்தான் 'நந்தா விளக்'காக அவர் நினைவும், படைப்பும் சுடர்விட்டுக் கொண்டே இருக்கின்றன.

சண்முகசுந்தரத்தைக் குறித்து எழுதிய ஒரு சிறந்த கட்டுரையில், சுந்தர ராமசாமி அவரது அனுபவக் கூர்மையைப் பாராட்டுகின்றார் **(சுந்தர ராமசாமி கட்டுரைகள்)**. ஆனால் அதேசமயம்,

> "............ ஆசிரியரின் அனுபவங்கள் அவருக்கே உரித்தான வாழ்க்கைக் கண்ணோட்டத்திற்கு ஆளானது மூலம் வீச்சும் விரிவும் பெற்றுச் செழுமை அடைந்ததாகச் சொல்லமுடியாது."

என்று விமர்சித்துள்ளார். இக்கருத்து முற்றிலும் பொருந்தாது. சண்முகசுந்தரத்தின் கிராமங்களில் போய் சில நாட்கள் தங்குவதால் பெறும் அனுபவம் அல்ல அது. அந்தக் கிராமங்களின் அனைத்து இன்ப துன்பங்களிலும் பங்காளியாக இருந்து, உறவில் சிலிர்த்து, துயரில் கரைந்து, புழுதியில் திளைத்து, அந்தக் கிராமத்தின் இலை தழைகளை உண்டு, அந்தக் காற்றை உயிர்த்தாலன்றி அந்த அனுபவத்தைப் பெறமுடியாது. உயிரில் ஒன்றிய அனுபவங்களை மொழியில் சொல்கிற கலைத்திறம்தான் சண்முகசுந்தரம். அந்த வாழ்விலிருந்து போலியான தத்துவங்களை, பொய்முகங்களை முன் வைக்காதது தான் சண்முகசுந்தரத்தின் தனிச்சிறப்பு.

க.நா.சு.வைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போகிறபோது, அவர் வீட்டில் இல்லாவிட்டால் ஒரு வெற்றிலையைக் கதவில் செருகிவிட்டு வந்து விடுவாராம், வெற்றிலைப் பிரியரான சண்முகசுந்தரம்.

அந்தக் காலம் பறந்தோடி விட்டது. ஆனாலும் என்ன.... பச்சை நரம்போடும் சண்முகசுந்தரத்தின் இலக்கிய வெற்றிலைகள் இன்றும் ஒவ்வொரு வாசகனின் இதயக் கதவிலும் அடையாளமாகச் செருகி வைக்கப்பட்டிருக்கின்றன.

□

10. பின்னிணைப்புக்கள்

இணைப்பு - 1

ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்புகள்

1. நாகம்மாள் (1942), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.

2. பூவும் பிஞ்சும் (1944), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.

3. பனித்துளி (1945), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.

4. அறுவடை (1960), வேல் புத்தக நிலையம், சென்னை.

5. இதயதாகம் (1961), குயிலன் பதிப்பகம், சென்னை.

6. எண்ணம்போல் வாழ்வு (1963), பதிப்பு விவரம் தெரியவில்லை.

7. எதிர்வீட்டு ஜன்னல் (1963), பதிப்பு விவரம் தெரியவில்லை.

8. தேன்மழை (1963), பதிப்பு விவரம் தெரியவில்லை.

9. அழியாக்கோலம் (1965), இமயம் பதிப்பகம், நாகப்பட்டிணம்.

10. சட்டி சுட்டது (1965), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

11. காணாச்சுனை (1965), இமயம் பதிப்பகம், நாகப்பட்டிணம்.

12. மாலினி (1965), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

13. மாயத்தாகம் (1966), வாசகர் வட்டம், சென்னை.

14. அதுவா? இதுவா? (1966), இமயம் பதிப்பகம், நாகப்பட்டிணம்.

15. ஆசையும் நேசமும் (1967), வைரம் பதிப்பகம், சென்னை.

16. மனநிழல் (1967), வானதி பதிப்பகம், சென்னை.

17. தனி வழி (1967), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

18. வரவேற்பு (1969), வி. மாணிக்கம் கம்பெனி, சென்னை.

19. மூன்று அழைப்புக்கள் (1969), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

20. உதயதாரகை (1969), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

(பட்டியல் உதவி: டி.சி. ராமசாமி)

(குறிப்பு:

டாக்டர். மு. ஜான்சிராணி என்பாரின், ஆர். சண்முக சுந்தரத்தின் நாவல்கள்-ஓர் ஆய்வு (1983) சென்னைப் பல்கலைக்கழக ஆய்வேட்டில் எதிர்வீட்டு ஜன்னல், தேன்மழை விடுபட்டு புதுக்கிளை, மலர்கள் மலரவில்லை, புதுவாழ்வு என மூன்று பெயர்கள் இடம் பெற்றுள்ளன.)

இணைப்பு - 2

ஆர். சண்முகசுந்தரத்தின் மொழிபெயர்ப்புகள்

(மு. ஜான்சிராணி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த ஆர். சண்முகசுந்தரம்-ஓர் ஆய்வு (1983) நாவல்கள் முனைவர் பட்ட ஆய்வேட்டின் உதவியுடன் தொகுக்கப் பட்டது.)

சரத்சந்திரர்

புதுமணப் பெண் (1957), இன்ப நிலையம், சென்னை.
பழிக்குப் பழி (1959), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
அநுபமா (1959), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
புயல் ஓய்ந்தது (1959), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
பள்ளி நட்பு (1961), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
தூய உள்ளம் (1961), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
சந்தியா (1961), மெர்க்குரி புக் கம்பெனி, கோயம்புத்தூர்.
பைரவி (1961), இன்ப நிலையம், சென்னை.
அமர்நாத் (1965), வைரம் பதிப்பகம், சென்னை.
ரமா (?), இன்ப நிலையம், சென்னை.
புதுவாழ்வு (?), இன்ப நிலையம், சென்னை.
உரிமைக்குரல் (?), இன்ப நிலையம், சென்னை.
சந்திரநாத் (?), இன்ப நிலையம், சென்னை.
வைகுந்தன் உயிர் (?), இன்ப நிலையம், சென்னை.
ஜமீன்தாரிணி (?), இன்ப நிலையம், சென்னை.
அன்பு உள்ளம் (?), இன்ப நிலையம், சென்னை.
கால வெள்ளம் (?), இன்ப நிலையம், சென்னை.
இருளில் ஒளி (?), இன்ப நிலையம், சென்னை.
விராஜகுமாரி (?), இன்ப நிலையம், சென்னை.
பார்வதி (?), இன்ப நிலையம், சென்னை.
ஞானரதா (?), இன்ப நிலையம், சென்னை

ஹேமா (?), விவரம் தெரியவில்லை.
அசலா (?), முதலில் மொழி பெயர்த்தது என்பர்.

தாரா சங்கர் பானர்ஜி

ராஜதாமரை (1963), குயிலன் பதிப்பகம், சென்னை.
நிலத்தின் கீதம் (1963), குயிலன் பதிப்பகம், சென்னை.
தியாகி (1964), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.
ராதா (1966), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.
வைகறை (1966), புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்.
கவி (1964), இன்ப நிலையம், நாகை.

வனபூல் நாவல்

கண்ணோட்டம் (?), இன்ப நிலையம், சென்னை.

பங்கிம் சந்திரர்

இனிப்பும் கசப்பும் (1961), இன்ப நிலையம், சென்னை
ராஜசிம்மன் (1961), இன்ப நிலையம், சென்னை.
சீதாராமன் (1961), இன்ப நிலையம், சென்னை.

ரமேஷ் சந்திரதத்

மாதவி கங்கணம் (1961), இன்ப நிலையம், சென்னை.
மலர்ந்த உள்ளம் (1961), இன்ப நிலையம், சென்னை.

பிறமொழி பெயர்ப்புகள்

பாடகி - அம்ருதாப்ரீதம், இமயம், நாகை. ஆண்டு தெரியவில்லை.

அமலா - உபேந்திரநாத், இமயம், நாகை. ஆண்டு தெரியவில்லை

ஆங்கில மொழிபெயர்ப்பு

ஷேக்ஷ்பியர், முன்னோடிகள் **(The Pioneers)**. புதுமலர் பதிப்பகம், 1956.

இணைப்பு - 3

ஆர். சண்முகசுந்தரத்தின் பிற படைப்புகள்

சிறுகதைகள்

நந்தா விளக்கு (1944), புதுமலர் பதிப்பகம், கோயம்புத்தூர்.

நாடகம்

புதுப்புனல் (1961), புதுமலர் பதிப்பகம், கோயம்புத்தூர்.

திரைப்படம்

கானல் நீர், (ஆண்டு தெரியவில்லை).

அரசியல் கட்டுரைகள்

'நவசக்தி', 'சமுதாயம்' இதழ்களில் 'ஆலோலம்' என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

உதவிய நூல்கள்

க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1968.

சு. சண்முகசுந்தரம், தமிழில் வட்டார நாவல்கள், காவ்யா, பெங்களூர், 1991.

சிட்டி சிவபாதசுந்தரம், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், சி.எல். எஸ், சென்னை, 1977.

சுந்தர ராமசாமி, சுந்தர ராமசாமி கட்டுரைகள், க்ரியா, சென்னை, 1984.

க.நா. சுப்பிரமணியம், இலக்கியச் சாதனையாளர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.

டி.சி. ராமசாமி, ஆர். சண்முகசுந்தரத்தின் கொங்கு மணம் கமழும் நாவல்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1994.

எஸ். தோதாத்ரி, தமிழ் நாவல் அடிப்படைகள், அகரம், சிவகங்கை, 1980.

தமிழ் நாவல்கள், தமிழ்ப் புத்தகலாயம், சென்னை, 1966.

*

சு. அரங்கராசன், ஆர். சண்முகசுந்தரத்துடன் இலக்கியச் சந்திப்பு, தீபம் (அக்டோபர், 1970)

மற்றும், எழுத்து இதழ்கள்

ஆர். சண்முகசுந்தரத்தின் நாவல்கள்

சிறுகதைத் தொகுதி, மொழிபெயர்ப்பு நாவல்கள்

ஆர். சண்முகசுந்தரம் நாவல்கள் - ஓர் ஆய்வு கு. ஜான்சி ராணி, பி.எச்.டி. ஆய்வேடு (சென்னைப் பல்கலைக்கழகம்)- 1983.

உதவிய நண்பர்கள்

நாவலாசிரியர் சி.ஆர். ரவீந்திரன்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
பத்திரிகையாளர் டி.சி. ராமசாமி
பேராசிரியர் மஞ்சுளா கனகராஜ்

*

ஆர். சண்முகசுந்தரம் தமிழில் வட்டார நாவல்கள் என்ற வகைமையைத் தோற்றுவித்த முதல் படைப்பாளி. அவருடைய 'நாகம்மாள்' இவ்வகையில் தனித்தன்மை உடையது. கொங்கு வட்டாரக் கிராமங்களை அவற்றுக்கே உரிய இயல்பான அழகுகளோடும், மொழி நடையோடும் அறிமுகம் செய்தவர், ஆர். சண்முகசுந்தரம். அவருடைய அழியா இலக்கியக் கொடையை அறிமும் செய்கிறது இந்நூல்.

தமிழ் நவீன கவிதைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தவர் இந்நூலாசிரியர் **சிற்பி பாலசுப்பிரமணியம்**. பதினொரு கவிதைத் தொகுதிகளை அளித்துள்ள இக்கவிஞர் 'வானம்பாடி' இயக்கத்தை வழி நடத்தியவர். கட்டுரை, திறனாய்வு, மொழி பெயர்ப்பு எனப் பன்முகப் படைப்புத் திறன் கொண்ட சிற்பி, கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர். இனிய கருத்துச் செறிவு மிக்க நடையில் இந்நூலை எழுதி இருக்கிறார்.

R. Shanmugasundaram (Tamil) Rs. **25**.
ISBN 81-260-0992-6